# மயூரன்

த.நா.சுப்பிரமணியன்.

சி-க
Rs. 949




கலைமகள் வெளியீடு

இந்த நாவல் பழங் காலச் சரித்திரச் செய்தி ஒன்றை அடிப்படை யாகக் கொண்டு எழுந் தது. மல்யுத்தத்தில் தொடங்கும் இது கடைசி யில் மணத்தில் போய் முடிகிறது.

அந்தணச் சிறுவன் ஒருவன் ஒரு ஸாம்ராஜ் யத்தை எதிர்த்து நின்று வென்ற வரலாறு இதில் ரஸமாக அமைந்திருக் கிறது.

இடையிலே நூலிழை போல ஒரு காதல் நிகழ்ச்சி ஓடுகிறது. எவ் வளவோ தடைகளையும், கஷ்டமான சூழ்நிலையை யும் தாண்டி வெற்றி பெறும் இந்தக் காதலின் போக்கும் மனத்தைக் கனிவிக்கும் தன்மையது.

காதலையும் வீரத்தை யும் ஊடாகவும் பாவாக வும் கொண்டு ஆசிரியர் செய்துள்ள இந்தப் பட்டு நெசவு இன்பந் தரும் ஓர் அரிய நாவல்.

# மயூரன்

தி. நா. சுப்பிரமணியன்

DR. T. P. M. LIBRARY
MADURAI KA... UNIVERSITY

உரிமை பதிவு]

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை

[விலை ரூ. 2/-

முதற் பதிப்பு—நவம்பர், 1952

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS,
MADRAS.

# முன்னுரை

நம் நாட்டின் பழங்காலத்துச் சரித்திர நிகழ்ச்சி ஒன்றைச் சித்திரித்து எழுந்ததே இக்கதை.

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஸமஸ்த கர்நாடகத்தையும் கதம்ப அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களுக்கு வைஜயந்தி—இப்போது மைசூர் ராஜ்யத்தை ஒட்டிப் பம்பாய் ராஜ்யத்தின் வடகன்னடம் ஜில்லாவில் உள்ள பனவாஸே, அதாவது வனவாசி—என்பது தலைநகரமாக விளங்கியது. எண்டிசையும் புகழ் பரவ அவர்கள் குந்தள தேசத்திலே பத்துப் பன்னிரண்டு தலைமுறைகள் - சுமார் முந்நூறு ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கிறார்கள். அவர்களிலே ஒருவன் அசுவமேத யாகமும் செய்திருக்கிறான். வடநாட்டு மன்னர்களான குப்தர், வாகாடகர் ஆகியவர்களோடு அவர்கள் மணவினை போன்ற நெருங்கிய உறவும் பூண்டிருந்தார்கள். இது சம்பந்தமாக ஸம்ஸ்கிருத மகா கவியான காளிதாஸனும் தன்னுடைய அரசகுமாரனுக்குப் பெண்கேட்டுக் கதம்ப மன்னனிடம் தூது வந்திருக்கிறான்.

அவ்வளவு பெருமையும் புகழும் பெற்றிருந்த அவர்கள் என்றைக்குமே தனியரசாக விளங்கியதில்லை. காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வடக்கே விந்திய மலைமுதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள பரந்த நிலப்பரப்பை ஆண்டு வந்த பல்லவர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாக அரசு செலுத்தினார்கள். பல்லவர்களுடைய எல்லைக் காவலர்களாக அவர்கள் விளங்கினார்கள் என்றும் சொல்லலாம். அது மட்டுமா? அந்த வமிசத்து மன்னர்கள் பல்லவ சக்கரவர்த்தி

களால் முறைப்படி முடி சூட்டப்பெறும் உரிமையையும் பெற்றிருந்தார்கள்.

அந்தக் கதம்ப வமிசத்தை ஸ்தாபித்தவன் மயூரசர்மன் என்னும் பிராமணன்; வேதாத்தியயனம் செய்தவன்; அந்தக் காலத்திலே சர்வ கலாசாலையாக விளங்கிய காஞ்சீபுரத்துக் கடிகையிலே கல்வி பயின்றவன். அவன் எப்படி அரசை ஸ்தாபித்தான் என்பதை மைசூர் ராஜ்யத்திலே தாள குண்டா (ஸ்தான குண்டூர்) என்னும் இடத்தில் கிடைக்கும் கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது. அரசு ஏற்பட்ட எண்பதாம் ஆண்டிலே மயூரனுடைய கொள்பெயரன் காலத்தில் பொறிக்கப்பட்டது அக்கல்வெட்டு.

ஒரு காவியம்போல அழகிய நடையில் எழுதப்பெற்றுள்ள அந்த வடமொழிச் சாசனத்தை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கதையை எழுதியிருக்கிறேன்.

இதை எழுதி ஒரு மகா மகம் ஆகிறது. அப்போது இது 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தது.

இதே கதையை நான் இன்றைக்கு எழுதவேண்டுமானால், அதன் அமைப்பே முற்றும் வேறானதாக இருக்கும். ஆனால் கதை அன்றைக்கு எழுதியபடியே இப்போது தனிப் புத்தகமாக வெளிவருகிறது.

இதை முதலில் தங்கள் பத்திரிகையில் வெளியிட்ட 'ஹிந்துஸ்தானு'க்கும் இப்போது அழகான முறையில் தனிப் புத்தகமாக வெளியிடும் 'கலைமகள்' காரியாலயத்தாருக்கும் என் நன்றி.

தி. நா. சுப்பிரமணியன்

DR. T.V.S. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மல்யுத்தம் | 1 |
| 2. | பூர்வோத்தரம் | 10 |
| 3. | அரசன் அநுதாபம் | 22 |
| 4. | கடிகை வாழ்க்கை | 32 |
| 5. | மல் பயிற்சி | 45 |
| 6. | விஷ வித்து | 53 |
| 7. | வஜ்ரபோதி முனிவர் | 63 |
| 8. | நீர்க்குமிழி | 71 |
| 9. | யாகத்துக்கு இடையூறு | 80 |
| 10. | மயூரன் வெற்றி | 86 |
| 11. | வேந்த புண்ணில் | 92 |
| 12. | எய்தவன் இருக்க | 99 |
| 13. | தீர்மானம் | 104 |
| 14. | வனவாசம் | 108 |
| 15. | ரேவதியின் தவிப்பு | 112 |
| 16. | பெரும்பாணன் | 117 |
| 17. | பிரிவாற்ருமை | 122 |
| 18. | கன்னிப் போர் | 126 |
| 19. | மயூரன் முயற்சி | 131 |
| 20. | விபரீதப் போக்கு | 136 |
| 21. | சுழலும் சூழ்ச்சியும் | 141 |
| 22. | ரேவதியின் உள்ளம் | 147 |
| 23. | சமரஸ முயற்சி | 153 |
| 24. | பிரிந்தவர் கூடினுல் | 158 |
| 25. | முடிவு | 164 |

T.P.M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

# மயூரன்

## 1. மல்யுத்தம்

எங்கே பார்த்தாலும் ஒரே ஆரவாரம். வேடிக்கை பார்ப்பதற்காக அங்கே கூடியிருந்தவர்கள் சந்தோஷம் தாங்காமல் கூச்சலிட்டு ஆனந்தக் கூத்தாடினர்; அவர்களுடைய உற்சாக வெள்ளம் கரைகடந்து ஓடியது.

அவர்களின் உணர்ச்சிப் பெருக்குக்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அன்றைத்தினம் நடந்த போட்டி அடிக்கடி அவர்கள் கண்டு களித்து வந்த மற்ற மற்போர்களைப் போன்றதல்ல.

மல்யுத்தம் செய்துவந்த இருவருக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வு மலைக்கும் மடுவுக்குமாக இருந்தது. ஒருவன் ஆஜானுபாகு; திரண்டு உருண்ட கைகால்களை உடையவன். சுமார் முப்பத்தைந்து வயது தான் இருக்கும். தினந்தோறும் பெற்றுவந்த பயிற்சியால் அவனுடைய தசைகளெல்லாம் நன்றாக முறுக்கேறியிருந்தன. மற்றவனோ இளைஞன். சுமார் பதினெட்டு வயதே உள்ளவன். அவனுடைய சரீர அமைப்பும் கச்சலாகவே இருந்தது.

ஒருவன் மல்லக செட்டி; ஆந்திரதேசத்துப் பிஷ்டபுரத்து ஸம்ஸ்தானத்து மல்லன். பல இடங்களுக்குச் சென்று தன் சாமர்த்தியத்தை வெளிப்படுத்திப் பரிசுகளையும் விருதுகளையும் பெற்றவன். அவனுக்குச் சிஷ்யர்களும் பலர் இருந்தனர்.

மற்றவனோ கற்றுக்குட்டி; அது மட்டுமன்று; முறையான பயிற்சியும் பழக்கமும் இல்லாதவன்.

அவன் பிராமணச் சிறுவன்; வேதாத்தியயனம் செய்வதற்காக ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்தவன்.

இவ்விருவருக்கும் இடையே இருந்த வேற்றுமையே இந்தப் போட்டிக்கு ஒரு தனிப் பெருமையை அளித்தது. அது வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தவர்களுடைய உள்ளத்தைத் தூண்டி உணர்ச்சியைப் பெருக்கியது.

சமானமான இருவர் போட்டியிட்டால் அது சாதாரண நிகழ்ச்சியாகிவிடும். அவர்கள் காட்டும் கைவரிசையையும் திறமையையும் தவிரப் பார்ப்பவர் மனத்தைக் கவர்வதற்கு ஒன்றும் இராது.

ஆனால் முன்பின் அறியாத சிறுவன் ஒருவன் மல்வித்தையில் கடைத்தேறிய ஒருவனுடன் போட்டியிடத் தைரியமாக முன்வந்தான் என்றால் அது வியப்புக்கு உரியதே. அங்கே கூடியிருந்தவர்களுள் மல்யுத்தம் செய்வதில் பெயர்பெற்றவர்களும் நல்ல பயிற்சி வாய்ந்தவர்களும் பலர் இருந்தனர். அவர்களுள் ஒருவனாவது அந்த ஆந்திரப் பயில்வானுடன் மல்லாடுவதற்குத் தைரியமாக முன்வரவில்லை. அந்த நிலையில் அந்த இளைஞன் சிறிதும் அஞ்சாமல் தயாராகக் கிளம்பியதைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

பிராமணச் சிறுவன் தன் பொறுப்பை உணராதவனா? அதுவும் இல்லை. அவன் தன் நிலைமையைத் தீர ஆலோசித்துப் பார்த்தே அந்த முடிவுக்கு வந்தான்.

கனகதாச செட்டி ஒரு சிறந்த பயில்வான். அந்தக் கலையிலே பெரும் புகழும் பெற்றிருந்த பிரபலமான பரம்பரை ஒன்றில் பிறந்தவன். குரு சிஷ்ய முறையிலும் சிறந்த மல்லர்களின் வழித் தோன்றியவன். இளமைப் பருவத்திலேயே பரந்த கீர்த்தியையும் சம்பாதித்துவிட்டான்.

கலாமோகம் தாண்டவம் ஆடிய அந்தக் காலத்திலே அவனைப் போற்றி ஆதரிப்பவர்களுக்கும் குறைவு இல்

லாமல் இருந்தது. கனகதாசனைத் தன் ஆஸ்தானப் பயில்வானுகக் கொள்வதற்கு எந்த அரசாங்கமும் தயங்கவில்லை. அதுமட்டுமா? அவனைப் பல விதமான ஆசை வார்த்தைகளால் மயக்கித் தம் வசப்படுத்தவும் அவை ஒன்ருேடு ஒன்று போட்டியிட்டன. கடைசியாக அவன் பிஷ்டபுரத்து ஆஸ்தானப் பயில்வானுக அமர்ந்தான்.

இளமையிலேயே கலைத்திறமை ஏற்பட்டு அதிருஷ்டம் கூடிப் பெருமையும் ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு அகங்காரமும் கூடவே உண்டாகிவிடும். அதனை அகங்காரம் என்று இழிவாகக் கூறுவதற்கும் இல்லை. 'வித்தியா கர்வம்' என்ற தற்பெருமையை எந்தத் துறையிலும் மேம்பட்டு விளங்குபவரிடம் நாம் காண்கிருேம். அது மனித இயற்கை. கனகதாசன்மட்டும் அந்த விதிக்கு விலக்கானவனு?

பகட்டிலும் ஆடம்பரத்திலும் மோகங்கொண்ட அவன், தன் வாழ்க்கையையும் படாடோபமாகவே நடத்திவந்தான். அவன் அடிக்கடி பக்கத்து நாடுகளுக்குச் சென்று வருவான். அந்தக் காலங்களில் அவன் தன் சிஷ்யர்களின் கூட்டம் புடைசூழப் பல்லக்கேறிச் செல்வதே வழக்கம். அவர்களும் அவனுடைய புகழை எடுத்துக் கூறிப் 'பராக்' கொடுத்துக்கொண்டு போவர். 'தென்னுட்டு மல்லர்களின் தலைவன்' என்று பேரும் புகழும் பெற்ற அவனுக்குப் பிற ஸம்ஸ்தானங்களிலிருந்து வழங்கப்பெற்ற சம்மானங்களைப் பலரும் காண எடுத்துச் செல்வார்கள். ஏவலாளர்கள் பல்லக்கின் முன்னுல் பஞ்ச வாத்தியங்களை ஒலித்துக்கொண்டு கட்டியம் கூறியபடியே செல்லுவார்கள்.

பெரிய உருவம், கறுத்த நிறம், பரந்த மார்பு, திரண்ட தோள்கள், நெடிய உடல், அடர்ந்த மீசை, சிவந்த கண்கள், கம்பீரமான நடை - இவற்றுடன்

அவன் அளித்த தோற்றம் கண்டோர் மனத்திலே பீதியை உண்டாக்கியது. அதனால் பலரும் அஞ்சி அவனைக் கௌரவித்து அவனிடம் மரியாதையாக நடந்துகொண்டார்கள்.

தன்னைக்காட்டிலும் மல்வித்தையில் சிறந்தவனோ தனக்குச் சமம் என்று கூறக்கூடியவனோ உலகத்திலேயே இல்லை என்ற உணர்ச்சி அவன் மனத்தில் பலமாக வேரூன்றிவிட்டது. அது அவன் கர்வத்தையும் தூபம்போட்டுக் கிளப்பி அதிகமாக்கியது.

அதனால் அவன் தன் கௌரவத்தை நிலைநிறுத்தப் புதிய முறை ஒன்றைக் கைக்கொண்டான்.

அவன் எந்த ஊருக்குப் போனாலும் அங்கே உள்ளவர்கள் அவனைத் தலைசிறந்த பயில்வான் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்விதம் ஒப்புக்கொள்ளாதவர்கள் அவனுடன் மல்யுத்தம் செய்யவேண்டும். இதுவே அவன் ஏற்படுத்திய புதிய விதி. இதை அவன் கண்டிப்பாக அநுஷ்டித்து வந்தான். இதை நிறைவேற்றி வைப்பதில் அவனைக்காட்டிலும் அவனுடைய சிஷ்யர்களே பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

கனகதாசன் உண்மையிலேயே நல்ல திறமை வாய்ந்தவன். அவனுடன் கைகலந்து மல்யுத்தம் செய்து யாரும் வெற்றிகொள்ள முடியாது. அவனுடைய பிடிக்கு யாரும் தப்ப முடியாது. உடும்புப் பிடிபோன்ற அதனால் அவன் தன் எதிரியைச் சுலபமாகப் படுக்க வைத்துவிடுவான்.

அவனிடம் பயிற்சிபெற்ற சிஷ்யர்களும் அவனைப் போன்ற சாமர்த்தியம் வாய்ந்தவர்களே. அவர்களிலும் பலர் அநேக இடங்களில் சம்மானங்களைப் பெற்றிருந்தார்கள். சிஷ்யர்கள் தலையெடுக்க ஆரம்பித்தவுடன் கனகதாசன் தானே நேராக வாடியில் இறங்கி விளையாடும் பழக்கம் அதிகம் இல்லாமல் காலம் தள்ளிவந்தான்.

அவன் அப்போது காஞ்சீபுரம் வந்திருந்ததும் அவனுடைய திக்விஜய யாத்திரைகளுள் ஒன்ருகும். அவன் ஒரு ஸம்ஸ்தானத்து ஆஸ்தானப் பயில்வானுதலின் காஞ்சீபுரத்திலும் அவனுக்கு நல்ல மரியாதை கிடைத்தது.

ராஜகரத்தாரும் அவனைப் போற்றினர்கள். பல்லவ வமிசத்தார் சிறந்த கலாரசிகர்கள். வித்துவான்களை ஆதரிப்பதில் நிகரில்லாமல் விளங்கிய அவர்களுடைய சபையைப் புலவர்களும் கலைஞர்களும் அலங்கரித்து வந்ததில் அதிசயம் இல்லை. அவர்கள் தலைநகரமான காஞ்சீபுரம் அந்தக் காலத்தில் கலைமகள் அவதரித்துத் தாண்டவமாடும் நிருத்த மண்டபமாகவே ஒளி பெற்றுப் பிரகாசித்தது என்று கூறலாம்.

ராஜகரத்துச் சம்பிரதாயத்தையொட்டி மற்போர் விளையாட்டை விளக்கிக் காட்டும் வினிகை ஒன்று நடைபெற்றது.

சாயங்கால வேளை; இளந்தென்றல் மெதுவாக வீசிக்கொண் டிருந்தது. வெப்பந் தணிந்த மாலை வெயில் அங்கே கூடியிருந்தவர்களுக்கு மனோரம்மியமாக இருந்தது.

ராஜகரத்தார் நடத்தும் இத்தகைய வினிகைகளுக்கு ஏராளமான கூட்டம் கூடிவிடும். அந்த அந்தக் கலைகளில் சிறந்து விளங்குபவர்களே அவற்றின் பிரதான புருஷர்களாக இருப்பர். கனகதாசனின் கீர்த்தியைப் பல வழிகளாலும் அதற்கு முன்னரே கேட்டிருந்த நாட்டு மக்கள் பலர் அந்த மல்யுத்த வினிகையைக் கண்டு களிக்க வந்திருந்தனர்.

அரண்மனை முன்வாயில் முற்றத்தில் மல்விளையாட்டு நடக்க ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அந்த முற்றத்திலே மரச்சட்டங்களைக் கொண்டு ஒரு விசாலமான வாடியை அமைத்திருந்தார்கள். அந்த வாடிக்

குள்ளேதான் மல்விளையாட்டுகள் நடைபெறுவது வழக்கம்.

அரசரும் அரச குடும்பத்தைச் சார்ந்தோரும் மந்திரி முதலிய பிரதான உத்தியோகஸ்தர்களும் அரண்மனைப் பக்கத்திலிருந்து வேடிக்கை பார்ப்பார்கள். அரண்மனையில் இடம்பெறாத பிற அதிகாரிகளும் மல்வீரர் முதலானோரும் அரண்மனை வாயிலை அடுத்து வாடிக்குப் பக்கங்களில் அமர்ந்திருப்பர். குடிமக்களும் மற்றோரும் வாயிற்புறத்தே வெளியில் இருந்து பார்ப்பர்.

மல்விளையாட்டு ஆரம்பமாயிற்று. வழக்கப்படி கனகதாசனின் சிஷ்யர்கள் முதலில் விளையாட்டைத் தொடங்கினார்கள். இரண்டு இரண்டு பேர்களாக ஜதைபோட்டு விளையாடித் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

அவர்கள் விளையாடிய முறைகளும் அப்பியாசம் செய்து காண்பித்த பிடிகளும் பிரமிக்கத்தக்கனவாக இருந்தன. அவை அவர்களுடைய பெருமையை வெளிப்படுத்தியதோடு அவர்களுக்குக் குருவாக அமர்ந்திருந்த கனகதாசனுடைய சாமர்த்தியத்தையும் எடுத்துக் காட்டின.

சிஷ்யர்களுடைய முறை முடிந்து குருவின் முறை வந்தது. கனகதாசனும் அரசனது அநுமதியைப் பெற்று வாடிக்குள் இறங்கினான். அவனுடன் கூடவே பக்கத்துக்கு ஒருவராக அவனுடைய பிரிய சிஷ்யர்கள் இருவரும் வாடிக்குள் புகுந்தனர். அவர்கள் எப்போதும் கனகதாசனைச் சுற்றியே, அவனை விட்டுப் பிரியாமல் இருப்பர். செட்டியின் வெளிப்பகட்டுக்கு அவர்களே ஆதாரமானவர்கள்.

சல்லடம் அணிந்து பளபளவென்று ஜொலிக்கும் தங்கள் தலைவன் உடல் நன்றாகச் சோபிக்கவேண்டி, அவர்கள் அடிக்கடி முண்டாக் கொடுத்துத் தசைகளைப்

புரட்டிவிட்டு உரம் ஏற்றி வருவர். கலைகளின் ரகசியங்களும் கைஜாலங்களும் எப்போதும் பழக்கத்தி லேயே இருப்பதற்காக அவ்வப்போது அவனுடன் விளையாடவும் விளையாடுவார்கள்.

குருவும் சிஷ்யர்களும் சிறிது நேரம் விளையாடினார் கள். தங்கள் சாமர்த்தியத்தை நன்கு எடுத்துக்காட்டி னார்கள். அவற்றைக் கண்டு அங்கே கூடியிருந்தவர்கள் பிரமித்தனர்.

அதற்குப் பிறகே கனகதாசன் அங்கே கூடியிருந்த வர்களைத் தன்னுடன் விளையாட முன்வரும்படி அறை கூவி அழைத்தான்.

"தென்னாட்டு மல்லர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் எங்கள் குருவாகிய கனகதாசருடன் போட்டி யிட்டு விளையாடி அவரை வெற்றிகொள்ளும் திறமை யும் தைரியமும் உள்ளவர்கள் முன்வந்து அவருடன் விளையாடலாம். தோற்றவர் தம்முடைய பரிசுகளையும் விருதுகளையும் இழந்து வெற்றி கொண்டவரிடம் அவற் றைக் காணிக்கையாகச் செலுத்தி அவருடைய சிஷ்ய ராதல் வேண்டும். இந்த ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு யார் வேண்டுமானாலும் அவருடன் விளையாட வரலாம். அவ்விதம் முன்வர விருப்பம் இல்லாதவர்கள் அவ ருடைய திறமையைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுபவர் ஆவார்கள்."

இந்த அறைகூவலைக் கனகதாசனுடைய அந்தரங்க சிஷ்யர்களுள் ஒருவன் விடுத்தான். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பயில்வானே தன் பெருமையைப் பறைசாற்றிக்கொள்வது ரசிக்காதல்லவா? சிஷ்யர் களையோ வேறு தனக்கு வேண்டியவர்களையோ கொண்டு பிரகாசப்படுத்திக்கொள்வதே அழகு.

காஞ்சிபுரத்துப் பயில்வான்கள் கனகதாசனைப்பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தார்கள். அவன் முரடன்;

விடாமுண்டன்: தன்னுடைய இரும்புக் கைகளிடையே அகப்பட்டவர்களை அவன் அநாயாசமாகக் கசக்கிப் பிழிந்துவிடுவான். அவனுடைய உடும்புப் பிடியில் அகப் பட்டு அவதிப்பட அவர்களுள் ஒருவரும் இஷ்டப்பட வில்லை.

"எங்கிருந்தோ இன்றைக்குத் தலைவலி வந்துவிட் டது எனக்கு. இல்லாவிட்டால் அவனை ஒரு கை பார்ப்பேன்" என்றான் ஒருவன்.

"சென்ற இரண்டு மாதகாலமாகப் படுத்த படுக்கை யாகக் கிடந்து போன வாரந்தான் தலைக்கு ஜலம் விட் டுக்கொண்டேன். இன்னும் ஆறு மாத காலத்துக்கு மல்விளையாட்டே கூடாது என்று கூறியிருக்கிறார் வைத்தியர். என்ன செய்வது?" என்று தன் நிர்க்கதி யான நிலைமையைக் குறித்து அங்கலாய்த்துக்கொண் டான் மற்றொருவன்.

அங்கே கூடியிருந்த பயில்வான்களுள் மற்றை யோரும் இவ்விதமே ஒவ்வொரு விதமான காரணத் தைக் கூறித் தங்கள் கௌரவத்தையும் மதிப்பையும் இழக்காமல் தப்ப முயன்றுவந்தனர்.

இத்தகைய சாக்குப் போக்குகள் எல்லாம் கனக தாசனுடன் போட்டிபோடுவதால் தங்களுக்கு நேரிடக் கூடிய அவமானத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற் காக அவரவர்கள் சிருஷ்டித்த காரணங்களே. உண்மை யில் அவர்களுக்கு எவ்விதமான தேக அசௌகரியமும் இருக்கவில்லை. மனச்சாந்தியே குலைந்திருந்தது.

கனகதாசன் சிறிது நேரம் பல்லவதேசத்துப் பயில்வான்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒருவரும் முன்வரவில்லை.

ஒரு நாழிகைப் பொழுது கழிந்தது. எவ்வளவு நேரம் காத்திருப்பது? சிஷ்யன் அந்த அறைகூவலை மறுபடியும் விடுத்தான்.

அதற்கும் அதே கதிதான் ஏற்பட்டது. நாழிகை ஏற ஏறக் கனகதாசனுடைய கர்வமும் அதிகரித்தது. ஒருவரும் முன்வராமையைக் கண்ட அவன் துணிச்சல் முன்னிலும் பன்மடங்காகப் பெருகியது. அதே போல அங்கே கூடியிருந்தவர்களிடையே தைரியமும் சிறிது சிறிதாகக் குறைந்துவந்தது. தாங்கள் ஏதாவது முயன்று பார்க்கலாமா என்று எண்ணிய சிலரும் பிரபல மல்லர்கள் பின்னடைவதைக் கண்டு மனக் கலக்கம் கொண்டனர். அதனல் அவர்களும் தலைகுனிந்து மௌனமாக உட்கார்ந்துவிட்டனர்.

கனகதாசன் பொறுமையை இழந்தான். எவ்வளவு நேரம் பொழுதை வீணக்குவது? ஆத்திரத்துடன் கடைசியில் எழுந்து மறுபடியும் அறைகூவினன்.

“இவ்வளவு பெரிய சபையில் இந்த அறைகூவலை ஏற்று என்னுடன் விளையாடுவதற்கான தைரியம் கொண்ட வீரர்கள் யாரும் இல்லையா? சம யோக்கி யதையுள்ள வீரர் ஒருவரும் இல்லாவிட்டால் நாங் களே விளையாட்டை ஒருவிதமாக முடித்துவிடலாமா?”

இதைக் கேட்க உண்மை வீரன் எவன்தான் மனம் பொறுப்பான்? இதனலேயே மயூரன் மல்யுத்தம் செய்வதற்காக வாடியுள் இறங்கினன்.

## 2. பூர்வோத்தரம்

சிஷ்யர்கள் பலரைக் கொண்டு ஒரு ஸம்ஸ்தானத்தின் ஆஸ்தானப் பயில்வானாக விளங்கும் கனகதாசன் முன்பின் அறியாத ஒரு கற்றுக்குட்டியுடன் விளையாடுவானா? அது அவன் கெளரவத்துக்கு இழுக்காகாதா?

அவன் பல்லவ சாம்ராஜ்யத்தின் ஆஸ்தானப் பயில்வான்களுள் யாராவது முன்வருவார்கள் என்றே எதிர்பார்த்தான். அப்படி வருபவனைத் தோற்கடித்தால் அவனுடைய மதிப்பு இன்னும் அதிகமாக உயரும். ஆனால் அவர்களுள் ஒருவனும் துணிந்து முன்வரவில்லை. அவர்களுக்குப் பதிலாக வந்த இளைஞன் தன்னுடன் விளையாடுவதற்குத் தக்க யோக்கியதையும் உரிமையும் கொண்டவனாகவே இருத்தல் வேண்டும் என்றே கருதினான் அவன்.

"இந்த இளைஞனுடைய யோக்கியதாம்சங்களை விசாரித்து இவன் நம்முடன் விளையாடுவதற்கு உரிமையுள்ளவனா என்பதை முதலில் நிச்சயிக்க வேண்டும்" என்று கூறிவிட்டுக் கனகதாச செட்டி தன் ஆசனத்தை அடைந்துவிட்டான். அது நிச்சயம் ஆகும்வரையில் அவன் மயூரனுடன் விளையாட ஒருப்படவில்லை.

அரங்கத்தின் மத்தியிலே மயூரனைப் பார்த்த பிறகு தான் பல்லவ சாம்ராஜ்யத்தின் பயில்வான்களுக்கு உயிர் வந்தது என்றே சொல்லலாம். அதுவரையில் சவம்போல் வெளுத்திருந்த அவர்கள் முகம் சிறிது ஜீவகளை பெற்றுப் பிரகாசிக்க ஆரம்பித்தது.

வந்த இளைஞன் ஆந்திரப் பயில்வானுடன் போட்டி போட்டு வெற்றிகொள்வானா என்பதைப்பற்றி அவர்கள் கவலைகொள்ளவில்லை. அவனது தோற்றத்தைக்

கொண்டு அவன் நிச்சயமாக முதல் பிடியிலேயே வீழ்ந்துவிடுவான் என்றுதான் அவர்கள் முடிவுகட்டி ஞர்கள். எவ்வாருயினும் அந்த இளைஞனுடைய தைரியம் கனகதாசனது கர்வத்தைக் குலைத்துவிட்டதன்ருே? அது ஒன்றே அவர்களுக்குப் போதுமானது.

மயூரசர்மன் தோல்வியடைவதால் அவர்களுக்கு ஒன்றும் அவமானம் ஏற்படப் போவதில்லை. அவன் என்ன புகழ்பெற்ற ஆஸ்தானப் பயில்வாஞ? யாரோ கற்றுக்குட்டி.

ஒருவேளை அவன் ஏதோ தெய்வ சங்கல்பத்தால் வெற்றிகொண்டாஞகில் அந்தப் பெருமையை அவர்களும் பங்கிட்டுக்கொள்ள முடியும். கனகதாசன் காஞ்சிபுரத்திலே தோல்வியடைந்தான் என்றுதானே உலகம் சொல்லும்?

இதனுல் அதுகாறும் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த அவர்களுள் இரண்டொருவர் மெதுவாக எழுந்திருந்து வாடியுள் நுழைந்தனர். ஆம், அந்த இளைஞனைத் தட்டிக்கொடுத்து அவனுடைய பூர்வோத்தரங்களை அறிவதற்கும் ரகசியமாக அவனுக்கு ஊக்கம் அளித்துத் தைரியம் ஊட்டுவதற்குமே அவர்கள் வந்தார்கள்.

ஆனுல் மயூரனுக்கோ தன் பூர்வோத்தரத்தைப் பற்றி என்ன சொல்வதென்பது விளங்கவில்லை. இவ்வளவு கீர்த்தி பெற்ற ஆஸ்தானப் பயில்வானுடன் விளையாடுவதற்கு ஏற்ற பழம்பெருமை அவனுக்கு ஏது? அவன் ஓர் அநாதை; நாடோடி. எனினும் அத்தகைய நிலையே அவனுக்கு நல்ல பயிற்சியை அளித்திருந்தது.

அவன் தன் இளம்பருவத்தில் கட்டுக்காவல் இன்றி யதேச்சையாகத் திரிந்து சுதந்தர வாழ்க்கையை நடத்திவந்தான். வேளை வேளைக்கு வந்து அவன் சோற்றைத் தின்றுவிட்டுப் போய்விடவேண்டும். அது

ஒன்றே அவனைக் கட்டுப்படுத்தியது. உரிய சமயத்தில் அவன் வராவிட்டால் அன்றைத்தினம் அவன் பட்டினி தான் கிடக்கவேண்டும். அவன் வயிறு வாடுகிறதே என்று கவலைப்பட்டு அவனுக்காகக் காத்திருந்து அவன் எங்கேயாவது திரிந்துவிட்டு வரும்போது சோறு போட யார் இருந்தார்கள்?

அவன் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்துவிட்டான். அப்பால் எட்டின உறவினர் ஒருவர் - கிருஷ்ணசர்மா - அநாதைக் குழந்தையான அவனை எடுத்து வளர்த்துவந்தார். அவருக்குக் குடும்பம் பெரிது; ஏழெட்டுக் குழந்தைகள்; நோயாளியான மனைவி; அதனால் வீட்டிலே குடும்பத் தொல்லைகள் சதா குமுறிக்கொண்டே யிருக்கும்.

'சோற்றோடு சோறு; இந்தச் சிறு பையன் ஒருவன் உண்ணுவதால் ஒன்றும் குறைந்துவிடாது' என்று நினைத்தே அவர் மயூரனைத் தம் வீட்டுக்கு அழைத்து வந்தார். எனினும் அவருடைய குடும்பத்தின் பொருளாதார நிலையைக் கவனித்துப்பார்த்தால் அதுவும் அவருக்கு ஒரு பெரிய பாரம் என்பது விளங்கும்.

அவருக்குப் பூர்விகமான பூஸ்திதி ஒன்றும் அதிகமாக இல்லை. ஏதோ இருந்ததைக்கொண்டு கஞ்சியோ கூழோ குடித்து மானமாகக் காலந்தள்ளிவந்தார். மயூரன் அவர் குடும்பத்துள் ஒருவனாக வந்து சேர்ந்த பிறகு அது முடியாததாக ஆயிற்று.

அவன் எப்போதுமே அடங்காப் பிடாரி; அடி, குத்து, உதை ஒன்றுக்கும் அசைந்துகொடுக்கமாட்டான். அவை அவன் உடம்பில் உறைத்தனவோ என்பதும் சந்தேகந்தான். தாய் தந்தையர் அற்ற அநாதை என்று ஆனதிலிருந்து அவனது மூர்க்கத்தனம் இன்னும் அதிகமாகியது. அவனைக் கண்டிக்க யாருக்குத்தான் மனம் வரும்? 'ஏதோ அறியாப் பருவம்; இரண்டுங்

கெட்டான். நாளைக்கு வயதுவந்தால் எல்லாம் சரியாகி விடும்' என்று எல்லாரும் எண்ணி ஒதுங்கிப் போய் விடுவார்கள்.

"இன்றைக்குச் சாறும் சோறுந்தானே? யார் சாப்பிடுவார்கள் இதை?" என்று கூச்சல் போடுவான் ஒரு நாள். அன்றைக்கு அவன் சரியாக உண்ணமாட்டான். சோற்றை வாரி இறைத்துக் கூத்தடித்துவிட்டு எழுந்துவிடுவான்.

மற்றொரு நாள் அகால வேளையில், பகல் இருபது நாழிகைக்கு மேல், சோற்றுக்கு வருவான். அப்போது எல்லாம் ஆறி அவலாகப் போயிருக்கும். மறுபடியும் பழைய கூத்துத்தான்.

அந்தப் பிராமணர் என்ன செய்வார், பாவம்! அவன் வீட்டிற்குள்ளே அட்டகாசம் செய்வதுடன் நிறுத்தியிருந்தால் அவர் பொறுத்துப் போயிருப்பார். ஆனால் அவனே அந்த வீட்டின் தரித்திர நிலையை அம்பலத்துக்கு இழுத்துவிட்டான்.

அவர் குடும்ப யோகக்ஷேமத்தைப்பற்றி ஊரிலே வம்பளக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதுவரையில் மூடிவைத்திருந்தது வெட்டவெளிச்சமாகிவிட்டது. ஆப்தரான இரண்டொருவர் அவருக்கு உபதேசம் செய்யவும் தலைப்பட்டனர்.

"பார்த்தால் துளியாக இருக்கிறான். அவன் செய்யும் காரியம் அபாரமாக இருக்கிறதே. அவனை இப்படியே விட்டுவைத்தால் பின்னால் ஆபத்துக்கு இடமாகும். ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?" என்றார் ஒருவர்.

"தாயில்லாப் பிள்ளை என்று நீங்கள் தாட்சிண்யம் பார்ப்பதில் பிரயோசனமில்லை. இப்போது முதலே அவனை அடித்து, உதைத்து வழிக்குக் கொண்டுவரா விட்டால் பின்னால் அவன் உமக்குக் கெட்ட பெயர்

வாங்கிவைத்துவிடுவான்'' என்று உருவேற்றினர் மற்ருருவர்.

இவ்விதம் அவர்கள் தலைக்கு ஒன்ருகச் சொன்னர்கள். பையனுடைய வாழ்க்கை பாழாய்ப்போகிறதே என்ருவது அந்தப் பிராமணருடைய குடும்பத்தின் கட்டுக்கோப்புக் கலகலத்துப்போகிறதே என்ருவது அவர்கள் கவலைப்படவில்லை.

அடங்காப்பிடாரியான அவன் தங்களிடையே இருப்பது கிராமத்து வருங்காலப் பயிர்களான மற்றப் பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஆபத்து என்பதை உணர்ந்தே அவர்கள் அவன் கொட்டத்தை அடக்க முன் வந்தனர்.

அந்தப் பிராமணர் இளகிய மனசு வாய்ந்தவர். அநாதையான அவனை அடித்துத் துன்புறுத்த அவர் இஷ்டப்படவில்லை. 'வேளைக்கு வந்தால் சாப்பாடு; தவிர, எல்லோரும் சாப்பிடும் ஆகாரத்தையே அவனும் சாப்பிடவேண்டும்' - இவ்விதம் திட்டம் வகுத்து விட்டார் அவர்.

சோற்றுக் கடனை முடித்துக்கொண்டு கிளம்பி விட்டால் அவன் எங்கே வேண்டுமானுலும் திரியலாம்; எதை வேண்டுமானுலும் செய்யலாம். வீட்டில் உள்ள வர்கள் அவனைக் கண்டிக்கவே போவதில்லை.

அந்தப் பிராமணருடைய சம்சாரம் முதலில் கொஞ்சம் சிரமப்பட்டுப் பார்த்தாள். தன் புருஷன் சிறுவனுடைய நடத்தையைப்பற்றிக் காதிலேயே போட்டுக்கொள்ளாவிட்டால் அவள் என்ன செய்வாள்? அவள் குறைகூறுவதுதான் மிச்சமாகநின்றது. அவளுக்கும் உடம்பு சதா படுத்தியவண்ணமாகவே இருந்தது. அதனுல் அவளும் வெறுத்து, 'எக்கேடாவது கெட்டு ஒழிந்துபோகட்டும்' என்று விலகிவிட்டாள்.

வீட்டார் அடக்காவிட்டால் ஊரில் உள்ளவர்கள் விட்டுவிடுவார்களா? அவனை அடக்கத் தலைப்பட்டனர். வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லுவதில் பிரயோசனம் ஒன்றும் இல்லை என்பதை அறிந்த அவர்கள், தாங்களே அவனைக் கண்டிக்க முற்பட்டதில் தவறு ஒன்றும் இல்லையே!

ஊரில் ஏற்படும் அதிக்கிரமங்களுக்கும் தங்கள் வாழ்க்கையில் நேரிடும் குறைகளுக்கும் மயூரனே காரணம் என்று முடிவுசெய்துவிட்டனர் ஊரார்.

சதுர்வேதியின் வீட்டுக் கன்றுக்குட்டி காலையில் மேயப்போனது மாலையில் வீடு திரும்பவில்லை. ''மயூரனே அதை எங்கேயாவது துரத்திவிட்டிருப்பான். அவனைப் பிடித்து இழுத்துவந்து கன்றுக்குட்டியைத் தேடச் சொல்'' என்பார் சதுர்வேதி. கன்றுக்குட்டி வந்து சேராவிட்டால் மயூரனுக்கு நல்ல உதை கிடைக்கும்.

ஷடங்கவித்தின் வீட்டுப் பசுமாடு அன்றைக்குப் பால் கறக்கவில்லை. வழக்கம்போல மேய்ந்துவிட்டு மாலையில் வீடு திரும்பியது. பால் கறக்கப் போனதும் பாத்திரத்தை உதைத்துக் கறக்கச் சென்றவனைக் கீழே தள்ளிவிட்டது. மடியிலும் பால் இல்லை. மயூரனே அதற்குப் பொறுப்பாளி என்று முடிவு செய்துவிடுவார் ஷடங்கவித். காட்டில் அவனே பாலைக் கறந்து குடித்திருக்க வேண்டும் என்று வாய்கூசாமல் கூறுவார். கன்றுக்குட்டி ஒருவேளை ஊட்டியிருக்கலாகாதா என்பதை எண்ணிப்பார்க்கவே மாட்டார்.

இவ்விதம் யாரும் அவனைப்பற்றி எதையும் தைரியமாகச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இரண்டொன்றுக்கு அவன் பொறுப்பாளியானல் மற்றவைகளையும் எளிதில் அவன் தலையிலே சுமத்திவிடலாம் அல்லவா?

கிருஷ்ணசர்மரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவராலும் முடியவில்லை. கடைசியில் எப்படியாவது அவனைக் கண்காணுமல் ஒழித்துவிட வேண்டும் என்ற ஸ்திதி ஏற்பட்டுவிட்டது. அதனேடு அவனுக்கு வயதும் ஏறிக்கொண்டே வந்தது.

இரண்டு மூன்று வருஷங்களாகவே அவருக்கு மன நிம்மதியில்லாமல் இருந்தது. சிறுவனுக்கு ஏழாம் வயதில் உபநயனம் நடத்திப் பிரம்மோபதேசம் செய்விக்கவேண்டியிருக்க அவர் பத்து வயதுவரையில் சும்மா இருந்துவிட்டார்.

'இந்தத் தறிதலை, பிராமண கர்மாக்களை ஒழுங்காகச் செய்யுமா?' என்றே மயங்கினர். 'அவன் கர்மாக்களை விட்டுப் பிரம்மோபாசனையையும் நிறுத்திவிட்டால் அந்தப் பாவம் அவனை மட்டுமன்றி அவனுக்கு உபதேசம் செய்தவரையுமன்ருே பீடிக்கும்?' என்று கவலைப்பட்டார்.

எத்தனை நாள்தான் அவர் இப்படியே காலம் கடத்திவர முடியும்? கடைசியில் அவனுடைய பதிஞேராவது வயதில் ஒரு நாள் தமக்கு வேண்டியவர்களான நாலைந்து வேதவித்துக்களை அழைத்து மயூரனுக்குப் பூணூலை மாட்டிவிட்டார்.

அது ஒருவிதத்தில் தமக்கு நன்மையையே பயக்கும் என்பதை அவர் அறிவார். மயூரன் இனிப் பிரம்மசாரி; வேதாத்தியயனம் செய்ய வேண்டியவன். அவனுக்கு அத்தியயனம் செய்விக்கத் தக்க வேதியர் ஒருவரும் அந்த ஊரிலே இல்லை. சதுர்வேதி, ஷடங்கவித் முதலிய எல்லோரிடமும் அவனுக்குப் பகை. வேதம் ஓதுவதற்கென்று ஊரைவிட்டு வேற்றிடம் செல்வதைத் தவிர அவன் வேறு என்ன செய்யமுடியும்? தன் வித்தியாப் பியாசத்துக்காக மயூரன் தான் வளர்ந்து வந்த இடத்தினின்றும் இரண்டுகாத தூரத்தில் இருந்த மற்ருெரு கிராமத்தை அடைந்தான்.

முதல் பயணத்தில் அந்தப் பிராமணரும் அவனுடன் கூடப் போயிருந்தார். வீரசர்மரிடத்தில் மயூரனை ஒப்பித்தார்.

"தாய்தந்தையர் இல்லாத அநாதைச் சிறுவன்; அதனுல் செல்வமாக வளர்க்கப்பெற்றுக் கொஞ்சம் மூர்க்கத்தனத்தையும் அடைந்துவிட்டான். அவன் குற்றங்குறைகளைப் பாராட்டாமல் தாங்கள் அவனை ஏற்றுப் பராமரித்து முன்னுக்குக் கொணர்தல் வேண்டும். அதைத் தங்கள் பொறுப்பாகவே நான் விட்டு விட்டேன்" என்று வேண்டிக்கொண்டார் கிருஷ்ண சர்மர்.

பையன் குணவிசேஷத்தைப்பற்றி வீரசர்மர் முன்னமே கேள்விப்பட்டிருந்தார். அதனுல் அவருக்குப் பிராமணர் செய்வித்த அறிமுகம் தேவையே இல்லை.

அந்தக் காலத்திலே தென்னுட்டில் பிராமணர்கள் அதிகமாக இல்லை. கோதாவரி, கிருஷ்ணு நதிகளுக்குத் தெற்கே அவர்கள் குடியேற ஆரம்பிக்கவில்லை. தமிழ்நாட்டிலே வசித்துவந்த பிராமணர்கள் கொஞ்சம் பேர்களே. அவர்களும் பெரும்பாலும் சிறு சிறு கூட்டங்களாக ஆற்றங்கரைப் பக்கங்களிலே கிராமங்களில் தங்கி வித்தியாஸ்தானங்களை நடத்தி வந்தனர். அதனுல் சிறு கூட்டத்தாராகிய அவர்களிடையே எந்தச் செய்தியும் நன்ருகப் பரவிவிடும்.

மயூரனும் வீரசர்மரும் வசித்துவந்த இடம் கடற்கரையோரத்துச் சமவெளிப் பிரதேசமன்று. துங்கபத்திரை நதியின் உற்பத்தி ஸ்தானத்தை அடுத்த மலைநாடு; குன்றுகளும் காடும் நிறைந்த பூமி.

வருஷவாரியில் மழை அதிகமாகத்தான் பெய்து வந்தது. எனினும் மணற்பாங்கான நிலம் இல்லாமையால் அந்த ஜலம் முழுதும் பாறைகளில் விழுந்து பள்ளங்களுக்கு ஓடி ஆற்றில் கலந்து வந்தது. அதனுல்

ஆற்றங்கரைக்குப் பக்கத்திலே தவிரப் பிற இடங்களில் எப்போதும் வறட்சிதான்.

காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்காத காலத்தில் அந்தப் பிரதேசம் இயற்கைத் தோற்றத்துடனேயே விளங்கியது. அங்கங்கே நடு நடுவே தோன்றிய செழிப்பான சிற்றூர்களைத் தவிர, பிற இடங்கள் மனிதன் வாழ்வதற்கு யோக்கியமற்றவையாகவே இருந்தன.

அத்தகைய காடாரம்பத்தில் வளர்ந்து வந்த மயூரனும் இயற்கையுடன் ஒன்றியே தன் வாழ்நாளைக் கடத்தி வந்தான். ஆசிரியரிடத்தில் ஸம்ஹிதை சந்தை சொல்லும் நேரம் தவிர, மற்றப் பொழுதை அவன் எப்படிக் கழித்தான் என்பதைப்பற்றிய கேள்வியே இல்லை.

வீரசர்மரோ மயூரன் அடித்துவந்த கொட்டங்களைக் காதில் போட்டுக்கொள்வதில்லை. அவனைப் பற்றி அவர் முன்னமே அறிந்திருந்தார். அவனைத் தன் இஷ்டப்படியே விட்டுவிட்டால் கொஞ்ச காலத்தில் அவன் தானகவே படிந்துவிடுவான் என்று எண்ணினர் போலும். சுயேச்சையாகத் திரிந்து வந்த அவனைக் கண்காணித்து அவன் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தினல் அது அவன் வாழ்க்கைப் பிரவாகத்தைத் தேக்கிவிடும். கிடைக்கும் சிறு இடைவெளி வழியாக அது தப்பி ஓட முயலுங்கால் சுழல்களை உண்டாக்கி அவனையும் பிறரையும் அவற்றுள் இழுத்து அமுக்கிவிடவும் கூடும். இதனையும் அறிந்தே போலும் அவர் மயூரனை அதிகமாகக் கண்டிக்கத் தலைப் படவில்லை.

மயூரனுக்கு ஆசிரியராக அமர்ந்திருப்பதைத் தமக்குக் கிட்டிய ஒருவித பாக்கியம் என்றே கருதினர் வீரசர்மர். மயூரன் எவ்வளவுக்கு எவ்வளவு அடங்காப் பிடாரித்தனத்தைக் கொண்டிருந்தானே அவ்வளவுக்கு

அவ்வளவு கூரிய புத்தியையும் பெற்றிருந்தான். அவன் சிறந்த அறிவையும் ஞாபகசக்தியையும் கொண்டிருந் தான். ஏகசந்தக் கிராகி என்றே அவனைச் சொல்ல லாம். இளம் வயதிலேயே பரந்த உலக ஞானத்தை அவன் பெற்றுவிட்டான்.

குறும்புத்தனங்கொண்ட சிறுவர்களுக்குத் தோழர் கள் வெகு எளிதில் கிடைத்துவிடுவர். சுட்டித்தனம் குழந்தைகளின் இயற்கை. தன்னிடம் அத்தகைய குணம் இல்லாவிட்டாலும் அது வாய்க்கப்பெற்றவனைக் கண்டு ஒவ்வோர் இளைஞனும் உள்ளம் மகிழ்வான். அத்தகையவன் செய்யும் ஒவ்வொரு குறும்பையும் மகத்தானதாகக் கருதிக் கொண்டாடுவான்.

மயூரனைச் சுற்றி இப்படிப்பட்ட 'வானரசேனை' ஒன்று கூடிவிட்டது. அவர்களுக்கு மயூரனே தலைவன். அவனை அறியாமல் ஊரில் சில்லறைக் குறும்பு எதுவும் நடவாது.

ஆற்றங்கரைத் தோப்பிலே மாமரம் ஒரு நாள் காய்த்துக் குலுங்கக் காணப்படும். மறுநாள் அந்த மரத்தில் ஒரு பிஞ்சுகூடப் பாக்கியிராது. அவற்றைத் தைரியமாக யார் பறித்துச் சென்றிருப்பர்? மயூரனையும் அவன் சகாக்களையும் அறியாமல் அவை போய்விடுமா?

ஊர்ச்சபைத் தலைவர் வீட்டுப் புழைக்கடைத் தென்னமரத்திலிருந்து இளநீர்க் குலை மாயமாக மறைந்து விட்டால் அதற்கும் மயூரனே பொறுப்பாளி.

காட்டிலே பழுத்திருந்த நாவல்பழத்தையும் பாக்கி வைக்கமாட்டான் அவன்.

இவ்விதம் தான் நடத்தும் திருவிளையாடல்களைச் சமூக வாழ்க்கைக்கு விரோதமானவையாகவே அவன் கருதவில்லை. "ஏண்டா, அவர் வீட்டுத் தென்ன மரத்திலிருந்து இளநீரைப் பறித்தாய்?" என்று

யாராவது கேட்டுவிட்டால் போதும். "அன்றைக்குக் கடுங்கோடையில் மத்தியான்ன வெயில் தாங்காமல் நா வறண்டு போய்க் கஷ்டப்படும்போது போய் ஓர் இளநீர் கேட்டால் அவர் ஏன் கொடுக்க முடியாது என்று நிர்த்தாட்சிணியமாகக் கூறி விரட்டினர்? கஷ்டப்படுகிறவர்களிடம் கொஞ்சங்கூடத் தயை இல்லாத அவர் வீட்டுத் தென்னமரத்திலிருந்து இளநீர் பறித்தால் என்ன முழுகிப் போய்விடுகிறதாம்!" என்றே பதில் சொல்லுவான்.

ஊரார் இதனை எத்தனை நாள் பொறுப்பார்கள்? அவனுக்குப் புத்தி சொல்லுவதில் பயனில்லை என்று கண்ட அவர்கள் அகப்பட்ட இடத்தில் அவனை அடிக்கவும் உதைக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். தங்கள் பிள்ளைகள் அவனுடன் சேரக்கூடாது என்று கண்டித்தும் வந்தனர். ஆயினும் அந்தப் பிள்ளைகள் வீட்டில் தாய் தந்தையர் மிரட்டும்போது, "இல்லையப்பா, இனி அவனுடன் பேசுவதே இல்லை!" என்று சொல்லுவார்களே யன்றி அவர்கள் தலைமறைந்தவுடன் மறுபடியும் மயூரனிடமே ஓடிவிடுவார்கள்.

படுகைத் தோப்பில் வேலி ஏறிக் குதித்து மயூரன் திருட்டு மாங்காய் பறிக்கும்போது அவன் தோழர்கள் வெளியே காவல் இருப்பார்கள். ஆனால் தோப்பின் சொந்தக்காரன் வருவதைக் கண்டுவிட்டால் அவர்கள் அப்படியே தலைமறைந்து தப்பி ஓடிவிடுவார்கள்.

மயூரன் தன் முதுகுத் தோலைக் காப்பாற்றிக் கொள்ள ஆற்றில் குதித்து நீந்தித் தப்பவேண்டும். மலையருவியை நம்பி அவ்விதம் குதிப்பது எப்போதும் அபாயமே. கரடுமுரடான தடத்தின்மீது தண்ணீர் ஓடும்போது எங்கே மேடு, எங்கே பள்ளம் என்பதை எப்படி அவன் அறிந்துகொள்ள முடியும்?

தவறி ஒருவேளை அவர்களிடம் அகப்பட்டு விடுவானுகில் அவன் எப்படியாவது அவர்களுடன் கட்டிப்

புரண்டு தப்பி ஓடிவிடுவான். கையுங் களவுமாக அவனை யாராவது பிடித்துவிட்டாலும் அவனைக் கட்டிக் கொணர்ந்து ஊர்ச்சபையின் முன்னர் நிறுத்த யாராலும் முடியாது. எந்த விதமாகவாவது அவன் தன்னை விடுவித்துக்கொள்வான்.

இதுவே அவன் மல்யுத்தத்தில் அடைந்த பயிற்சி. ஆனால் இதனை அவன் வெளியிட்டுச் சொல்வதற்குச் சிறிதும் கூசவில்லை.

இதைக் கேட்ட பிறகு கனகதாச செட்டியால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. கேலியாக வாய்விட்டுச் சிரித்தான். அதுமட்டுமா? "இவன் முதலில் 'மல்யுத்தம் என்பது என்ன?' என்பதைத் தெரிந்துகொண்டு வரட்டும். அப்பால் பார்க்கலாம்" என்று பரிகாசமாகவும் கூறினான்.

மயூரன் அதைக் கேட்டுப் பொறுப்பானா?

## 3. அரசன் அநுதாபம்

மல்யுத்தம் வெகு மும்முரமாக நடந்து வந்தது. மயூரன் அபூர்வமான பிடிகளைப் பிரயோகித்தான். கற்றுக்குட்டியான அவன் தேர்ச்சிபெற்ற பயில்வானைப் போலவே விளையாடினான். வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தவர்கள் அதைக் கண்டு பிரமித்துவிட்டார்கள். கனகதாசனுக்கும் அது ஆச்சரியமாக இருந்தது.

மயூரனும் தான் இவ்வளவு திறமையுடன் குஸ்தி போட முடியும் என்பதை எதிர்பார்க்கவில்லை. கனகதாசனுடைய பிடிகளை அவன் அநாயாசமாகக் கைலாகவத்துடன் உதறித் தள்ளிவிட்டான். அதுமட்டும் அல்லாமல் அந்தப் பிடிகளையே அவன் வெகு சுலபமாகத் திருப்பிப் போட்டுக் காண்பித்தான்.

அவனுக்கு முன் பழக்கம் இல்லை என்பது உண்மைதான். எனினும் அன்று கனகதாசனும் அவனுடைய சிஷ்யர்களும் விளையாடியபோது பார்த்து அந்தப் பிடிகளை எப்படிப் போடவேண்டும் என்பதைக் கவனித்து ஊகித்து அறிந்துகொண்டான் மயூரன்.

மல்யுத்தத்தின் சாராம்சத்தை அவன் தெரிந்து கொண்டுவிட்டான். எதிரியைப் பூமியில் வீழ்த்தி முதுகில் மண் ஒட்டும்படியாக அவனை 'மல்'லாக்கப் படுக்கவைத்தலே வெற்றியாகும் என்பதை உணர்ந்து கொண்ட பிறகு அவனுடைய வேலை எளிதாகிவிட்டது.

'கனகதாசனிடம் தான் எப்படியும் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. எவ்விதமாகவாவது அவனைப் பிடித்து வீழ்த்தி 'மல்'லாக்கிவிட வேண்டும்.' இதையே நோக்கமாகக் கொண்டு மல்யுத்தம் செய்தான் மயூரன்.

கனகதாசனுக்கோ மயூரனுடன் விளையாடவே மனம் இல்லை. அவன் உள்ளமே கலங்கிக் கிடந்தது; ஆரம்பம் முதல் ஒன்றன்பின் ஒன்ருக ஏதோ ஒன்று அவன் உணர்ச்சிப் பெருக்கைக் குறைத்து வந்தது.

முதலில் அவன் அறைகூவலை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வளவு பெரிய சபையில் ஒரு பயில்வானும் முன்வரவில்லை. அப்பால் வேண்டாவெறுப்பாகவே போலும் முற்பட்டவன் ஓர் இளைஞன்; கனகதாசனுக்கு இணையில்லாத ஒரு கற்றுக்குட்டி. அம்மட்டிலோ? அவன் நாடோடியான ஒரு பார்ப்பனச் சிறுவன்.

இந்த விஷயத்தை அறிந்தவுடனே கனகதாசன் தான் அவனுடன் விளையாட முடியாது என்று மறுத்து விட்டான். ஆனால் மயூரன் அதை ஒப்புக்கொள்ளவில்லை; ஆந்திரப் பயில்வான் தன்னுடன் மல்யுத்தம் செய்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்தினான்.

"அரசே, கனகதாசர் தம்முடைய புகழ்ச் செருக்கினால் சபையோரை அவமதித்து அறைகூவல் விடுத்தார். தம்முடன் போட்டிபோடும் சாமர்த்தியம் உள்ளவர்கள் யாராவது இங்கே இருந்தால் வரலாம் என்று கூறினார். அப்படி ஒருவரும் வராவிட்டால் இங்கே கூடியவர்கள் அவருடைய கீர்த்தியையும் உயர்வையும் ஒப்புக்கொள்வது மட்டுமன்றித் தங்களுடைய தாழ்மையையும் வெளிப்படுத்தியோராவர் என்றும் தோள் தட்டினார்.

"அவருடன் விளையாடுவதற்குத் தயாராக நான் வந்தால் அப்போது பயில்வான் ஆலசியம் செய்வானேன்? அவர் அறைகூவலை விடுத்தபோது பயிற்சியடைந்த பயில்வானை மட்டும் தனியாகப் பிரித்துக் காட்டவில்லையே? அவர் கருத்துப்படி நான் கற்றுக்குட்டிதான். ஆயினும் நானே சம்மதப்பட்டு முன்

வரும்போது அவர் யோசனை செய்யவேண்டிய காரணம் என்ன? பழக்கமில்லாத என்னை ஒரே பிடியில் தூக்கி எறிந்துவிட்டுப் போகலாமே.''

மயூரன் ஆந்திரப் பயில்வானைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அரசனிடமே நேராக முறையிட்டுக் கொண்டான்.

அசம்பாவிதமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. கனகதாசன் கற்றுக்குட்டியுடன் விளையாடுவது அவனுடைய கௌரவத்துக்குக் குறைவுதான். அவனுடன் விளையாடும் உரிமை பெறாத ஒருவனுக்கு விசேஷமான மரியாதை கொடுப்பதும் முறையன்று. ஆயினும் அவன் முதலிலே சபையோரைப் பார்த்துத் தன் புகழைப் பறைசாற்றிக்கொண்டபோது சற்றுக் கவனக் குறைவாகவே அலட்சியமாகப் பதப்பிரயோகம் செய்துவிட்டான். திறமை வாய்ந்தவர்கள் வாய்மூடி மௌனிகளாக நிற்க எவனோ ஒரு கற்றுக் குட்டி வருவான் என்பதை அவன் கனவிலும் எதிர் பார்க்கவில்லை.

ஒருதரம் சொன்னதை மறுபடி மாற்றமுடியாது. வார்த்தை பிறழ்ந்துபோவது நீண்டகால ஏச்சுக்கும் அவமானத்துக்கும் இடமளிக்கும். அதனால் கனகதாசன் ஒரு முடிவுக்கும் வராமல் மயங்கித் தயங்கித் தத்தளித் தான். மயூரன் அப்போதும் விடவில்லை.

"மகாராஜா அவர்கள் தயவுசெய்து பொறுத் தருளவேண்டும். பொழுது ஏறிக்கொண்டு போகிறது. சந்தியாகாலம் கிட்டுகிறது. நித்திய கர்மாநுஷ்டானங் களைச் செய்வதற்கு நான் போகவேண்டும்; அதிகநேரம் தாமதிப்பதற்கில்லை. முதலில் சபையோருக்கு அறி வித்தபடி ஆந்திரப் பயில்வான் என்னுடன் மல்யுத்தம் செய்து என்னை வென்று தம்முடைய புகழை நிலைநிறுத் திக்கொள்ள வேண்டும். இன்றேல், தம் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்.''

மயூரன் இவ்விதம் கூறி நிறுத்தியவுடனே சபையில் ஒரு சலசலப்பு ஏற்பட்டுவிட்டது. நாடோடியான அவன், சென்றவிடமெல்லாம் வெற்றிபெற்றுப் புகழுடன் வரும் ஆந்திரப் பயில்வானைப் பார்த்து இப்படிக் கூறுவதற்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும் என்று அங்கே கூடியிருந்தவர்கள் அதிசயித்தார்கள். இது அவர்களுக்கு ஒருவிதத்தில் ஆறுதலையும் அளித்தது. ஆயினும் அதை வெளியிட்டுத் தெரிவிக்க அவர்கள் அஞ்சினார்கள். மயூரனோ கனகதாசனே நேரில் மல் விளையாட்டை நடத்தவேண்டும் என்றும் அவனையன்றி அவனுடைய சிஷ்யர்களோ மற்றவர்களோ-யாராக இருந்தாலும்-அவர்களுடன் தான் மல்யுத்தம் செய்யச் சற்றும் ஒப்ப முடியாதென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

கடைசியில் வேறு வழியில்லாமல் ஆந்திரப் பயில்வான் மயூரனுடன் விளையாட ஒப்புக்கொண்டான்.

கனகதாசன் வழக்கப்படி ஒட்டுச் சல்லடம் முதலியவற்றை அணிந்து நின்றான். அவனுடைய சிஷ்யர்களும் அவன் தசைகளைப் புரட்டிவிட்டு முறுக்கேற்றியிருந்தனர். கடைசியாக மத்த கஜம்போலக் கம்பீரமான பார்வையுடன் அவன் அரங்கத்துள் நுழைந்தான்.

மயூரனுக்கோ அத்தகைய ஆடம்பரம் ஒன்றும் இல்லை. அவன் இடுப்பில் முழங்கால் அளவுக்குச் சிறு துண்டு ஒன்றைத்தான் கட்டியிருந்தான். அதை வரிந்து இழுத்துக் கச்சம்போட்டுக் கட்டிக்கொண்டான். மார்பில் அணிந்திருந்த பூணூல் எதிரியின் கையில் அகப்பட்டு ஏதாவது உபத்திரவத்தைக் கொடுக்குமோ என்று அஞ்சி அதையும் இழுத்து இடுப்பிலேயே சுற்றிக் கட்டிக்கொண்டான்.

'எப்படியும் சாயங்காலம் சந்தியாவந்தன காலத்துக்கு முன்னர் ஸ்நானம் செய்தாக வேண்டும். அவசியமானால் புதிதாகப் பூணூல் போட்டுக்கொண்டால் போகிறது' என்றே அவன் எண்ணினான் போலும்.

கனகதாசனைச் சேர்ந்த சிலரைத் தவிர அங்கே கூடியிருந்த அனைவரும் மயூரனை அநுதாபத்துடன் நோக்கினர். எப்படியாவது அவன் தோல்வியடையக் கூடாது என்றே அவர்கள் விரும்பினர். தாங்கள் அவ் விதம் ஆசைப்படுவது வீண் என்றே அவர்கள் எண்ணினாலும் அவர்கள் மனம் கேட்கவில்லை.

எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் கஷ்டப்படுகிறவர்களிடம் இரக்கம் காண்பிப்பது பாரதநாட்டு மக்களின் மனப்பண்பு; அது மனித இயற்கையுங் கூட. எப்படிப்பட்ட கிராதகனாயினும் அவனுடைய துஷ்டச் செய்கைகளை வெறுப்பாரேயன்றி அவன் துன்பத்தையடைந்து அவதிப்படும்போது மனித சுபாவம் மேம்பட்டு அவனிடம் இரக்கம் கொள்வர். 'துள்ளின மாடு பொதி சுமக்கட்டும்' என்று கூறிவிட்டு வாளா இருந்துவிடமாட்டார்கள்.

அவ்விதமிருக்க மயூரனைப்பற்றி அவர்கள் அக்கறை கொண்டதில் ஆச்சரியம் இல்லை. இளைஞனான அவன் தோல்வியடைந்தால் அது தங்களுக்கே பெருத்த அவமானத்தைக் கொடுக்கும் என்றும் எண்ணினார்கள்.

மல்யுத்தம் அதிக நேரம் நடைபெறவில்லை. ஜனங்களின் உற்சாகம் உச்சநிலையை அடைந்தபோது அரண்மனைச் சேவகர்கள் வெளிப்பட்டு ஆட்டத்தை நிறுத்திவிட்டார்கள். ஏன்?

சந்தியாகாலம் வந்துவிட்டது. அவரவர் தங்கள் தங்கள் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடிக்க வேண்டும். தெய்வக்கடன்களைக் காலத்திலே செலுத்த வேண்டும் என்றும் காலந்தவறிச் செய்வது பாவ மூட்டையைக் கட்டுவதுபோலாகும் என்றும் சொல்லி மந்த உபதேசங்களில் ஊறித் திளைத்திருந்தார்கள் வக்கள். அரசனும் அந்த நம்பிக்கையைத் திடமாகக் கொண்டிருந்தான்.

தென்னாட்டுக்கே திலகம் போன்று விளங்கிய கடிகையைப் பல்லவ மன்னன் தன் தலைநகரமான காஞ்சீபுரத்தில் நிறுவி நடத்திவந்தான். வேதம், வேதாங்கம், சாஸ்திரம், கலை ஆகிய யாவும் அங்கே கற்பிக்கப்பட்டு வந்தன. வித்தியார்த்திகளாக வருவோர் அவரவர்களுக்கு வேண்டிய கலையையோ சாஸ்திரத்தையோ பயிலலாம். சாஸ்திர நிபுணராகவும் கலாபரிபூரணராகவும் ஆகும்வரையில் அவர்கள் அங்கே தங்கித் தங்கள் பயிற்சியை முடித்துக்கொள்ள வேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டு வந்தன.

காஞ்சீபுரத்துக் கடிகையின் புகழ் தென்னாட்டைத் தாண்டி வடநாடுகளையும் எட்டியது. மதுரையிலே பாண்டிய மன்னர்கள் வளர்த்து வந்த சங்கத்தைப் போன்ற பழமை இல்லாவிட்டாலும் அத்தகைய பெருமை கொண்டு விளங்கியது அந்தக் கடிகை.

வேத சாஸ்திரங்களிலும் கலைகளிலும் பயிற்சியுள்ளவர்கள் தாங்கள் அவற்றை அப்பியசிப்பதுடன் நின்றுவிடமுடியாது. அப்படியானால் அது பூர்த்திபெற்றதாக ஆகாது. தான் கற்றதைப் பிறருக்குச் சொல்லிக்கொடுப்பதையே எந்த ஆசானும் முக்கியநோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இதுவே நம் நாட்டுக் கல்விமுறையின் அடிப்படை. மாணவர்களுக்கு விஷயங்களை விளங்கக் கூறுவதாலேயே கற்றது தெளிவுபடும்.

வீரசர்மரும் அதற்காகவேதான் குந்தளதேசத்தை விட்டுக் காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார். அவர் அத்தியயனம் செய்ததைப் பிறருக்கு ஓதுவித்தல் வேண்டும் அன்றோ?

அவருக்கு மயூரன் ஒரு சிஷ்யனாக இருந்தான். ஆயினும் அது போதுமா? அவர் ஓதுவித்தது சரியாக இருக்கிறதா என்பதைப் பிறர் பரீக்ஷித்துச் சம்மதம் அளிக்க வேண்டாமா? அதற்குத் தக்க யோக்

கியதை உள்ளவர்கள் காஞ்சீபுரத்திலேதான் இருந்தனர். வீரசர்மர் அந்த நகரத்துக்கு வந்தால் பிரவசனத்திலும் தேர்ச்சி பெறலாம் என்றே எண்ணினர்.

அத்தகைய கடிகையை நிறுவிப் பரிபாலித்து வந்த அரசனே அவர்கள் விதிக்கு விரோதமாக நடக்கலாமா? மயூரன் கடிகை மாணவர்களுள் ஒருவன். சந்தியாகாலத்தில் தன் ஜபதபங்களை ஒழுங்காகச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அவன் ஒழுக்கம் தவறிவிடுமன்றோ?

ஆனல் முக்கியமான காரணம் அதுவன்று. மயூரன் மிக்க திறமையுடனேயே மல்யுத்தம் செய்தாலும் அவனல் கனகதாசனுக்குச் சரியாக விளையாட முடியவில்லை. அவன் கை சிறிது சளைக்க ஆரம்பித்து விட்டது.

அதைக் கொண்டு எவ்விதமான முடிவையும் செய்துவிட முடியாது. மல்யுத்தத்தில் எந்தச் சமயத்திலும் சளைத்த கை ஓங்கிவிடக் கூடும். அது சர்வ சாதாரணமானது. அந்தக் கலையின் தந்திரங்களுள் அதுவும் ஒன்று. பயில்வான்கள் தங்கள் கை சளைத்துவிட்டது போலப் பாசாங்கு செய்து எதிரிகளை ஏமாற்றுவது சகஜம். அதைக் கனகதாசனும் நன்கு அறிவான்.

ஆனல் அத்தகைய சந்தர்ப்பத்தைத் தனக்கு அநுகூலமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணம் கனகதாசனுக்கு ஏற்படவில்லை. அவன் உள்ளம் ஆத்திரத்தால் குமுறிக்கொண் டிருந்தது. அந்தக் கோபத்தில் அவனது புத்தியின் கூர்மை மழுங்கி விட்டது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டன்றோ?

அரசன் மனத்தே மற்றோர் எண்ணமும் எழுந்தது. இளைஞனை மயூரனை அவனது முதல் பரீக்ஷையிலேயே

தோல்வியுறச் செய்துவிட்டால் அது அவன் உற்சாகத்தை முளையிலேயே கிள்ளியெறிந்ததுபோல் ஆகிவிடும். மயூரனுடைய முகவிலாசத்தைக் கண்டவுடனேயே அரசன் உள்ளத்தே ஒரு கருணையூற்றுத் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருக்கெடுத்து வெள்ளமாக மாறிவிட்டது. எப்படியும் அவனை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டியது தன் கடமை என்றே அவன் எண்ணினான்.

அவ்விதம் எண்ணியது அவன்மட்டுமல்ல; அவன் பக்கத்தே அமர்ந்திருந்த மற்றொரு ஜீவனும் அதே போல் நினைத்தது. உள்ளத்தெழும் உணர்ச்சியை அவர்களே வெளியிட்டுக் கூறிவிட்டால் யார் அறிய முடியும்? அரண்மனைச் சம்பிரதாயங்களில் நன்றாக ஊறியவர்கள் தங்கள் மனத்தே உதிக்கும் எண்ணத்தை எளிதில் வெளிக்காட்ட மாட்டார்கள். அவர்கள் முகபாவமும் மாறுதல் அடையாது. அன்றைத் தினம் அங்கே கூடியிருந்தவர்கள் கொண்டிருந்த வேகத்தில் பக்கத்தில் இருப்போர் முகபாவத்தைக் கவனிக்க யாருக்கு அவகாசம் இருந்தது?

அரசன் மல்விளையாட்டை நல்ல சமயத்தில் நிறுத்தியதாகவே இருதரத்தாரும் கருதினர்.

விளையாட்டு விதிகளுள் அதுவும் ஒன்றாகும். சமானமானவர் ஜதை சேர்ந்து தங்களுக்குள்ளே போட்டி போட்டுக் களைத்துப்போகும் வரையில் விளையாடுவதும் வீண்தானே? இருதரத்தாரும் வெற்றி தோல்வியை அறியாமல் விளையாடி வருவது அவ்வளவாக ரசிக்காது.

எவ்விதமாயினும் கனகதாசன் ஒரு பெருமூச்சு விட்டுக் கவலை நீங்கினான். மயூரனைக் கண்டு அவன் பயந்துவிட்டான் என்று கூறுவதற்கில்லை. எனினும் முடிவை யார் நிச்சயமாக முன்கூட்டிச் சொல்ல

முடியும்? சுக்கிராஸ்தமனம் கிட்டிவிட்டதோ என்றே அவன் ஒரு சமயம் எண்ணவும் நேர்ந்தது. ஆயினும் ஒன்றுக்கும் பற்றாத அந்த இளைஞனுடன் முடிவு ஒன்றும் ஏற்படாமல் விளையாட நேர்ந்ததே என்ற உள்ளக் கொதிப்புமட்டும் அவனுக்கு நீங்கவில்லை.

மயூரனுக்கோ இளமை முறுக்கு இருந்தபடியால் அவன் தன் களைப்பை வெளியிடவில்லை. பூணூலை இழுத்துப் போட்டு, அரைவேஷ்டியைச் சரி செய்து கொண்டு அவன் சுற்று முற்றும் பார்த்தான். மேலே என்ன செய்யவேண்டும் என்பதை அறியாதவனாகி அவன் அரங்கத்தினின்றும் வெளியேறி மறுபடியும் கூட்டத்தினுள் புக முயன்றான்.

ஆனால் அங்கே கூடியிருந்தவர்கள் அவனை விடவில்லை. மயூரனைச் சுற்றிப் பெருங் கூட்டம் ஒன்று கூடிவிட்டது. ஆஸ்தானப் பயில்வான்கள் அவனை முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டினார்கள். பாமர மக்கள் எட்ட நின்று அவன் சரீர அமைப்பைக் கண்டும் அவன் விளையாட்டை மனக் கண்ணால் வியந்தும் உள்ளங் களித்தார்கள். எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினர் என்றே சொல்லவேண்டும்.

ஆரவாரம் அதிக நேரம் நிலைபெறவில்லை. அரசன் அரண்மனை மாடத்தினின்றும் இறங்கி முன்புற வாசல் மேடையில் வந்து அமர்ந்ததும் சபையில் எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது.

ஆந்திரப் பயில்வான் கனகதாசனுக்கும் மயூரனுக்கும் அன்றைத்தின விளையாட்டுக்காக வழங்க வேண்டிய பரிசுகளை மன்னன் அளித்தான். கனகதாசனுடைய சிஷ்யர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்பச் சம்மானங்களைச் செய்தான்.

கனகதாசன், மயூரன் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட பரிசுகள் ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்வு

இல்லாமல் ஒரேவிதமாக இருந்தன. அதுவே முறை. சமானமான இருவருக்கு அளிக்கப்படுவனவற்றுள் வேறுபாடு செய்யலாமா?

ஆனால் அது ஆந்திரப் பயில்வானுடைய கௌரவத் துக்குக் குறைவாகவே தோற்றியது. ஒப்புயர் வில்லாத சிறப்பு வாய்ந்து விளங்கிய அவனுக்கு ஒப்பாக ஒருவனை அரசன் மதித்துவிட்டான். அவனுக்கு முறையான பயிற்சியளித்தால் அவன் சிறிது காலத்தில் கனகதாசனை விட உயர்ந்தவனாகவும் ஆகக்கூடும்.

ஆம்; கனகதாசனுக்கு வித்வத் பொறாமை ஏற் பட்டுவிட்டது. அதை மயூரனும் அறிந்துகொண்டு விட்டான். வித்வத் பொறாமையின் தீட்சண்யத்தை யும் மயூரன் நன்றாக அறிவான்; அது தனக்கு என்றைக்கும் பெருங் கேட்டை விளைவிக்கும் என்பதை யும் உணர்வான்.

ஆயினும் அவன் என்ன செய்ய முடியும்? அன்றைத் தினம் அவன் நகரத்துள் வேடிக்கை பார்ப் பதற்காகப் புறப்பட்டுப் போனபோது மல்யுத்தத்தைப் பற்றிய நினைப்பே அவனுக்கு இல்லை. எதிர்பாராமல் தனக்குக் கிட்டிய புகழை எண்ணி அவன் சிறிதும் கர்வங்கொள்ளவில்லை.

காலத்திலேயே வெளிக்கிளம்பி ஆற்றில் தன் னுடைய ஸ்நானத்தையும் கர்மாநுஷ்டானங்களையும் முடிக்கவேண்டுமென்று துடித்துக்கொண் டிருந்த அவன் அரசனிடம் சீக்கிரமாக விடைபெற்றுப் போய் விட்டான்.

## 4. கடிகை வாழ்க்கை

மாலை நேரத்தில் வேகவதி ஆற்றங்கரை எப்போதுமே ஒரு தனிச் சோபையுடன் விளங்கும். வேகவதியை ஒரு ஜீவநதியென்றே சொல்லுவர். அது ஒரு சிற்றாறுதான். காஞ்சீபுரத்தை ஒட்டினாற்போல் ஓடுகிறது. பக்கத்திலே இரண்டு நாழிகை தூரத்தில் ஓடும் பேராறான பாலாற்றுக்கு அது உபநதி.

ஆனால் பாலாற்றிலும் சரி, வேகவதியிலும் சரி, பெரும்பாலான நாட்களில் தண்ணீரே இராது. மழைக் காலத்தில் அவ்வப்போது திடீரென்று வெள்ளம் வந்து உடனே வற்றிவிடும். அவ்விதம் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் காலங்களில் அகன்ற பாலாற்றின் எதிர்க்கரை கண்ணுக்குப் புலப்படாமல் அந்த நீர்ப்பரப்பு சமுத்திரம்போலவே தோன்றும்.

நீர்ப்பெருக்கு அற்று வெயிலின் கொடுமையால் மணல் சூடேறிக் கால்வைக்க முடியாதபடி அடிசுடும் நாளிலும் அவ்வாறுகள் ஊற்றுப்பெருக்கால் உலகூட்டி வருகின்றன. மக்கள் ஆறுகளினின்றும் கால்வாய்களைத் தோண்டித் தண்ணீரைக் கொண்டுசென்று வயல்களுக்குப் பாய்ச்சுவர். அந்த ஊற்றுக்களில் வருஷம் முழுவதும் நீர் ஓடிக்கொண்டே இருக்கும்; அச்சிறு நீரோடைகளே அந்நதிகளுக்கு ஜீவநதி என்ற பெயரை அளித்தன.

சாதாரணமாகத் தண்ணீர் இல்லாவிட்டாலும் பெருவெள்ளம் வரும் காலங்களில் மேற்குப் பக்கத்தே அமைந்திருக்கும் ஸஹ்யாத்ரியின் கிழக்குச் சரிவுகளிலும் உள்நாட்டுக் குன்றுகளிலும் பொழியும் மழைத் தண்ணீர் முழுவதையும் திரட்டி ஓடிவரும்போது

வெள்ளம் கட்டுக்கு அடங்காமலே போய்விடும். அதனுலேயே அந்த ஆறுகளின் அடிப்பரப்பு அகன்று ஆழமில்லாமல் விளங்கும்.

பால் போன்ற மணல் வெள்ளம் ஓடும் அந்த அகன்ற பரப்பும் 'சிலுசிலு' வென்று தெளிந்த நீரோடும் சிற்றேடையும் ஆற்றங்கரைப் பக்கத்தே வாழ்பவர்களுக்கு என்றைக்கும் உல்லாச பூமியாகவே விளங்கிவந்தன.

ஊர்ச் சிறுவர்கள் காலையிலும் மாலையிலும் மணற் பாங்கில் ஓடி ஆடித் திளைத்து இளைத்துக் கிடந்து புரண்டு தங்கள் களைப்பை ஆற்றி மகிழ்வர். இளைஞர்களுக்கு அந்த இடம் தங்கள் காதல் நாடகங்களை நடத்தி இன்புறும் மன்மத பூமியாக விளங்கியது.

வாழ்க்கையில் அநுபவம் மிகுந்தவர்கள் அங்கே கூடித் தங்கள் சமூக வாழ்க்கையைப் பற்றியும் அதில் உண்டாகும் மேடு பள்ளங்களைப்பற்றியும் விவாதித்து முடிவு செய்வர்.

வயது சென்ற கிழவர்களுக்கோ அவர்களது ஜீவியத்தின் மாலைப் பொழுதை நிச்சிந்தையாக ஈசுவரத் தியானத்தில் கழிப்பதற்கு அதைவிட ஏற்ற இடம் வேறு கிடைக்குமோ?

நல்ல கடுங்கோடை. ஒரு நாள் மாலையில் மயூரன் தனியாக வேகவதியாற்றின் மணல்மீது படுத்திருந்தான். பகல் முழுவதும் எரித்த சூரிய வெப்பத்தினுல் சூடு ஏறிய மணலின் வெக்கை நேரே தன் உடலில் தாக்காதவாறு ஒரு சிறு துண்டைக் கீழே உடலின் மேல் பாகத்திற்கு மட்டும் உபயோகப்படும்படியாக விரித்திருந்தான்.

அவன் படுத்திருந்த இடம் காஞ்சீபுரத்துக்கு மேற்கே ஒரு காத தூரத்தில் இருந்தது. விசுவ

வித்யாஸ்தானமாக விளங்கி வந்த கடிகையே நகரத்தின் மத்திய பாகத்தில் ஜன நெருக்கமான பிரதேசத்தில் இருக்கவில்லை. நகர்ப்புறத்தே ஊரைவிட்டு விலகி இருந்தது.

வேகவதி ஆற்றின் கரையிலே ஒரு விசாலமான தோப்பில் அமைந்திருந்தது அந்தக் கடிகை. தழைந்த மரங்கள் அடர்ந்த அந்தத் தோப்பிலே ஒரு பொழுதும் சூரிய வெப்பத்தின் கொடுமை தாக்காது. அங்கே தான் வேத சாஸ்திரங்களைக் கரைகடந்த பிராம்மணர்கள் மனச்சாந்தியுடன் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவதையும் சாஸ்திர விசாரம் செய்வதையும் தவிர அவர்கள் வேறு எவ்விதமான கவலையுமின்றித் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர்.

அந்த இடம் ஒரு தனி ஊராகவே அமைந்திருந்தது. நகரத்தின் சந்தடி கொஞ்சமும் அவ்விடத்தை எட்டவில்லை. கடிகாஸ்தானமும் அதைச் சுற்றிய பிரதேசங்களும் அமைதி கொண்டு விளங்கின. வித்தியார்த்திகளேயன்றி, சாதாரணமாகப் பார்வையிட்டுச் செல்வதற்காகவே அவ்விடம் வருபவர்களும் அந்த இடத்தில் இருக்கும் வரையில் வெளியுலகத்தை மறந்தே இருப்பர். ஆம், அந்த இடத்தை நெருங்கினாலே யாருக்கும் இயற்கையில் மனத்திருப்தியுடன் பரவச உணர்ச்சி ஏற்பட்டுவிடும். உள்ளத்திலே சாந்தி நிலவும்.

விடிய ஐந்து நாழிகைப் பொழுதிலிருந்து இரவு பத்து நாழிகை வரையில் அந்தப் பக்கத்திலே வேத கோஷமும் வாத்தியங்களும் ஒலித்துக்கொண்டே இருக்கும். மாணவர்களும் குருகுல வாழ்க்கை நடத்துபவர்களாக அங்கேயே தங்கள் ஆசிரியர்களுடன் தங்கிப் பயிற்சி பெற்று வந்தனர். புத்தகப் படிப்பைவிட வாழ்க்கைப் பயிற்சியே உயர்ந்ததன்றோ?

அன்றைக்குச் சுக்கிலபக்ஷத்துச் சதுர்த்தசி. அனத்தியயன தினம். அன்றைக்கு அவனுக்குப் பாடம் இல்லை. விடுமுறை நாள். மயூரன் அன்றைப் பொழுதைத் தனியாகக் கழிக்க விரும்பினான். அதனாலேயே அவன் கடிகாஸ்தானத்தையும் விட்டுத் தனியாகக் கிளம்பி விட்டான். அவன் வேகவதி ஆற்று மணலில் தங்கியிருந்த இடம் கடிகையையும் தாண்டி மேற்கே இரண்டு நாழிகை தூரத்தில் இருந்தது.

நகரத்தினின்றும் வெகு தொலைவில் இருந்த அந்த இடத்தில் ஜனச் சந்தடி ஏதும் இல்லாமல் இருக்கும் என்றே அவன் எண்ணினான். தனிமையை விரும்பின அவனுக்கு அதைக் காட்டிலும் சிறந்த பிரதேசம் கிடைக்காது.

மயூரன் படுத்திருந்த இடத்துக்கு நேராகக் கரையிலே ஒரு பெரிய மாந்தோப்பு. கரையோரத்து மரக்கிளைகள் ஆற்றின்மீது பரவிக் குளிர்ந்த நிழலை அளித்தன. பருவத்தாற் பக்குவமடைந்த மரங்கள், இலைகளே இல்லாமல் 'கம்'மென்று மணம் பொருந்திய மாம்பூக்களையே கொண்டிருப்பவை போன்ற தோற்றத்துடன் விளங்கின.

கூர்ந்து கவனித்தால்தான் இலைகளிடையே கொத்துக் கொத்தாகக் காயும் பிஞ்சும் குலுங்குவதைப் பார்க்கலாம். பெருங் காய்கள் இல்லாமல் வடுக்களாக இருந்தன. விடியற்காலம் தோன்றும் குளிர்ந்த காற்றும் பனியும் பட்டுக் கருகி உதிர்ந்த பூக்கள் பூமியைப் பாய் விரித்ததேபோல மறைத்து இருந்தன. அத்தகைய பூக்கள் ஆற்றின் மணல்மீதும் விழுந்து கிடந்தன.

ஜனசஞ்சாரம் அதிகமாக இல்லாத அந்தத் தோப்பிலே கிளி போன்ற பறவை இனங்கள் இஷ்டப்படி கூவி விளையாடின. இரை தேடிவிட்டு, மாலைப் பொழு

தில் கூடு திரும்பும் பறவைகள் கீச்சுக் கீச்சென்று சப்தம் இட்டுக்கொண்டே பறந்தன.

அஸ்தமனசூரியன் செக்கர் வண்ணங்கொண்ட தன் கிரணத்தை உலகமெல்லாம் பரப்பி அது பட்ட இடங்களைத் தங்கமுலாம் பூசியதேபோல எல்லாவற்றையும் அழகுபடுத்தி வந்தான். மயூரன் படுத்திருந்தமணலும் அவ்விதமே பிரகாசித்தது.

கவிஞன், ஓவியன், காதலன் ஆகியோர் உள்ளத்து உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி உருவகப்படுத்தும் சக்தி வாய்ந்த அந்த இயற்கையழகைத் தினந்தோறும் கண்டு களிக்கவே மயூரன் ஆசைப்படுவான். சந்தர்ப்பம் நேர்ந்த காலங்களிலே அவன் வெளிக்கிளம்பி இயற்கையுடன் ஒன்றி மெய்ம்மறந்துவிடுவான்.

அவன் அன்றைக்கும் மெய்ம்மறந்துதான் கிடந்தான். ஆனல் தன்னைச் சுற்றிப் பிரகாசித்த இயற்கையின் அழகுத் தோற்றத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை. அதனைக் கண்டு மகிழவும் இல்லை.

அவன் மனம் கலங்கியிருந்தது. தன் உள்ளக் கவலையை மறந்து மனச் சாந்தியை அடைவதற்காகவே அவன் தனிமையை விரும்பி அங்கே வந்தான். ஆனல் அவன் தனிமையை அடைய முடியவில்லை.

"மயூரா!"

அன்பு ததும்பிக் கூப்பிட்ட அந்தக் குரல் அவன் கனவைக் கலைத்து அவனைப் பூலோகத்துக்குக் கொணர்ந்து தள்ளியது. அவன் திடுக்கிட்டு எழுந்தான். நிர்மானுஷ்யமான அந்தப் பிரதேசத்தில் தன்னை அவ்விதம் யார் அழைக்கிருர்கள் என்று திகைத்தான். அந்தக் குரல் அவனுக்குப் புதிதன்று; பழக்கமானதுதான். ஆனல் அவன் அந்தக் குரலுக்குடையவரை அப்போது அந்த இடத்திலே எதிர்பார்க்கவில்லை.

அவனது தனிமையைப் போக்கி அங்கே வந்து சேர்ந்தவர் அவனுடைய ஆசிரியர் வீரசர்மரே. அவர் அவ்விடம் தற்செயலாக வந்து சேரவில்லை. தம் சிஷ்யனைத் தேடியே, அவன் எவ்விடம் சென்றிருப்பான் என்பதை ஒருவாறு ஊகித்து அறிந்தே அவ்விடம் வந்தார்.

மயூரன் மனத்துக்கு உகந்த இடம் அதுவே என்பது வீரசர்மருக்கு நன்றாகத் தெரியும். கடிகையிலோ, வீரர்கள் கூடிப் பழகும் பயிற்சிக் கூடத்திலோ இல்லாவிட்டால் அவன் அந்த மணல் திட்டில்தான் இருப்பான்.

அன்றைக்கு அனத்தியயனதினம். அதனால் அவன் கடிகையில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. தவிர அன்றைக்கு அவன் நகரத்தின் பக்கமே போகவில்லை. பயிற்சிக் கூடத்துக்குப் போவதாக இருந்தால் மத்தியான்ன வேளையிலேயே கொஞ்சம் வெயில் தணிய ஆரம்பித்தவுடனே அவன் புறப்பட்டுவிடுவான். அன்றைத்தினமோ சூரியன் நன்றாகச் சாய்ந்து கீழ்வானத்தில் இறங்க ஆரம்பித்த பிறகுதான், பகல் இருபத்தைந்து நாழிகைக்கு மேலேதான், அவன் வீட்டினின்றும் புறப்பட்டான். அதனால், அவன் ஆற்றங்கரைக்குத்தான் போயிருப்பான் என்பதை அவர் நிச்சயம் செய்துகொண்டார்.

அவர் மயூரனைத் தனிமையில் தேடி வந்ததற்கும் முக்கியமான காரணம் ஒன்று உண்டு. கொஞ்சநாளாகவே மயூரனுடன் மனம் விட்டு அந்தரங்கமாகப் பேசவேண்டும் என்று அவர் எண்ணிவந்தார். ஆசிரியர், மாணவன் என்ற முறையில் அல்ல, நெருங்கிப் பழகும் தோழர்கள் என்ற முறையில். அந்தப் பாத்தியதையை அவர் கொண்டாடலாம். அவருக்கு அந்த உரிமை உண்டு.

அவ்விருவரும் நீண்ட நாள் பழகியவர்கள். அன்றி, கர்நாடகப் பிரதேசத்தை விட்டுக் காஞ்சீபுரம் வந்திருந்த

அவர்களுக்கு மற்றவர்களிடம் அதிகமான பரிசயம் இல்லே.

சொந்த ஊரை விட்டுத் தூரதேசம் செல்பவர் அந்த இடங்களிலே தங்கள் சொந்த ஊர்ப் பக்கத்தவர் களேக் காண்பாராகில் அவர்களிடம் தனியான பாசம் ஒன்றைக் கொள்வர். தவிர, அவ்விடம் வருவதற்கு முன்பு ஊரிலிருந்த காலத்திலேயே அவர்களே அறிந் திருப்பார்களாயின், புதிய இடத்தில் அவர்களே இணே பிரியா ஜோடியராகக் காணலாம். சொந்த ஊரிலிருந்து அவர்கள் வந்துள்ள தூரம், வழிநடையில் உள்ள கஷ் டங்கள் ஆகியவை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுக் கிடையே ஏற்படும் பிணேப்பு அதிகமாகும். இது மனித இயற்கை.

மயூரனும் வீரசர்மரும் ஒரே ஊரிலிருந்து புறப் பட்டு ஒன்ருகவே காஞ்சீபுரம் வந்தவர்கள். புதிய இடத்திலும் சேர்ந்தே இருந்தனர். ஆசிரியருக்குத் தம் மாணவனிடத்தில் எப்போதுமே பிரியம் உண்டு. அவ னுடைய சுட்டித்தனம், குறும்பு, திறமை, கூரிய புத்தி ஆகியவற்றைக் கண்டு அவர் பெருமிதம் அடைவார்.

காஞ்சீபுரத்திலும் மயூரனேச் சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்துவிட்டது. அவர்கள் யாவரும் அங்கே வந்து கூடியிருந்த வித்தியார்த்திகளே. அவர்களுக்கு அவனே தலேமைபூண்டு விளங்கினுன். அவர்கள் அனேவரும் மயூரன் திறமையைக் கண்டு வியந்தனர். அவனேத் தங்கள் சகபாடியாகக் கருதினுலும் ஆசிரியனுக்கு உரிய மரியாதையையும் அவனிடம் வைத்திருந்தனர்.

'தோளுக்கு மிஞ்சினுல் தோழன்'. இதனே வீரசர் மர் நன்ருக உணர்ந்திருந்தார். சிறுபிராயத்திலேயே அசாத்தியமான விஷமம் செய்தபோதும் அவர் மயூ ரனேக் கண்டித்தவர் அல்லர். அவனேக் குழந்தையாகவே

பாவித்து நடத்திவந்தார். அவன் வயதேறிப் பேரும் புகழும் பெற்றபிறகு அந்த எண்ணத்தை அறவே மறந்துவிட்டார் அவர். அவனைத் தம் தோழனாகவே மதித்து நடந்துவந்தார்.

ஆற்றின் நீரோட்டம்போலத் தடையொன்று மில்லாமல் எளிதாக நடந்துவந்த அவர்கள் வாழ்க்கையிலும் களங்கம் ஏற்பட்டுவிட்டது. அன்றொரு நாள் ராஜசபையில் நடந்த மல் விளையாட்டுக்குப் பிறகு மயூரன் வாழ்க்கையில் மாறுதல் உண்டாகியது. அது அவனாக வருவித்துக் கொண்டதன்று; தற்செயலாக நேரிட்டதுதான். அதுவே அந்தப் பங்கத்துக்கு மூலமாக இருந்தது.

இப்போதெல்லாம் அவனுடைய சகபாடிகள் அவனுடன் முன்போல் சகஜமாகப் பழகுவதில்லை. மயூரனை நெருங்காமல் கொஞ்சதூரத்திலே நின்றனர். அது அவனிடம் கண்ட அகங்காரத்தாலோ அல்லது அவர்கள் கொண்ட பொறாமையாலோ ஏற்பட்டதன்று.

'மயூரன் இப்போது நம்மைப்போன்ற சாதாரண வித்தியார்த்தியல்லன். அவனுக்கு ராஜாங்கத்து அநுதாபமும் அநுக்கிரகமும் ஏற்பட்டிருக்கின்றன. எப்படியும் அவன் நமக்குச் சமானமானவனாகமாட்டான். நம்மிலும் எவ்வளவோ படிகள் உயர்ந்த நிலையை அடைந்தவன்' என்றே அவர்கள் எண்ணினர்.

மயூரனை உயர்வாகக் கருதியதால் அவர்கள் தங்களைச் சிறுமைப்படுத்திக் கொள்ளவில்லை. அத்தகைய உணர்ச்சியும் அவர்களுக்கு உண்டாகவில்லை. ஆயினும், அவனைத் தங்களுக்கு நிகரானவனாகக் கருதி அவனுடன் பழகுவது அவனுடைய ஸ்திதி மேற்படுவதற்கு ஒரு தடையாக இருக்குமோ என்றே அவர்கள் கருதினர்.

பிக்ஷையெடுத்து வயிறு வளர்க்கும் வித்தியார்த்தி ஒருவன் தன்னைப் போன்ற இதர பிக்ஷுக்களுடன்

பழகுவதையும், ராஜாங்கத்தாருடன் சல்லாபம் செய்வதையும் ஒரே சமயத்தில் செய்ய முடியாது. அவை இரண்டும் ஒவ்வா; விரோதபாவம் வாய்ந்தவை. அவனுடைய நன்மையைக் கருதியே அவர்கள் ஒதுங்கி நின்றனர்.

தன் சகபாடிகளுடைய நடத்தை மயூரன் மனத்தே முன்போலச் சென்று தைத்தது. ராஜாங்கத்து உறவால்தான் பிராம்மணியத்தை இழந்து வருவதாகத் தன் சகபாடிகள் நினைத்துவிட்டார்கள் என்றே அவன் எண்ணினன். அதனல் அவன் தன் மன அமைதியை இழந்தான்.

வீரசர்மரும் இவற்றைக் கவனித்துக்கொண்டுதான் வந்தார். மயூரன் சில சமயங்களில் ஏக்கம் பிடித்துச் செயலற்று நின்றுவிடுவான். வேறு சில நேரங்களில் அவன் மனசு எங்கோ வெட்ட வெளியிலே சஞ்சாரம் செய்யும். அக் காலங்களில் தன் பக்கத்தே நிகழ்வனவற்றை அவன் கொஞ்சமும் கவனிக்கமாட்டான். அவற்றை அவன் கண்ணல் பார்த்தேயிருந்தாலும், அவை அவன் உள்ளத்துள் பதியா. எவ்வித உணர்ச்சியும் உண்டாகாது.

இந்த நிலையிலே கொஞ்சகாலமாக அவன் பாடமும் சரிவர நடைபெறவில்லை. அவன் தினசரி முறையாகப் படிப்பதிலோ சந்தை சொல்வதிலோ தவறவில்லை. ஆனல் அவன் படித்தது ஒன்றும் உள்ளத்திலே பதியவில்லை. ஒரு காலத்தில் ஏகசந்தக்கிராகியாக விளங்கிய அவன் இப்போது பல தடவை படித்தும் ஒரு விஷயத்தை மனத்திலே வாங்கிக்கொள்ளாமல் தவித்தான். அவன் மனம் எந்த விஷயத்திலும் ஒன்றவில்லை.

இதனலேயே அவர் அவனுடன் சிறிதுநேரம் தனியாக வாய்விட்டு, உள்ளத்தைத் திறந்து, தாராளமாகப் பேசி அவன் கொண்டிருந்த பாரத்தை நீக்க

விரும்பினர். அதற்குத் தக்க சமயத்தைத் தேடிவந்தார் அவர்.

ஏற்ற சந்தர்ப்பமும் அன்றைக்குக் கிடைத்தது.

அன்றைத்தினம் மயூரன் உள்ளம் ஒடிந்து சோர்ந்தவனகக் காணப்பட்டான். பாடமோ வேறு வேலையோ ஒன்றும் இல்லாமையால், அவன் ஆசிரியர் வீட்டுத் திண்ணையிலே விழுந்து கிடந்தான். அவன் தூங்கவில்லை. ஆனல் இந்த உலகத்துச் சிந்தனையே இல்லாமல் எதையோ பறிகொடுத்தவன்போல் வாடிப் படுத்திருந்தான்.

பொழுதுசாய ஆரம்பித்ததும், அவன் அவ்விடத்தினின்றும் கிளம்பித் தன் மனத்துக்கு உகந்த ஆற்று மணல்திட்டை அடைந்தான். அந்தச் சமயத்தையே எதிர்பார்த்துக் காத்திருந்தார் வீரசர்மர். அதனல் 'இன்றைக்கு வாய்த்தது' என்று எண்ணி, மகிழ்ச்சியுடன் அவனைத் தொடர்ந்து கிளம்பினர் அவர்.

மயூரனுடன் கூடவே இருந்தும் அவன் மனத்தைத் துன்புறத்தி வந்த காரணங்கள் யாவற்றையும் வீரசர்மர் அறியவில்லை. அவருக்குத் தெரியாத காரணம் ஒன்று இருந்தது. அவ்விதம் இருக்கக்கூடும் என்பதை அவர் கனவிலும் கருதவில்லை.

அந்தக் காரணத்தை யாரும் அறிய முடியாது. மயூரனுக்கே அது நன்ருக விளங்கவில்லை. தன் நினைப்பு உண்மையாக இருக்குமா அல்லது வெறும் பகற்கனவு தானு என்பதை அவனே திட்டமாக உணர்ந்துகொள்ளவில்லை.

அவனுக்கு எழுந்த அந்தச் சந்தேகத்தை அவன் யாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்?

அதை அவன் வெளியிட்டு எப்படிக் கூறுவான்? தான் அதைத் தெரிவித்தால், கேட்பவர் தன்னைப் பைத்

தியக்காரன் என்றே எண்ணுவர் என்றும் பயந்தான் அவன். ஆம்! அவ்வளவு அசர்பாவிதமாகவே இருந்தது அவனுக்கு ஏற்பட்ட மனப்பிரமை என்று சொல்லலாம்.

இவ்விதம் அவன் சில சமயங்களில் தன்னையே குறை கூறிக்கொள்வானேயாயினும், மற்ற வேளைகளில் தான் எண்ணுவது முற்றும் உண்மையே என்று நிச்சயமாகவே நம்பி வந்தான். அவன் சந்தேகப்படுவதற்கான ஹேதுக்களே இல்லை. அது மட்டுமன்று. அவன் நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தும் சில்லறை நிகழ்ச்சிகள் பல அவ்வப்போது நடந்து வந்தன.

எனினும் அவன் உண்மையை வெளியிட்டுக் கூறக் கூடிய நிலையில் இல்லை. ஒன்றை மட்டும் அவன் நிச்சயம் அறிவான். அது ரகசியமாகவே இருக்க முடியாது. என்றைக்கேனும் ஒரு நாள் அது வெடித்துத்தான் ஆக வேண்டும். அப்போது? அவன் கதி என்னவாகும்?

இந்த எண்ணமே அவனை வாட்டியது. யாரிடம் அவன் தன் மனக்குறையைக் கொட்டி அளந்து சாந்தியைப் பெற முடியும்?

அவன் தன்னைப் பொறுத்த வரையில் ஏக்கம் அடையவில்லையென்றே சொல்லலாம். ஆனால் ராஜாங்கத்தின் பெயருக்கு மாசு மறு ஒன்றும் ஏற்படக் கூடாதே! அதற்காகவே உள்ளங் கரைந்தான் அவன்.

மயூரன் தன் ஆசிரியரைக் கண்டதும் திகைத்துப் போனான். திடுக்கிட்டு எழுந்து, துண்டை உதறி இடுப்பில் கட்டிக்கொண்டு வணக்கத்துடன் அவர் முன் நின்றான்.

"மயூரா, வா, இப்படி உட்கார்."

இதைக் கூறிவிட்டு வீரசர்மர் அங்கேயே மணலில் உட்கார்ந்தார். மயூரனும் அவர் பக்கத்தில் சற்றே விலகி

அமர்ந்தான். ஆசிரியருடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்க அவனுக்குக் கூச்சமாக இருந்தது. அதனால் தலையைக் குனிந்துகொண்டு மௌனமாகவே வீற்றிருந்தான்.

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. வீரசர்மர் தம் மாணவனையே கண்கொட்டாமல் பார்த்தார். மயூரனோ குனிந்த தலை நிமிரவில்லை. கடைசியில் வீரசர்மரே அந்த மோனத்தைக் கலைத்தார்.

"குழந்தாய், நானும் கொஞ்ச காலமாகவே கவனித்து வருகிறேன். நீ ஏன் இப்படி உள்ளங் கலங்கினது போல முகப்பொலிவை இழந்து வாடித் தேய்ந்து வருகிறாய்? உன்னுடைய உற்சாகமும் சிரிப்பும் விளையாட்டும் எங்கே போயின?"

மயூரனுக்கோ என்ன பதில் சொல்வது என்பது விளங்கவில்லை. அதுகாறும் அவன் உள்ளத்தே அடைபட்டுக் கிடந்த உணர்ச்சிகள் எல்லாம் அணையை உடைத்துப் பிரவகிக்கும் காட்டாற்றின் வேகத்தைக் கொண்டு பீரிட்டு வெளிக்கிளம்பின. எவ்வளவு தூரம் முயன்றாலும் அவனால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"என் மனம் ஒரு நிலையில் இல்லை என்பது உண்மைதான். ஆயினும் அதன் காரணங்களை நான் எப்படிக் கூற முடியும்? அவற்றை நானே இன்னும் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லையே."

இதைக் கூறியபோதே உணர்ச்சி மேலீட்டால் அவனால் பேச முடியவில்லை; நாக்குத் தழுதழுத்தது. கண்களினின்றும் நீர் தாரையாக வழிந்தது. சக்திக்கு மீறிய துக்கத்தை அடைந்த ஒரு பெண்ணைப்போல அவன் அழ ஆரம்பித்துவிட்டான்.

அவன் துக்கத்தை உபசார வார்த்தைகளால் சமாதானம் செய்ய முற்படவில்லை வீரசர்மர். அவன்

போக்கிலேயே விட்டுவிட்டுப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார். துயரத்தைப் போக்க ஒருவன் அதனைச் சுவரினிடமாவது சொல்லி மனம் ஆறவேண்டும். உள்ளே அடங்கிக் கிடக்கும் உணர்ச்சிகள் வெளிப்பட்டால்தானே மனச்சாந்தி ஏற்படும்?

மயூரன் கோழையல்ல; பெண்ணுள்ளம் படைத்த பயங்கொள்ளி அல்ல; உரம்பெற்ற நெஞ்சையுடைய ஆண்மகனே.

"மயூரா, வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் அநுபவிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. இதற்காகச் சிறிதும் நீ மனம் உடையலாகாது. நம்மைப் படைத்த அன்றே கடவுள் நம் வாழ்வு தாழ்வுகளையும் நிச்சயம் செய்துவிட்டாராயினும் அவைகளை ஏற்றக் குறைவின்றிச் சமமாகப் பார்த்தால்தான் இந்தக் கடலைத் தாண்ட முடியும். மனவலிமை இல்லாவிட்டால் அந்தக் காரியம் எளிதன்று."

இவ்விதம் பல விதமாக அவனைத் தேற்றினார் வீரசர்மர். கடைசியில், "உன் மனத் துயரத்தை இங்கேயே உதறிவிட்டு வா, போகலாம்" என்று அவனை அழைத்துக்கொண்டு கிளம்பினார்.

கொந்தளித்த கடலும் சிறிது நேரத்தில் ஓய்ந்தது. அவன் மனமும் கொஞ்சம் அமைதியை அடைந்தது.

## 5. மல் பயிற்சி

"ரேவதி, அந்தப் பிராமணப் பையனுடன் உனக்கு எப்போதும் என்ன விளையாட்டு? அதனால் அவன் பாடம் தடைப்பட்டுப் போகிறதே! சரிவர முன்னேற வில்லையே!"

இதைக் கேட்டவுடனே ரேவதிக்கு உடல் வெலவெலத்துவிட்டது; அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

தன் தந்தை வீட்டில் இருப்பார் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை. சாதாரணமாக அந்தச் சமயத்தில் ஸ்கந்தவர்மர் வீட்டில் இருக்கும் வழக்கம் இல்லை. அரண்மனைக்கோ மல்யுத்தம் பயிலும் கூடத்திற்கோ சென்றிருப்பார். அவர் அன்றைத்தினம் வீட்டில் இருந்தது அவளுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. அதுமட்டுமன்று. அது அவளுக்கு அச்சத்தையும் கொடுத்தது. ஒருவேளை அவர் பார்த்துவிட்டாரோ என்று எண்ணித் துணுக்குற்றாள்.

'என்றைக்கும் இல்லாத துணிச்சல் இன்றைக்கு ஏன் எனக்கு வந்தது?' என்று தன்னையே நொந்து கொண்டாள். அவள் வேண்டுமென்று எதையும் செய்து விடவில்லை. சிறு பிள்ளைத்தனத்தின் இயற்கையான குறும்பின் விளைவே அது.

வேடிக்கையாகத் தொடங்கிய அது அவ்வளவு தூரம் தன்னை ஏச்சுக்குக் கொணர்ந்துவிடும் என்பதை அவள் உணரவில்லை. அது ஒன்றுதான் அவள் செய்த தவறு.

உலக வாழ்க்கையில் தனக்கு உரிய ஸ்தானத்தை அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

ரேவதி தன் தந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அதனால் அவருடைய மனநிலையை அறிந்து கொள்ள அவள் விரும்பினாள். ஆனால் ஸ்கந்தவர்மர் முகத்திலோ வருத்தம் ஒன்றைத் தவிர வேறு எவ்வித மான சாயையும் காணப்படவில்லை.

அது அவளுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. அவர் தம் நடத்தைக்காக வருத்தம் அடைந்தாரேயன்றித் தன்மீது கோபம் கொள்ளவில்லை என்பதை அறிந்தவுடன் ரேவதியின் படபடப்புக் கொஞ்சம் தணிந்தது.

ஆனாலும் அங்கே நின்று அவருடன் பேச அவள் இஷ்டப்படவில்லை. நிலைமையை உணராமல் தவறுதலாக அவள் எதையாவது கூறிவிட்டால் தந்தையின் வருத்தம் எந்தச் சமயமும் கோபமாக மாறிவிடக்கூடும். அவருக்குக் கோபம் வந்துவிட்டால் அந்த வெறியில் அவர் எல்லாவற்றையும் மறந்து பின்னால் ஏற்படும் பலனைச் சிந்தியாமல் காரியங்களை நடத்திவிடுவார். அதற்காகவே அவள் பயந்தாள்.

மாளிகையின் விசாலமான முன் வாயில் முற்றத்தில் ஸ்கந்தவர்மர் ஒரு கட்டிலின்மீது சாய்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். பெண்கள் இருக்கும் அந்தப்புரத்தை அடைவதற்கு ரேவதி அவரைத் தாண்டியே செல்ல வேண்டும்.

அவர் எதிரில் நிற்கவும் அவள் விரும்பவில்லை. தன் தோற்றமே அவருக்குப் பழைய நினைவுகளை உண்டாக்கக்கூடும். அதனால் அவர் சிறிது ஆத்திரம் அடையவும் நேரிடலாம்.

அதனால் தன் தந்தை இவ்விதம் தன்னை அதட்டிக் கேட்டதற்கு ரேவதி பதில் ஒன்றும் சொல்லவில்லை. சிறிது நேரம் மலைத்து அப்படியே அவர் எதிரில் நின்றாள். பிறகு பேசாமல் உள்ளே போய்விட்டாள்.

ஸ்கந்தவர்மர் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். அவளைப் பின்பற்றி உள்ளே சென்று அவளிடம் காரணத்தை அறிய அவர் விரும்பவில்லை. மயூரனுடன் அவள் பரிசயம் வைத்திருப்பதை அவர் விரோதமாக எண்ணவில்லை என்பதைத் தெரிவிக்கவே எண்ணினர். அவள் அசனை அறிந்துகொண்டுவிட்டாள் என்பது புலப்பட்டதும் அவர் சும்மா இருந்துவிட்டார்.

ஸ்கந்தவர்மர் தம் குமாரத்தியான ரேவதியின் மனம் நோகும்படி எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். அவளிடம் அவருக்கு அளவுகடந்த பிரியம். அவளைச் செல்வமாகவே வளர்த்து வந்தார்.

அவருக்கு அப்போது வயது சுமார் அறுபது இருக்கும். ரேவதி அவருக்குக் கடைக்குட்டி; ஒரே பெண். அவளுக்கு மூத்தவர்கள் எல்லோரும் ஆண் மக்கள். அதனுல் ஸ்கந்தவர்மருக்கு ரேவதியிடம் தனியான வாத்ஸல்யம் ஏற்பட்டது.

ஸ்கந்தவர்மருக்கு அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கு உண்டு. அவர் சக்கரவர்த்திக்குச் சற்றே எட்டின உறவினர்; அதனேடு யுக்த வயதையடைந்த பிறகு தம் காலம் முழுவதையும் அரசாங்கத்தின் ஊழியத்திலே செலவிட்டவர். யௌவனம் வாய்ந்து நல்ல மிடுக்குடன் விளங்கிய காலத்தில் அவர் ராஜாங்கத்து மல்லர்களின் தலைவராக விளங்கி வந்தார். நீண்டகாலம் அவர் பல்லவர் சைனியத்தில் பெரும் பதவி தாங்கிப் பல வெற்றிகள் கொண்டு பேரும் புகழும் பெற்ருர். அதற்கு உரிய பரிசும் சீக்கிரமே கிடைத்தது. சாதகர்ணி ராஷ்டிரத்தை (துங்கபத்திரை, கிருஷ்ணு நதிக்கரைகளையடுத்த, இப்போது ராயலசீமை என்று வழங்கப் பெறும் நாட்டின் பகுதியைக் கொண்டது.) நிர்வகிக்கும் பொறுப்பு அவருக்குக் கிட்டியது. அந்தப் பகுதியின் ராஷ்டிரபதியாக அவர் பல வருஷங்கள் அரசு

செலுத்தி வந்திருக்கிறார். அந்நாட்டு மக்கள் ஸ்கந்தவர்மன் ஆட்சியை மறக்கவில்லை. அவரிடம் மாருத அன்பு கொண்டிருந்தனர். அவர் இன்னமும் ராஜாங்க சேவையிலிருந்து விலகவில்லை. சக்கரவர்த்தி அதற்கு அநுமதி அளிக்காததே காரணம். வயதாகிவிட்டாலும் பழைய முறுக்குத் தளரவில்லை. இன்றைக்கும் அவர் பல்லவ சாம்ராஜ்யத்தின் ஆஸ்தானப் பயில்வான். அதனேடு சக்கரவர்த்தியின் அந்தரங்க மெய்க்காவலர்களுக்குத் தலைவராகவும் விளங்கினர். 'மகா சேனுபதி'ப் பட்டத்துடன் அதற்குரிய கௌரவங்களையும் அவர் வகித்துப் பெருமையோடு வாழ்ந்து வந்தார்.

அன்றொரு நாள் கனகதாசனுடன் மயூரன் நடத்திய மல்விளையாட்டுக்கு ஸ்கந்தவர்மரும் வந்திருந்தார். கனகதாசன் தற்பெருமை அடித்துக்கொள்வதுடன் நில்லாமல் பிறரைப் பரிகசித்து ஏளனமும் செய்த போது அவருக்கும் உள்ளம் கொதித்தது. ஆயினும் அவர் என்ன செய்ய முடியும்?

பல்லை இழந்த கிழச்சிங்கம் போன்ற அவர் தாம் அடைந்த ஆத்திரத்தை உள்ளே அடக்கி வைப்பதைத் தவிர வேறு ஒன்றையும் செய்ய இயலாமல் தவித்தார். தம் ஆஸ்தானத்துப் பயில்வான்களுள் ஒருவனும் கனகதாசனுடன் போட்டியிடுவதற்குத் தகுதி வாய்ந்தவனுகான் என்பதையும் அவர் அறிவார்.

எதிர்பாராத விதமாக மயூரன் அரங்கத்திலே நுழைந்தவுடன் அவருக்குக் கரைகடந்த ஆனந்தம் உண்டாயிற்று. தம் மானத்தைக் காக்க வந்த மைந்தனுகவே அவனை அவர் கருதினர். ஆம், பின்னர் அரசன் கொண்ட நோக்கத்துக்கும் வழங்கிய பரிசுகளுக்கும் அவரே பொறுப்பாளி.

அவருக்குத் தம்மையும் மீறி மயூரனிடம் ஓர் அநுதாபம் உண்டாயிற்று. எப்படியாவது அவனை முன்னுக்குக் கொணரவேண்டும் என்றே எண்ணினர்.

அவனுக்குக் கொஞ்சகாலம் முறையான பயிற்சி அளித்தால் அவனும் சிறந்த பயில்வான் ஆகிவிடுவான் என்பதை நிச்சயிக்கத் தக்க அடையாளங்கள் அவனிடம் காணப்பட்டன. அவ்விதம் யாராவது முன்வந்து அவனுக்குப் பயிற்சி அளித்தால் அவன் தனக்கு மட்டுமின்றித் தன்னுடைய ஆசிரியருக்கும் அழியாப் புகழைத் தேடிக் கொடுப்பான் என்பதை அவர் நம்பினார்.

என்றைக்காவது ஒரு நாள் அவன் தமக்கே போட்டியாக வந்துவிடுவானோ என்று அவர் சந்தேகம் கொள்ளவே இல்லை. குலத்தோடு ஒட்டியது குணம். ராஜகுடும்பத்துடன் உறவு வாய்ந்த அவருடைய பெருந்தன்மையை நாம் அளவிட்டுக் கூற முடியாது. அன்றி, மயூரன் பிராம்மணன். என்னதான் சிறந்த பயில்வானாயினும் பிராம்மண தர்மத்தை விட்டு ராஜாங்கத்தில் ஊழியம் செய்ய அவன் ஒப்பமாட்டான் என்பதை அவர் நிச்சயமாக நம்பினார்.

அதனால் கனகதாசனுடன் நடத்திய விளையாட்டுக்கு இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் அவர் மயூரனை ராஜசபைக்கு அழைத்துவரச் செய்தார். சக்கரவர்த்தியைக் கொண்டு அவன் பிறப்புக்கும் படிப்புக்கும் தக்கபடி மரியாதைகளை வழங்கினார். கடைசியாக அரசன் அநுமதியுடன் அவனைத் தம் மாணவனாகவும் ஏற்றுக்கொண்டார்.

மயூரனுக்குப் பயிற்சியளிப்பதிலும் அவர் அதிகமாகக் கஷ்டப்படவில்லை. ஒரு தடவை சொல்லிக் கொடுப்பதே போதுமானதாக இருந்தது. இதை அவர் முன்னரே அறிந்திருந்தார். அதனால் அவர் பிடிகளைப் படிப்படியாக ஏற்றிக்கொண்டே போய், சற்றேறக்குறைய முழு வித்தையையும் கற்பித்துவிட்டார்.

சாஸ்திர ரீதியாக அவன் அந்தக் கலையில் கற்க வேண்டியவை முழுவதையும் நாலைந்து மாதங்களுக்

குள்ளேயே அறிந்துகொண்டான். ஆனால் அறிவு மட்டும் போதுமா? அவை பழக்கத்திலும் இருத்தல் வேண்டும். கலைக்குப் பழக்கமே பெருந்தனம். எந்தக் கலையாயினும் பழகப் பழகவே அதில் முதிர்ந்த பயிற்சியும் அறிவும் திறமையும் ஏற்படும். தினசரிப் பழக்கம் இல்லாவிட்டால் கைத்திறமை மழுங்கிவிடும். அதனால் மயூரனும் தினந்தோறும் மாலையில் பயிற்சிக்கூடம் சென்று மல் வித்தையைப் பழகி வந்தான்.

எந்த வித்தையையும் நன்றாக அப்பியசித்துச் சித்தி பெறுவதற்குக் காலை நேரமே ஏற்ற சமயம். அதிலும் மல் வித்தைக்கு அந்நேரமே மிகவும் முக்கியமானது. படுக்கையைவிட்டு எழுந்தவுடன் ஒருவனுக்கு இருக்கும் தெளிவும் உடல்வலிமையும் மாலையில் இரா. பகல் முழுதும் தன் காரியங்களைப் பார்த்துக் களைப்புறும் சமயத்தில் மல் வித்தை பழகுவது நல்ல திறமையையும் கைலாகவத்தையும் அளிக்காது.

ஆனால் மயூரன் என்ன செய்ய முடியும்? அவனுக்கு வேறு பொழுது கிடைக்கவில்லையே. காலையில் அவனுடைய நித்தியகர்மானுஷ்டானங்களும் வேதாத்தியயனமும் நடக்கவேண்டும். அவை அவன் குல தர்மம். அதிலே தேர்ச்சி பெறுவதற்காகத்தான் அவன் தன் நாட்டை விட்டு நெடுந்தூரம் வந்து காஞ்சீபுரத்தில் தங்கியிருந்தான். அதனால் அவற்றை அவன் புறக்கணிக்க முடியாது. அவனுக்கு ஒழிந்த வேளை மாலை நேரமே. கூரிய புத்தியும் இளமையும் பெற்றிருந்த அவனுக்கு அந்தப் பொழுது எவ்வித வேற்றுமையையும் அளிக்கவில்லை. அந்த நேரத்திலும் அவன் சிறிதும் சளைக்காமல் பயின்று வந்தான்.

ஆரம்பத்தில் அவனுடன் சிறு பிள்ளைகளும் கற்றுக்குட்டிகளுமே விளையாடினர். ஒரு வார காலத்திற்கு மேலாக அவர்களால் அவனுடன் நிற்க முடியவில்லை.

அப்பால் ஸ்கந்தவர்மரே நேரில் அவனுக்குப் பிடிகளைப் போட்டுக் காண்பித்தார்.

அதுவும் அதிக நாள் நிலைபெறவில்லை. அவருக்கோ வயது முதிர்ந்து மூப்பு மிகுந்துவிட்டது; உடலில் தளர்வு உண்டாகியிருந்தது. அவரால் நீண்ட நேரம் நின்று விளையாட முடியவில்லை. இரண்டொரு சுற்றுக் களிலே அவர் களைப்படைந்துவிடுவார்.

அதற்குப் பிறகுதான் அவர் மயூரனை விஷ்ணு கோபனுடைய சகபாடியாக ஆக்கினார்.

விஷ்ணுகோபனும் அரச குடும்பத்தைச் சேர்ந்த வனே. அவரைப்போலவே அவனும் சக்கரவர்த்திக்கு எட்டின பந்து. இல்லை; அவன் ராஜவம்சத்தின் இளைய பரம்பரையில் உதித்தவன். நாலைந்து தலை முறைகள் தாண்டிவிட்டன; அவ்வளவுதான். அதனால் அவனுக்கு ராஜாங்கத்தில் செல்வாக்கும் கௌரவமும் அதிகமாக இருந்தன.

அவன் அப்போதே அரசாங்கத்தில் நல்ல உத்தி யோகத்தில் இருந்தான். சேனாபதிப் பதவி வகித்து வந்தான். அதனோடு நாட்டின் சிறுபகுதி ஒன்றுக்கும் தலைவனாக இருந்தான்.

விஷ்ணுகோபன் தன் பாலப்பருவத்திலிருந்தே ஸ்கந்தவர்மரிடம் பயிற்சி பெற்றுவந்தான். அவனு டைய முன்னேற்றத்தில் சக்கரவர்த்தியே விசேஷமான சிரத்தை காட்டி வந்தார்.

ராஜகுலத்தில் பிறந்தவர்களுக்கு மல் வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், வாள்வித்தை முதலி யன சகஜமானவைகளே. அவர்கள் அத்தகைய கலை களிலே எளிதில் திறமை வாய்ந்தவர்களாக விளங்குவர். அன்றி அவர்களுடைய பதவியும் ஒருவாறு அதற்கு அநுகுணமாகவே இருந்து வந்தது. அவர்களுடைய அறிவு சாதாரண மக்களுடையதைக் காட்டிலும்

கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் அது நன்றாகப் பிரகாசிக்கும். அதனை எடுத்துக் கூறி ஸ்தோத்திரம் செய்து புகழ் கொண்டாடப் பலர் காத்திருப்பர். இது இயற்கை.

விஷ்ணுகோபனோ உண்மையாகவே சாமர்த்தியம் வாய்ந்தவன். மயூரனைக் காண்பதற்கு முன்னர் ஸ்கந்த வர்மர் விஷ்ணுகோபனையே புகழ்ந்து வந்தார். தமக்குப் பின் தம் பதவியை விஷ்ணுகோபனே வகிக்கப் போகிறான் என்பதை நிச்சயமாக அவர் நம்பியிருந்தார்.

தன்மீது ஸ்கந்தவர்மர் கொண்டிருந்த அபிமானத்தை விஷ்ணுகோபன் நன்றாக அறிவான். அவர் ஆதரவுக்குத் தன்னை முற்றும் பாத்திரமாக்கிக் கொள்வதிலேயே முனைந்தான். அதையே நோக்கமாகக் கொண்டு அவன் பெரிய மனக்கோட்டையும் கட்டியிருந்தான். அது நிறைவேறுவதற்கு முன் மயூரன் நடுவில் வந்து முளைத்தது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

மயூரனையும் அவன் 'லேசு'ப்பட்டவன்" என்று தள்ளிவிட முடியவில்லை. அவன் திறமையிலே அவனுக்கு ஒரு சந்தோஷமும் ஏற்பட்டது. எனினும் தன் மனோராஜ்யம் பாழாவதைக் கண்டு வருத்தமும் அடைந்தான். இவ்விதமாகத் தத்தளித்தான் அவன்.

## 6. விஷவித்து

'எங்கிருந்தோ தோன்றிய அந்தப் பார்ப்பனச் சிறுவனா எனக்குப் போட்டியாக வந்து முளைக்க வேண்டும்?' என்று மனம் புழுங்கினான் விஷ்ணுகோபன். அந்த எண்ணமே அவனுக்கு ஆத்திரத்தையும் வயிற்றெரிச்சலையும் உண்டாக்கியது.

மயூரன் சாமர்த்தியத்தை அவன் நன்றாக அறிவான். எத்தனையோ நாட்களில் அவன் பயிற்சிக்கூடத்துக்கு வந்து மாலைவேளைகளில் மயூரன் விளையாடுவதைப் பார்த்திருக்கிறான். சில சமயங்களில் தானே அவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தும் பிடிகளைப் போட்டுக் காண்பித்தும் இருக்கிறான்.

அவ்விதம் இருக்க, தானே அவன் சகபாடியாக ஆவான் என்பதையாவது அவன் சௌகரியத்துக்காகத் தன் பயிற்சியையும் காலை வேளையிலிருந்து மாலைப் பொழுதுக்கு மாற்றிக்கொள்ள வேண்டிவரும் என்பதையாவது விஷ்ணுகோபன் கனவிலும் கருதவில்லை. அவ்விதம் நேரிட்டது அவன் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது.

விஷ்ணுகோபனே மயூரனைப்போன்ற வித்தியார்த்தி அல்ல. அவனுக்கு ஏற்கனவே மல் வித்தையில் நல்ல பயிற்சி ஏற்பட்டுவிட்டது. இப்போதெல்லாம் அவன் தினசரி அதைப் பழகி வரவேண்டும் என்ற அவசியமும் இல்லை. தான் கற்றவை மறந்து போகாமலும் கைலாகவத்தை விடாமலும் காப்பாற்றுவதற்கு அவன் ஏதோ அவ்வப்போது அந்த வித்தையைப் பயின்றால் போதும். அதனால் அவன் தன் இஷ்டத்துக்கு மாறாக, மயூரன் சௌகரியத்தை உத்தேசித்துத் தினந்தோறும் மாலை

வேளையும் அதை அப்பியசிக்க முடியாது என்று மறந்து ஒதுக்கிவிடலாம். அவ்விதம் அவன் செய்வதை யாரும் தடுத்துவிட முடியாது. எனினும் அவனால் அது கூட வில்லை.

ஸ்கந்தவர்மரிடம் அவனுக்கு உள்ளூறக் கோபம் ஏற்பட்டது. ஆயினும் அவன் அதை வெளிக்காட்ட முடியவில்லை. அவன் அவரை எவ்விதத்திலும் விரோதித்துக் கொள்ளலாகாது. அது தன் பிற்கால வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடும் என்று பயந்தான்.

மூப்பின் காரணமாக அவர் என்றைக்கும் சக்கரவர்த்தியிடம் விடைபெற்று ராஜீய வாழ்வினின்றும் விலகிவிடலாம். அப்போது? அவருக்குப் பிற்காலம் அந்தப் பதவியை வகிப்பதற்கு விஷ்ணுகோபனைக் காட்டிலும் தகுதி வாய்ந்தவர் யார் இருக்கிறார்கள்?

அவரை விரோதித்துக்கொண்டாலோ? ஒருவேளை அவர் தமக்குப் பதிலாக வேறு யாரையாவது?...... மேலே அவனால் எண்ணவே முடியவில்லை.

விஷ்ணுகோபனை ஸ்கந்தவர்மரிடம் பிணைத்திருந்த பாசம் அது ஒன்று மட்டும் அன்று. மற்றொன்றும் இருந்தது. அது அவர் குமாரத்தி ரேவதியே.

ரேவதியைக் குழந்தைப் பருவம் முதலே அவன் அறிவான். அவளோடு விளையாடிக் களித்து இன்பமாகப் பொழுது போக்கிய நாட்களை அவன் இன்றைக்கும் எண்ணி மகிழ்ந்து வந்தான்.

சிறு வயதிலேயே அவள் எழில் வாய்ந்து மிக்க வனப்புடன் விளங்கினாள். சிரித்த முகமும் குறுகுறு வென்ற விழிகளும் குளிர்ந்த பார்வையும் கொண்ட அவள் யாவரையும் வசீகரித்து வந்தாள்.

பல்லவ சக்கரவர்த்தியே அவளைக் கொண்டாடி வந்தார். ராஜாங்க விவகாரங்களில் செலவழிக்கும் நேரத்

தைத் தவிர மற்ற வேளையை அவர் அந்தக் குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவதில் போக்குவார்.

எட்டின உறவேயாயினும் அவள் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தாள். தனக்குப் பெண்ணில்லாக் குறையைச் சக்கரவர்த்தி அவளைக் கொண்டு நிவர்த்தித்துக் கொண்டார் போலும்.

ரேவதிக்கோ அந்தக் காலத்திலேயே 'வேற்று முகம்' இல்லை. யாருடனும் சுலபமாகக் கலந்து பழக ஆரம்பித்துவிடுவாள். கொஞ்சமும் பெருமை அடித்துக்கொள்ள மாட்டாள். குறும்புத்தனம் வாய்ந்த அவள் ஓயாமல் ஏதாவது விஷமம் செய்துகொண்டே இருப்பாள்.

அரசர் ஆதரவில் வளர்ந்து வந்த அவள் தன் கௌரவத்தைப் பற்றிச் சிறிதும் நினைத்தவள் அல்ல. திடீரென்று வீதியிலே இறங்கிக் கூட்டத்துள் கலந்துவிடுவாள். வெளியே கிளம்பும்போது தோழிகளும் வேலையாட்களும் சூழ்ந்துவரப் பல்லக்கிலேயே சவாரி செய்ய வேண்டும் என்னும் சம்பிரதாயத்தைத் தான் அறிந்துகொண்டதாகவே அவள் காண்பிக்க மாட்டாள்.

எதர்காக அவள் அவ்விதம் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும்? அவளைச் சக்கரவர்த்தி தம் வளர்ப்புப் பெண்ணாகக் கருதி வந்தது உண்மையே. ஆனால் அவளுக்கு எந்த விதமான உயர்வையோ பாத்தியதையையோ அது எப்படி அளிக்கும்?

ஆண்மக்களே அதிகம் பிறந்திருந்த குடும்பத்தில் தனிப் பெண்ணாகப் பிறந்த அவள் செல்வமாகத்தான் வளர்ந்தாள். ஆயினும் அவள் பயிற்சியும் ஆண்மக்களுக்குக் கிடைப்பதைப் போலவே இருந்தது. தான் ஒரு பெண் என்பதே அவளுக்குத் தோன்றாதவாறு வாழ்க்கை நடந்தது.

குதிரைச் சவாரி, வாள் பிடித்துச் சுழற்றுவது முதலிய எல்லாவற்றையும் அவள் நன்றாகப் பயின்றிருந் தாள். ஆனால் அவள் விருப்பம் முழுதும் வேறு திசை யில் இருந்தது.

அன்றாடம் கூலிவேலை செய்து தங்கள் வயிற்றைக் கழுவும் உழைப்பாளிகளைக் கண்டு இரக்கம் கொண்டு உள்ளம் கனிந்து போவாள். அவர்களுக்கு உதவுவதற் காக எந்தக் காரியத்தைச் செய்யவும் பின்வாங்க மாட்டாள். அதுவே அவள் மனத்துக்குப் பிரியமான காரியம்.

அன்றொரு நாள் தான் கண்டதை விஷ்ணுகோபன் மறக்க முடியுமா? மாலை நேரம் விஷ்ணுகோபன் எங்கோ வெளியே போய்விட்டு நகரத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். நகர்ப்புறத்தேதான் அவன் அந்தக் காட்சியைக் கண்டது.

ரேவதி வெளியே உலாவப் போய்விட்டு வந்து கொண்டிருந்தாள். அவள் குதிரைமீது சவாரி செய்து வந்தாள். அது ஆச்சரியமன்று. அவள் தன் குதிரைமீது ஒரு பெரிய மூட்டையையும் ஏற்றிக்கொண் டிருந்தாள். குதிரை அவளையன்றி, ஒரு பாரமான மூட்டையையும் சுமந்து வந்தது.

அது அவளுடையதல்ல! ஒரு வழிப்போக்குக் கிழவியின் மூட்டை. அந்தக் கிழவியும் பக்கத்தில் மெது வாகத் தடியையூன்றி நடந்து வந்துகொண் டிருந்தாள். கிழவியின் நடைக்கு ஒத்தாற்போல ரேவதியும் குதிரையை மெதுவாக நடத்திக்கொண்டு சென்றாள்.

விஷ்ணுகோபன் பின்னால் வருவதை அவர்கள் கவனிக்கவில்லை. அவர்களுடைய பேச்சு அவ்வளவு சுவாரசியமாக இருந்ததுபோலும்.

"வெகு தூரம் போய் வருகிறாயோ?"

பின்புறமாகச் சமீபத்தில் வந்து இவ்விதம் கேட்டான் விஷ்ணுகோபன். ரேவதி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். விஷ்ணுகோபனைப் பார்த்தும் வியப்பையோ திகைப்பையோ அடையவில்லை அவள். முன் போலவே போய்க்கொண் டிருந்தாள். அதற்காகக் குதிரையை நிறுத்தவும் இல்லை.

"இல்லை, சமீபத்திலேதான்."

அவள் அவனுடைய கேள்விக்கு அதிகமாகப் பதில் கூறவில்லை. ஆனால், அந்தக் கிழவியிடம் அவள் வாய் ஓயாமல் ஏதேதோ கதைத்துக்கொண்டே வந்தாள்.

விஷ்ணுகோபனுக்கோ இந்த அலட்சியம் பொறுக்கவில்லை. அவள் வேண்டுமென்றே தன்னை அலட்சியம் செய்வதாக எண்ணினான். தன்னுடன் பேச்சுக்கொடுக்க இஷ்டம் இல்லை என்பதைத் தெரிவிப்பதற்காகவே அவள் கிழவியுடன் சல்லாபம் செய்துவந்தாளோ என்றும் அவனுக்குத் தோற்றியது.

இந்தக் குட்டிக்கா அவன் பயந்துவிடுவான்?

"என்ன விசேஷம், இந்தக் கிழவி யார்? அவள் பேச்சில் அப்படியே லயித்துப் போய்விட்டாயே!"

இந்தக் கேள்விக்கும் ரேவதி சரியான பதில் கூறவில்லை.

"யாரோ, பாவம், வழிப்போக்கர்!" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு, கிழவியின் சரித்திரத்தையே கேட்டுக்கொண் டிருந்தாள்.

ரேவதியின் நடத்தை அவன் மனத்தைக் கொஞ்சம் புண்படுத்தியது. 'இந்தச் சிறுமியிடம் அவமானப் படும்படியும் நேரிட்டுவிட்டதே' என்று எண்ணி அவன் வருந்தினான். அவளைக் கண்டிக்கலாம் என்று பார்த்தாலும் அதற்குச் சமயம் சரியானதாகவும் இல்லை.

'சரி, இவளுக்கு இங்கே ஒன்றும் சொல்லக் கூடாது. வீடு வந்து சேரட்டும். பார்க்கலாம்' என்று மனத்திற்குள்ளேயே வைரம் கொண்டு போனான்.

ரேவதியோ அவனைப் பற்றிக் கவலைகொள்ளவே யில்லை. கிழவி போகவேண்டிய இடத்தில் அவளைச் சேர்த்து மூட்டையையும் இறக்கிக் கொடுத்துவிட்டுத் தான் தன் வீடு திரும்பினாள். வீட்டுக்கு வரும்போது வழியில் நடந்த விஷயங்களைப் பற்றிய எண்ணமே அவளுக்கு இல்லை.

வீட்டின் வாயிலை அடைந்து அங்கே விஷ்ணு கோபனைப் பார்த்த பிறகுதான் அவளுக்குப் பழைய நினைவு வந்தது. அடிபட்ட புலிபோல அவன் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக்கொண் டிருந்தான். அவன் கண்கள் கோபத்தால் ஜொலித்தன.

தான் தவறான காரியத்தைச் செய்துவிட்டதாக அப்போதுதான் அவளுக்குத் தோன்றியது.

விஷ்ணுகோபன் பூர்வோத்தரத்தையும் அவன் பெருமையையும் அவள் நன்றாக அறிவாள். தன் தந்தையே அவனுக்கு மரியாதை கொடுப்பதும் அவளுக்குத் தெரியும்.

"கண்ணே, ரேவதி. அரசனுக்குரிய மரியாதைகள் யாவற்றையும் நாம் விஷ்ணுகோபனுக்கு அளிக்க வேண்டும்" என்று எவ்வளவோ தடவைகளில் ஸ்கந்த வர்மர் தம் மகளுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதனால் விஷ்ணுகோபன் கோபத்தைக் கண்டு அன்று அவளுக்குக் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. தந்தையார் எங்கே தன்மீது வருத்தம் கொள்வாரோ என்றே அவள் பயந்தாள்.

தம் செல்வக் குமாரியை ஸ்கந்தவர்மர் ஒருபோதும் கண்டிக்கமாட்டார். அவள் செய்யும் காரியங்கள்

எல்லாம் அவளுடைய புத்திசாலித்தனத்தையும் குண விசேஷத்தையுமே எடுத்துக் காட்டுவனவாக அவர் எண்ணியிருந்தார்.

அவருக்கு விஷயம் எளிதில் விளங்கிவிட்டது. ரேவதியும் அந்தக் கிழவியும் பேசி வந்த அந்தச் சமயத்தில் விஷ்ணுகோபன் குறுக்கிட்டது பிழையே என்று அவர் எண்ணினார். ஆனால் அதை எடுத்துக்கூறி அவன் மனத்தைப் புண்படுத்தவும் விரும்பவில்லை.

ரேவதியும் குறிப்பாக அதை அறிந்துகொண்டாள். தந்தையின் மனப்போக்கை அறிந்த அவள் அடைந்த மகிழ்ச்சியை நாம் கூறவேண்டியதில்லை. இளவயது. வெற்றியின் சின்னமான ஒரு புன்னகையுடன் விஷ்ணுகோபனைப் பார்த்துவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஆம். 'இப்போது என்ன சொல்லுகிறாய்? யார் செய்தது சரி?' என்று அவள் விஷ்ணுகோபனை நோக்கி ஏளனத்துடன் கேட்டதுபோலவே இருந்தது அவள் பார்வை.

பிறப்பும் பதவியும் அளித்த இறுமாப்பிலே மிதந்து வந்தான் விஷ்ணுகோபன். ஏழை மக்களிடத்தும் தன் அந்தஸ்துக்குத் தாழ்ந்தவர்களிடமும் அவன் அலட்சிய புத்தியும் வெறுப்பும் கொண்டிருந்தான். அதனாலேயே முன் பின் தெரியாத அந்த ஏழைக் கிழவியுடன் ரேவதி அநுதாபத்துடன் சல்லாபம் செய்ததைக் கண்டு அவன் மனம் பொறுக்கவில்லை.

இதை ஸ்கந்தவர்மர் எளிதில் உணர்ந்துகொண்டார். ஆயினும் தம் குமரியை அதற்காகக் கடிந்துகொள்ள அவர் உள்ளம் இடங்கொடுக்கவில்லை.

ரேவதியின் இந்தக் குணம் முன்னர் இருந்ததைவிட இப்போது பூர்த்தியாகப் பிரதிபலித்து வந்ததைக்

DR. T. P. M. LIBRARY

கண்டு அவள் தந்தை பூரிப்புக் கொண்டார். ஆனால் அது விஷ்ணுகோபனைத் திகைக்க வைத்தது.

ஏழைகளுக்கு இரங்கி அநுதாபத்துடன் உதவி புரியும் அதிஷ்டான தேவதையின் அவதாரமே போலத் திகழ்ந்த அவளை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எதிர்பார்க்கலாம். கஷ்டப்படுபவர் ஒருவர் இருந்தால் அந்த இடத்தில் கட்டாயம் அவள் தோற்றம் அளிப்பாள்.

அதனால் அன்றைத் தினம் சாயங்காலம் அவள் மல்யுத்தப் பயிற்சிக்கூடத்துள் நுழைந்ததைக் கண்டு ஒருவரும் ஆச்சரியப்படவில்லை. அவள் எந்தக் காரியத்தை முன்னிட்டும் அங்கே வரவில்லை. சும்மா வேடிக்கை பார்த்துப் பொழுது போக்குவதற்காகவே அவ்விடம் வந்தாள்.

வழக்கம்போல் மயூரனும் விஷ்ணுகோபனும் விளையாடிப் பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள். ரேவதியைக் கண்டவுடன் அவ்விருவருக்கும் தனி உர்சாகம் உண்டாயிற்று. தங்கள் சாமர்த்தியத்தை அவள் முன்னிலையில் பிரகாசப்படுத்திப் பெருமை கொள்ள ஆசைப்பட்டனர்.

ரேவதி தன்க்கு வாழ்க்கைத் துணைவியாக வரப் போகிறாள் என்றே எண்ணியிருந்தான் விஷ்ணுகோபன். குழந்தைப் பருவத்தில் அவ்விருவரும் சேர்ந்து விளையாடி மனங்களித்து வந்ததைக் கண்ட அவர்களுடைய பெற்றோர்கள் அந்த இரண்டு குழந்தைகளும் வாழ்க்கை முழுதுமே அப்படிச் சேர்ந்திருந்தால் என்ன என்றே எண்ணினார்கள். குழந்தைகளின் பெற்றோர்கள் அவ்விதமான எண்ணங்களைக் கொள்ளுவது சகஜம். உலகத்தில் அப்படியே பல காலங்களிலும் நடந்து வந்திருக்கின்றது. ஆனால் அவற்றுள் சிலவே பலிக்கின்றன. பெரும்பாலன பேச்சளவிலேயே நின்றுவிடுகின்றன.

ஸ்கந்தவர்மர் அவ்விதம் இதை வாயப்பேச்சுடன் நிறுத்திவிட விரும்பவில்லை. செயலிலும் முடிக்கவே எண்ணியிருந்தார்.

விஷ்ணுகோபனுக்கும் ரேவதியிடம் அபாரமான பிரேமை. அவளது எழிலில் அவன் மயங்கி மையல் கொண்டு கிடந்தான். எனினும் நடு நடுவே அவள் போக்கைக் கண்டு அவன் சிறிது திகைப்பான். "இடையூறு ஒன்றும் இல்லாமல் எல்லாம் இனிதே முடிய வேண்டுமே" என்று ஈசுவரனைப் பிரார்த்திப்பான்.

ரேவதிக்கோ அத்தகைய உணர்ச்சியே அது வரையில் ஏற்படவில்லை. தனக்கு விஷ்ணுகோபனை வரித்துத் தன் பெற்றோர்கள் பேசி வருவதை அவள் அறிவாள். ஆனால், அதைச் சீர்தூக்கிப் பார்த்துத் தன் விருப்பத்தை அறிந்துகொள்ள அவள் முயல வில்லை. அந்தப் பருவத்தை அவள் அடையவில்லை. அதுவே காரணம்.

மயூரனுக்கோ ரேவதியிடம் நெருங்கிய பழக்கம் இல்லை. பல சமயங்களில் அவள் பயிற்சிக் கூடத்துக்குத் தன் தந்தையுடன் வந்திருக்கிறாள். மயூரன் விளையாடும் போது அவள் அங்கே இருந்து வேடிக்கை பார்த்திருக் கிறாள்.

கள்ளங் கபடு அற்ற அவள் சிற்சில வேளைகளில் மயூரனுடன் வேடிக்கையாகப் பேசி அவனை உற்சாகப் படுத்தியும் இருக்கிறாள்.

தன்னுடைய இந்த வாழ்க்கைக்கு ரேவதியே கார ணம் என்பதை மயூரன் நன்றாக அறிவான். அன்றைத் தினம் ராஜசபையில் நடந்த போட்டியின்போது அவளும் சக்கரவர்த்தியின் பக்கத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்து வந்தாள். சக்கரவர்த்தியின் கவனத்தை மயூரன்பால் திருப்பி அவனிடம் இரக்கம் கொள்ளச் செய்தவள் அவளே.

மல்யுத்தம் பயிலும் சகபாடிகள் சமயம் நேர்ந்த போது மயூரனைக் கேவலமாக மதித்துப் பேசுவர். அவன் பிராமணனாக இருந்ததே அதற்குக் காரணம். பார்ப்பனச் சிறுவன் மல் யுத்தப் பயிற்சி பெறுவதை அவர்கள் பரிகசிப்பர்; குலத்துக்கு ஒவ்வாத தொழில் என்று கூறுவர்.

மயூரன் அவற்றையெல்லாம் பொறுத்துத் தன் பயிற்சியை நிறுத்தாமல் தொடர்ந்து வந்ததற்கும் ரேவதியே காரணம்.

அன்றைப் போட்டியில் மயூரனுக்குச் சிறு அடி ஒன்று ஏற்பட்டுவிட்டது. ரேவதியையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்த அவனது பிடி இடம் தவறிப் போய்விட்டது. அதனால் அவன் நிலை தடுமாறினான். கால்விரல் மடிந்து சொற்பக் காயம் உண்டாகியது.

அதைப் பார்த்த ரேவதி மனம் வருந்தினாள். உடனே ஓடிப்போய் அவனை நெருங்கி உபசாரம் செய்தாள். அவன் அடைந்த காயத்துக்கு ஒருவேளை தானே பொறுப்பாளியோ என்றும் சந்தேகித்தாள். அது தோன்றியவுடன் அவள் அன்பும் அநுதாபமும் அதிகமாயின.

மயூரன் முதுகைத் தடவித் தட்டிக் கொடுத்தாள்; உற்சாகப்படுத்தினாள். அவன் ஓர் ஏழை என்ற எண்ணமும் அவள் மனத்துள் ஓங்கி நின்றது.

அவள் செய்கையைப் பார்த்து விஷ்ணுகோபன் உள்ளம் கொதித்து நின்றான். அவளுடைய துணிச்சலைக் கண்டு சீறினான். அவளைவிட அவளுடைய அநுதாபத்துக்குப் பாத்திரமாக இருந்த மயூரன்மீது அவன் கோபம் பாய்ந்தது. இருதயத்தின் அடியில் கிடந்த பொறாமைத் தீ ஜ்வாலையுடன் கிளம்பிக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

## 7. வஜ்ரபோதி முனிவர்

"விஷ்ணுகோபரே, உங்களேயன்றே நாங்கள் பெரிதும் நம்பியிருக்கிறேம்? தாங்கள் இப்படித் தட்டிக் கழிக்கலாகாது. எங்களுக்கு எவ்விதமாவது உதவி செய்வதற்குத் தக்க முயற்சி செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார் முனிவர்.

விஷ்ணுகோபன் சங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டான். ஏதோ ஒரு சமயம் வஜ்ரபோதி முனிவரிடம் பேசிக்கொண்டிருந்த போது அவன் அந்த விஷயத்தைக் குறித்துச் சொல்லியிருந்தான்.

"என்னுல் கூடிய உதவியைத் தங்களுக்குச் செய்ய நான் எப்போதும் சித்தமாக இருக்கிறேன்" என்று வாக்களித்திருந்தான்.

ஆனுல், இப்போதோ?

முனிவர் விரும்பும் விதமாக உதவி செய்ய விஷ்ணு கோபன் அசக்தனுக இருந்தான்.

அவர் கோரிக்கையை நிறைவேற்றுவதில் அவனுக்குப் பரம திருப்திதான். அதனுல் அவனுடைய நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும்; மனக் கஷ்டமும் நீங்கும்.

எவ்விதமாவது மயூரனுடைய செல்வாக்கைக் குலைத்து அவனைத் துரத்த வேண்டும் என்றே விஷ்ணு கோபன் விரும்பி நின்ருன். அது கைகூடுவதற்கான வழிகளைத் தேடி வந்தான். அவனுக்கு உதவியாக வஜ்ர போதி முனிவரும் சேர்ந்துகொண்டார்.

முதலில் வாய்ப்பேச்சு அளவில் எல்லாம் சரியாகத் தான் இருந்தது. அதனை முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனுல் நெருக்கத்தில் வந்த

வுடன் அவன் உறுதியை இழந்தான். பிறர் உதவி யில்லாமல் தன்னாலேயே அதைச் சாதிக்க முடியாது என்பதையும் உணர்ந்தான்.

தான் முன்னிலையில் இருந்து அந்தக் காரியத்தை நடத்தி வைப்பதாகப் பிறர் கொஞ்சமும் சந்தேகிக்க அவன் விரும்பவில்லை. அந்தப் பாரத்தை வஜ்ரபோதி முனிவர் தலையில் போட எண்ணினான்.

முனிவரும் அதனைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தார். தம் சொந்த நலனைக் கருதி அந்தக் காரி யத்தை ஏற்றுக்கொள்வதாக அவர் எண்ணவே யில்லை. உலகத்து ஜீவராசிகளின் நன்மையைக் கருதியும் கருணை யங்கடலான ததாகதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யுமே செய்வதாக நினைப்பு.

ஆனால் சூத்திரதாரியாகத் திரைமறைவில் நின்று பிறரைக் கொண்டு செய்து முடிக்கும் காரியமல்ல அது என்பதை விஷ்ணுகோபன் கண்டுகொண்டான். அவனே முன்னின்று தன் பெயர், பதவி, செல்வாக்கு ஆகிய யாவற்றையும் உபயோகித்தே முயல வேண்டும். அது மட்டுமன்று; தன் முயற்சி கைகூடும் என்ற நம்பிக்கை யும் அவனுக்கு நிச்சயமாக ஏற்படவில்லை. ஒரு வேளை தோல்வியுற்றாலோ? தான் வெளியில் தலைநீட்ட முடி யாதபடி அவமானம் அடைவதுடன் அவ்வளவுக்கு மயூரன் பெருமையும் அதிகமாகிவிடுமே என்று பயந்தான்.

வீரசர்மர் 'ஆஹிதாக்னி'யாக விரும்பினார். அதற்கு முதல் படியான ஸோமயாகத்தைச் செய்து முடிக்க வேண்டும். மயூரன் அதைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்துவிட்டான். அதையே குருதட்சிணையாகக் கருதினான்.

ஸோமயாகத்தை நடத்திவைப்பதில் கஷ்டம் ஏதும் இருக்கக்கூடும் என்று அவன் நினைக்கவேயில்லை.

அந்தக் 'கிரது'வைச் செய்து முடிக்கப் பணம் அவசியமாகத் தேவை என்பது உண்மைதான்.

யாகத்துக்கு வரும் ரித்விக்குகளுக்கும் மற்றும் பிராம்மணர்களுக்கும் தட்சிணை வழங்கவேண்டும். வந்தவர்களுக்குத் திருப்தி உண்டாகும்படி சாப்பாடு போடவேண்டும். வைதிக கர்மாக்களைத் தவிர இந்த இரண்டுமே யாகத்தின் முக்கிய அம்சங்கள்.

அப்போது இருந்த நிலையில் மயூரனுக்கு அது பெரிதாக இருக்கவில்லை. அவனிடம் ஆஸ்தி ஒன்றும் இல்லை. ஆசிரியர் வீரசர்மர் வீட்டிலேயே குருகுல வாசம் செய்து வந்தான். அவர் அறியாமல் அவனிடம் பணம் ஏது?

அதைச் சுலபமாகச் சேகரித்துவிட முடியும் என்ற திடமான நம்பிக்கை அவனுக்கு இருந்தது. யாகத்துக்காக யாசகம் கொடுக்க யாரும் மறுக்க மாட்டார்கள்.

யாசகம் செய்வது இழிவானதே. அதை மயூரனும் நன்ருக அறிவான். பிச்சையெடுப்பதை அவன் எப்போதும் வெறுத்து வருபவனே. ஆனல் அதற்கும் விதி விலக்கு உண்டு.

குருதட்சிணைக்கு யாசகம் செய்வது இழிவானதாகாது. எந்தப் பிராம்மணனும் சாதாரணமாகத் தன் சொந்த ஆஸ்தியிலிருந்து குருதட்சிணையைக் கொடுக்க இயலாத நிலையிலேதான் இருந்து வந்தான். அதனேடு அந்தணர் புரிந்து வந்த யாகங்களையும் அவர்கள் பெரும்பாலும் யாசகம் செய்தே நடத்தினர்.

அவற்றைச் செய்வோர் மட்டுமே யாக யஜ்ஞங்களால் நன்மை அடைகிருர்கள் என்று இல்லை. அவற்றை நடத்தி வைப்போர், தேசத்தார் யாவருக்கும் நன்மை பயக்கும் நோக்கத்துடனேயே அந்தக் கிரதுக்களை இவர்கள் நடத்தி வந்தனர்.

அவ்விதம் நாட்டுக்கே க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய அந்த யாகத்துக்கு வேண்டிய திரவியத்தை அவன் யாசகம் செய்து சேகரிப்பதில் பாவம் என்ன?

யாகத்தை முடித்து வைப்பதால் அவன் செலுத்த வேண்டிய குருதட்சிணைக் கடனும் ஒழிந்துவிடுகிறது.

**வ**ஜ்ரபோதி முனிவர் அந்த நகரத்து ஸங்காராமத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவர். அதைச் சேர்ந்த புத்த விகாரமும் அவர் ஆதிக்கத்தில்தான் இருந்து வந்தது. நகரத்திலும் ராஜகாரத்திலும் அவருக்கு நல்ல செல்வாக்கு உண்டு.

அவரைத் தத்துவபோதத்திலும் ஆத்மவித்தையிலும் தேறிய ஞானி என்று கூறுவதற்கில்லை. என்றாலும் பரந்த அறிவும் சிறந்த அநுபவமும் வாய்ந்தவர். அவர் மனத்துக்குள்ளே எத்தகைய ஆசங்கங்களும் ஆசாபாசங்களும் குடிகொண்டிருந்தனவாயினும் அவற்றுள் ஒன்றேனும் வெளிப்பட்டதில்லை. அவை அவரது வாழ்க்கைத் துறையில் எவ்விதமான மாறுதலையும் உண்டுபண்ணவும் இல்லை.

அவர் எளிய வாழ்க்கையையே நடத்தி வந்தார். உலகத்தே பிறந்த சகல ஜீவராசிகளிடமும் மாறாத கருணை வாய்ந்தவர். யாரும் சுலபமாக அவரை அணுகித் தங்கள் குறைகளைத் தெரிவித்து அவற்றை நிவர்த்தித்துக்கொள்ளலாம்.

அவருடைய சாமர்த்தியத்தையும் சக்தியையும் அறிந்தே பெரிய பிக்ஷுக்கள் அவரை அந்தப் பதவியில் அமர்த்தினார். நல்ல வாய்ச் சாலக்குப் பெற்றிருந்த அவருடைய உதவி பல விதங்களிலும் ஸங்காராமத்துக்குத் தேவையாக இருந்தது. புத்தர் பெருமானுடைய உபதேசங்களை நாட்டில் பரப்புவதற்கு வஜ்ரபோதி முனிவர் முக்கியமானவராக இருந்தார்.

அந்தக் காலத்திலே யாரும் எந்த மதத்தையும் பின்பற்றலாம். மதம் அவர் அவர் ஆத்மாவைப் பற்றிய சொந்த விஷயம். மதத்துக்கும் சமூக வாழ்க்கைக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் பல மதங்களை மேற்கொண்டு ஒன்ருகவே வாழலாம். தந்தை வைதிக மதத்தையும், தாய் புத்த மதத்தையும், தநயன் சிவ மதத்தையும், பெண் விஷ்ணு மதத்தையும், வேருெருவர் ஜைன மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அது குடும்ப ஒற்றுமையிலோ சமூக வாழ்க்கையிலோ எந்த வேற்றுமையையும் உண்டாக்காது.

முனிவரும் பூர்வாசிரமத்தில் வைதிக மதத்தை அவலம்பித்தவர். பிராம்மணராகப் பிறந்தவர். மத்திய காலத்தில் பௌத்த பிக்ஷுக்களுடைய பழக்கம் அதிகமாக ஏற்பட்டிருந்தது. அதன் பயனுக அந்த மதத்தின் நுண்கருத்துக்களை அறிந்து அவற்றில் ஈடுபாடு உடையவரானுர். கடைசியாக அவர் புத்தமதத்தைச் சேர்ந்து உலக வாழ்க்கையைத் துறந்து பிக்ஷுவாக மாறி விட்டார்.

புது மதத்தில் அவருக்குத் தீவிரமான நம்பிக்கையும் பற்றுதலும் பிறந்தன. அதனை உலகம் முழுவதும் பரப்பவேண்டும் என்ற ஆசையையும் அவர் கொண்டார். புது மோகம் ஏற்படுவது மானிட இயல்பு.

மத வைராக்கியமும் வெவ்வேறு மதத்தை அநுஷ்டிப்பவர்களிடையே வேறுபாடும் இல்லாத காலத்தில் ஒரு மதத்தைப் பரப்புவதில் விசேஷம் எதுவும் இல்லை. புத்த மதத்தை அநுஷ்டித்து வந்தவர்கள் கொண்டிருந்த கருணை வெள்ளம் யாவர் மனத்தையும் கவர்ந்தது.

ஆனுல் நிரந்தரமான பயன் ஏற்பட வேண்டுமே என்றுதான் அவர் கலங்கினுர். பௌத்த மதத்தின்

பிடிப்பு நிலைபெற்று விளங்கவேண்டும் என்றும், ஒரு தரம் நன்றாகப் பரவிய அந்த மதம் சிறிதும் குறையாமலும் அழியாமலும் மேன்மேலும் பெருகவேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

அதற்கு?

முனிவர் மனத்தே துவேஷபுத்தி மெல்ல மெல்லப் புகுந்தது. அதை அவர் வெகுநாள் வரையில் அறியவில்லை. அதை அவர் துவேஷமாகவும் கருதவில்லை. பௌத்த மதத்தில் தமக்கு ஏற்பட்ட பற்றுதலால் பிற மதங்களிடம் தமக்குள்ள பற்றற்ற தன்மையாகவே அதை அவர் நினைத்திருந்தார்.

ஆனால் அது உள்ளூற நன்றாகப் பிடித்து வேரூன்றிக்கொண்டது. காலக்கிரமத்தில் அவருக்கு வைதிக மதமும் அதைக் கடைப்பிடிப்பவரும் வேப்பங்காயாக மாறிவிட்டனர்.

அவர் இருதயத்துக்குள்ளே குமுறிக் குழம்பிக் கிடந்த இந்த எண்ணங்களைப் பக்கத்தே உள்ளவர்களில் யாரும் அறியமாட்டார்கள். அவை வெளித்தோற்றாதவாறு அவர் ஜாக்கிரதையாக நடந்து வந்தார். அந்தப் பேய்க்குச் சிறிது இடம் கொடுத்துவிட்டால் அது பின்னால் எவ்வளவு தூரத்தில் கொண்டுபோய்விடுமோ என்று பயந்தார். அன்றியும் தாம் கொண்டுள்ள நோக்கம் நிறைவேறுவதற்கும் அது ஒரு தடையாகிவிடும் என்பதையும் அறிவார்.

**வீ**ரசர்மர் சோமயாகம் செய்யப்போகும் செய்தியை அறிந்தவுடன் அவருக்கு ஏற்பட்ட மனநிலையை விவரிக்க முடியாது.

அந்தச் செய்தியை அவருக்குக் கூறியவன் விஷ்ணுகோபனே. அவன் பௌத்த மதத்திலே கொஞ்சம் பற்றுதல் கொண்டிருந்தான். தன்னுடைய சௌகரியத்தை உத்தேசித்தே அதை அவன் கைக்கொண்டான்.

எவ்வாறுயினும் அவனுக்கு வஜ்ரபோதி முனிவரிடம் நெருங்கிய பழக்கம் உண்டு. அது ஒரு விதத்தில் அவ னுக்கு உபயோகமாகவே இருந்தது.

“முனிவரே, வீரசர்மர் யாகம் செய்யப் போகிறு ராம்; அதை மயூரசர்மர் நடத்தி வைக்கப் போகிறு ராம்.”

இவ்விதம் அவன் சொன்னபோது அவன் குரலில் தோன்றிய கேலிக் குறிப்பை வஜ்ரபோதி அடிகள் கவ னிக்காமல் இல்லை. விஷ்ணுகோபன் உள்ளக்கிடக்கையை அதுவே அவருக்கு எடுத்துக் காட்டியது.

பிக்ஷை எடுத்து வயிறு வளர்க்கும் அந்த இரண்டு பிராமணர்களும் செய்த முடிவைக் கேட்டு அவன் நகை யாடினுன். அவனுடைய செல்வச் செருக்கே அதற்குக் காரணம்.

அந்த யாகம் நடக்கவொட்டாமல் எப்படியாவது நிறுத்தி மயூரன் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்று தீர்மானித்தான் விஷ்ணுகோபன். அதற்குப் பிறகு மயூரன் வெளியில் தலைகாட்ட முடியாதன்றே? அவமானத்தால் உள்ளம் ஒடிந்த அவன் நகரத்தை விட்டே ஓடித் தலை மறைந்து போகவும் நேரிடலாம் என்று மனப்பால் குடித்தான் விஷ்ணுகோபன்.

தன் காரியம் நிறைவேறுவதற்கு அவன் பல முறை களைக் கையாளவேண்டும். யாகத்துக்கு வேண்டிய திர வியம் ஒன்றும் மயூரனுக்குக் கிடைக்காதவாறு அவன் தடுத்துவிட வேண்டும். அன்றியும் யாகம் செய்வது பாவச் செயல் என்றும் ஜீவஹிம்சையென்றும் பௌத் தர்களைக் கொண்டு எதிர்க்கச் செய்யவேண்டும். இவ் விரண்டும் முக்கியமானவை. இல்லாவிட்டால் அவன் எண்ணம் நிறைவேருது.

வீரசர்மர் யாகம் செய்வது கூடாது என்று வஜ்ர போதி அடிகள் எதிர்த்தால் அவர் விருப்பம் நிறைவேறு

வதற்குத் தான் வேண்டிய உதவியை வழங்குவதாக விஷ்ணுகோபன் வாக்களித்திருந்தான்.

அடிகளும் தம் பூர்வாசிரமத்தை மறந்தார்.

புத்தபகவானே ஒரு சமயம் அங்நாட்டு அரசன் செய்யவிருந்த யாகத்துக்கு ஓட்டிச் சென்ற ஆடுகளைக் கண்டு மனம் இரங்கிக் கருணை பூண்டு, நடக்க முடியாமல் தவித்த ஆட்டுக்குட்டியொன்றைத் தம் தோள்மீது தூக்கிப் போட்டுக்கொண்டு சென்று, அந்த யாகத்தை நிறுத்தி வாயில்லாப் பிராணிகளான அந்த ஆடுகளை மீட்ட கதையை யாவரும் அறிவர்.

தம் மதஸ்தாபகரான அந்தப் பகவானைப் பின்பற்றி அதேமாதிரி தாமும் செய்து அந்த யாகத்தை நிறுத்த முற்பட்டார் வஜ்ரபோதி அடிகள். ஆனல் அதன் விளைவை அவர் சரியாக அறியவில்லை.

விஷ்ணுகோபனுக்கோ முதலில் அது சரியாகத் தெரியவில்லை. அவனுக்கு இருந்த பொறுமையால் எல்லா விதமான உதவியையும் அளிப்பதாகக் கூறிவிட்டான்.

ஆனல் போகப்போக அதை நிறைவேற்றுவதில் உள்ள கஷ்டத்தை அவன் உணர்ந்தான். எப்படியாவது தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பினன்.

## 8. நீர்க்குமிழி

"ரேவதி, என்ன பகல்கனவு கண்டுகொண் டிருக் கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே வந்தான் மயூரன்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் ரேவதி. மயூரன் புன்சிரிப்போடு நின்று அவள் அழகைத் தன் அகன்ற கண்களால் பருகிக்கொண் டிருந்தான்.

"இது இரவா, பகலா?" என்று கேட்டுவிட்டு அவள் கலகலவென்று நகைத்தாள்.

மயூரன் முகம் சற்று வாட்டம் அடைந்தது. எனினும் அது உடனே மாறி அவன் தன்னைச் சமாளித் துக் கொண்டான்.

"இல்லை, என்ன மனோராஜ்யம் செய்துகொண் டிருக்கிறாய் என்றே கேட்டேன்."

"ஓஹோ! ஆயினும் தர்க்க சாஸ்திர ரீதியாக இரவைப் பகல் என்றுகூட நீங்கள் சாதித்துவிடுவீர் களே! உங்களுடன் யார் வாதாட முடியும்?"

ரேவதி இதைக் கூறிவிட்டு, குறும்பு நிரம்பிய தன் விழிகளால் அவனை ஒரு தரம் நோக்கிவிட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

அப்போது இரவு முன்னேரந்தான். பௌர்ணமி சமயமானதால் வானத்தின் கீழ்த்திசையில் சந்திரன் வெள்ளித்தட்டுப்போலப் பிரகாசித்துக்கொண் டிருந் தான். பால் போன்ற நிலவு உலகெங்கும் பரவி வசீகர மான தோற்றத்தை உண்டாக்கியது.

மாளிகையின் மேல்மாடத்து முற்றத்திலே ரேவதி அமர்ந்திருந்தாள். அவள் மடியில் வீணை சும்மாக்

கிடந்ததேயன்றி அவள் அதை மீட்டி நாதத்தை எழுப்பவோ பாடவோ இல்லை.

அவள் மனத்தில் சாந்தி நிலவவில்லை. பலவித எண்ணங்களால் அலைக்கப்பட்ட அவளது உள்ளம் சிதைந்து கிடந்தது. சிந்தையும் கருத்தும் ஒன்று சேர்ந்து நின்றாலன்றோ பாடி அதனால் ஏற்படும் இன்பத்தை அவளால் அநுபவிக்க முடியும்?

சிறிது நேரத்துக்கு முன்னர் அவள் பாடத்தான் ஆரம்பித்தாள். ஆனால் நடுவே அவள் உள்ளம் மனக் கூண்டை விட்டு வெளிக்கிளம்பி எங்கேயோ வெட்ட வெளியில் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

தான் எதைப் பாடுகிறாள் என்பதை அறியாமல் கொஞ்ச நேரம் எதையோ இசைத்துக்கொண் டிருந் தாள். மெல்ல மெல்லப் பாட்டுத் தானாகவே நின்று விட்டது. வீணையை மட்டும் மீட்டி நாதத்தை எழுப்பி வந்தாள். கடைசியில் அதுவும் நின்றுபோய்ப் பிரமை பிடித்து அவள் கல்லாகச் சமைந்துவிட்டாள்.

மயூரனைக் கண்டவுடன் அவள் அடைந்திருந்த ஏக்கம், கவலை முதலியன யாவும் பறந்துபோயின. அவள் அவற்றை மறந்து வழக்கம்போல் குறும்பு கொண்ட சிறுமியாக மாறிவிட்டாள்.

"என்ன சதுர்வேதியரே, அஸ்தமித்த பிறகு இவ்வளவு தூரம்?"

ரேவதி எப்போதாவது மயூரனைக் குத்திக்காட்டி அவனைப் பரிகாசம் செய்ய வேண்டுமானால் அவனைச் சதுர்வேதி என்று கூப்பிடுவாள். மயூரனுக்கோ அவள் தன்னை அவ்விதம் கூப்பிடுவது பெரிதும் உறுத்தும்.

"ஒரு வேதம் பூர்த்தியாவதற்கே வழியில்லை. சதுர் வேதி என்று என்னைக் கூப்பிட்டு ஏன் பரிகாசம் செய் கிறாய்? என்னை அவ்விதம் அழைக்காதே என்று உனக்கு எவ்வளவு தரந்தான் நான் சொல்லுவது?"

அவன் குரல் அவளைக் கடிந்து கொள்வதுபோலவே இருந்தது. எனினும் அதில் வருத்தத்தின் சாயை படர்ந்திருந்தது. ரேவதியோ அதைக் கண்டுகொள்ளவில்லை.

"சதுர்வேதி என்று அழைக்கக்கூடாது என்றால் 'ஷடங்கவித்' என்று அழைக்கட்டுமா?"

உண்மையில் மயூரனுக்கு வேதாத்தியயனம் பூர்த்தியாகிவிட்டது. அவன் ஒரு வேதத்தை, அவனுக்கு உரியதை மட்டுமே, அத்தியயனம் செய்தான். மற்ற மூன்றையும் கற்றுக்கொள்வதற்கு அவனுக்கு அவகாசம் இல்லை.

வேதத்தை முடித்துவிட்டு வேதாங்கங்களைப் பாடம் கேட்டு வந்தான். அவற்றுள்ளும் இரண்டொன்றில் அவனுக்கு நல்ல பாண்டித்தியம் ஏற்பட்டிருந்தது. ரேவதி தன்னை 'ஷடங்கவித்' என்று அழைப்பதில் தவறில்லை என்றே நினைத்தான்.

மயூரன் மனம் இரண்டுக்கும் இடையில் அகப்பட்டுத் தவித்தது. அவன் வேதாங்கங்களைப் பூர்த்தி செய்துவிட்டு வைதிக விருத்தியையே மேற்கொண்டு வாழ்க்கையை நடத்துவதா? அல்லது அரசாங்கத்தில் சக்கரவர்த்தியின் ஆதரவைப் பெற்று லௌகிக வாழ்வை மேற்கொள்வதா?

இரண்டுக்கும் வேறுபாடு அதிகம் இல்லையென்பது உண்மையே.

**லௌ**கிக விருத்தியில் உள்ளவர்கள் தினந்தோறும் அந்தணர்கள் அக்கினிமுகமாகச் செய்ய வேண்டிய கர்மாக்களைக் குறைவின்றி நடத்த முடியாது. முக்கியமான விசேஷ காலங்களில் மட்டுமே அவற்றை நடத்த முடியும்.

மயூரனுக்கோ வைதிக கர்மாக்களில் நம்பிக்கை இருந்தாலும், அவற்றைச் சிரத்தையோடு லோபமில்லாமல் செய்யக்கூடிய பக்குவம் ஏற்படவில்லை.

இளமையின் முறுக்கில் அகப்பட்டு மூழ்கிக் கிடந்த அவனுக்கு ஏற்படும் நன்மை தீமை யாவும் தான் இழைத்த காரியங்களின் முடிவே என்று தோன்றியது. அது மனிதனது வாலிப இயற்கை.

வேத மார்க்கத்தில் பயிற்சி பெற்ற அவன் கர்மாக் களின் பலன்களைப்பற்றி நம்பியே வந்தான். ஆனால், பக்தி ஏற்படவில்லை. அது மனிதனுக்கு உடல் தளர்ச்சி ஏற்படும் காலத்திலேதான் உண்டாகும்.

அந்தத் தளர்ச்சி ஏற்படாத வரையில் அவனுக்கு லௌகிக விருத்தியே ஒரு விதத்தில் ஏற்றதாகக் காணப் பட்டது.

ஆனால் மற்றோர் அம்சமும் இருந்தது. அதனை அவன் கைக்கொள்ள வேண்டுமானால் காஞ்சிபுரம் போன்ற நகரத்திலேயே தங்கியிருத்தல் வேண்டும். ஏதோ ராஜக்கிருகத்தில் அவனுக்குக் கிடைக்கும் ஆதர வைக் கொண்டு காலம் தள்ளிவிடலாம்.

அவ்விதம் இல்லாமல் நகரத்தை விட்டுத் தன் சொந்த ஊர்ப் பக்கம் போய்ச் சேர்ந்து ஏதாவது ஒரு கிராமத்தில் அவன் வாழ்க்கையை ஆரம்பித்தால்?

அந்தக் காலத்தே தென்னாட்டில் வைதிக மதத்துக் கும் பிராமணர்களுக்கும் உயர்ந்த மதிப்பு இருந்து வந்தது. பௌத்தம், ஜைனம் ஆகிய மதங்களும் கூடவே இருந்தாலும் வைதிக மதத்தின் ஆதிக்கம் குறையவில்லை. மன்னர்களும் நாட்டுப் பிரமுகர்களும் வைதிக மதத்தை ஆதரித்து வந்தார்கள்.

அதனைப் பரப்புவதற்கு அவசியமாக வேண்டிய அந்தணர்கள் தமிழ்நாட்டில் அதிகம் குடியேறவில்லை; அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக வடநாட்டி லிருந்து தென்னாடு வந்துகொண் டிருந்தனர்.

வடநாட்டு அந்தணர்கள் தமிழ் நாட்டில் வந்து குடியேறுவதை மன்னர்களும் ஆதரித்து அவ்விதம்

வருபவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் அளித்து வந்தனர். அவர்கள் வாழ்வதற்கு ஆற்றங்கரை ஓரமாக வரியில்லாமல் வேறு சில நிவந்தங்களுடன் பிரம்மதேய மாகக் கிராமங்களையும் வழங்கி வந்தனர்.

அவ்விதம் அவனும் ஏதாவது ஒரு கிராமத்தை அடைந்து அங்கே வாழ்ந்து வந்தாலோ?

கொஞ்ச காலமாக நகர வாழ்க்கையின் வேகத்தில் அடிபட்டு அலையுண்ட அவனுக்குக் கிராமத்தின் சாந்த மான நிலைமையில் பிடிப்பு உண்டாவது துர்லபம். வேறு வழியில்லாமல் அங்கே போய்ச் சேர்ந்தால்தான், ஒரு தரம் நகர வாழ்க்கையில் பழக்கப்பட்டவனுக்குக் கிராம வாழ்க்கையில் பிடிப்பு உண்டாகும். அல்லது வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளை அநுபவித்து வயதேறிய பிறகு மனச்சாந்தியை நாடும் ஒருவனே கிராம வாழ்க்கையின் இன்பத்தை அநுபவிப்பான்.

நகர வாழ்க்கை மதுவைப் போன்றது. காளைப் பருவத்தவன் அதனைப் பருகிவிட்டால் அது அவனை அப்பால் சுலபமாக விட்டுவிடாது. மயூரனும் அந்த மயக்கத்திலேயே இருந்தான்.

எனினும் அதை அவன் பூரணமாக அநுபவிக்க முடியவில்லை. அவன் காஞ்சீபுரத்துக்கு வரும் வரையில் யதேச்சையாகக் கட்டுக் காவலின்றிச் சுற்றித் திரிந்த வன். இங்கே வந்தபிறகு அது ஒருவாறு மட்டுப்பட்டு விட்டது. அவனுக்குப் பழைய உள்ளக் கிளர்ச்சி சில சமயங்களில் ஏற்பட்டுவிடும். அந்தக் காலங்களில் அவன் செய்வதறியாமல் தவிப்பான்.

மயூரன் மனநிலை இப்போது அதேமாதிரி இருந் தது. அவன் கைகால்கள் துறுதுறுத்தன. மனத்தில் ஒரு வேகம் கிளம்பியது. எதையாவது செய்து அவற்றை அடக்கினால் அன்றி இனிதே நடந்துவந்த அவன் கடிகை

வாழ்க்கைக்கு இடையூறு நேரிட்டுவிடும். பழைய நாடோடிப் பேய் அவனைப் பிடித்துக்கொண்டது.

வீரசர்மரைப் போலவே ஸ்கந்தவர்மரும் மயூரனுடைய குழந்தை உள்ளத்தை நன்றாக அறிவார். அதனால் இதமாகப் பேசி அவன் மனப்புண்ணை ஆற்றுவார். அதனாலே அவன் தனக்கு ஏக்கம் உண்டாகிய காலங்களில் சில சமயம் ஸ்கந்தவர்மரை அணுகுவது வழக்கம்.

மயூரனை அங்கே ஆகர்ஷித்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது ரேவதியின் தோற்றமே. அவள் அழகைக் கண்டு அவன் தன்னை மறந்து அதிலேயே லயித்துவிடுவான். அவன் அங்கே தங்கியிருக்கும் வரையில் துயரம் கொஞ்சமும் தலைதூக்காது. அநேகமாக அது அப்படியே அடங்கிவிடும்.

மயூரன் தம் மாளிகையில் நுழைந்து தாராளமாகப் பழகுவதை ஸ்கந்தவர்மர் சிறிதும் தவறாகக் கருதவில்லை. அவர் பல்லவ ராஜவம்சத்தைச் சார்ந்தவர்; க்ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்டு அதற்கேற்ப வாழ்க்கை நடத்தி வருபவர். மயூரனோ அந்தணன். அதனால் ஆக்ஷேபகரமான சம்பவம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்றே எண்ணினார்.

எனினும் அவர் தம் குமாரத்தியான ரேவதி மயூரனுடன் நெருங்கிப் பழகுவதை மட்டும் முழுமனத்துடன் அங்கீகரிக்கவில்லை. சமயம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துக்காட்டியே வந்தார்.

ரேவதியை அவர் இன்னமும் சிறுமியாகவே கருதி வந்தார். பெண்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் பருவத்தில் நாம் எப்படி அவ்விதம் கூற முடியும்? அவள் உலகத்தை நன்றாக அறிந்திருந்தாள். மனிதர்களுக்கு உண்டாகும் ஆசாபாசங்களை அவள் நன்றாகக் கவனித்திருந்தாள். எனினும் அவள் மனம் யாரையும் நாடவில்லை.

ஆயினும் விஷ்ணுகோபனைக் காட்டிலும் அவள் மயூரனிடம் சிறிது சகஜமாக விளையாடுவாள். பிற் காலத்தில் அவளுக்கு வாழ்க்கைத் துணைவனாக வரப் போகிறவன் என்று அவளுடைய பெற்றோர்கள் எண்ணி வந்த விஷ்ணுகோபனுடன் அவள் விளையாட முடியுமா? அதை அவள் விரும்ப மாட்டாள். அன்றியும் தன் தாய்தந்தையர் அவனிடம் மரியாதையாக நடந்து வரும்போது அவள் அவனுடன் எப்படிக் கேலியாகப் பேச முடியும்?

மயூரனுடன் அப்படிப் பேசுவதில் தடையொன்றும் இல்லை. அவனும் அதற்குக் கொஞ்சமும் சளைக்காமல் சுடச்சுடப் பதில் கொடுப்பான். அவ்விதம் பொழுது போக்குவதில் இருவருக்கும் மனத் திருப்தி.

ஆனால் அன்று அவன் ரேவதியின் பரிகாசப் பேச்சுக்குச் சரியான மறுமொழி கொடுக்க இயலாமல் திணறினான். அவன் மனநிலை அதற்கு இடங்கொடுக்க வில்லை.

மயூரன் திகைப்பை ரேவதியும் எளிதில் கண்டு கொண்டாள். சட்டென்று தன் விளையாட்டுத்தனத்தை விட்டு உலக அநுபவம் மிக்க கிழவிபோல அவனுக்கு அநுதாபம் கூற முற்பட்டாள்.

"என்ன மயூரசர்மரே, ஏன் முகம் வாட்டமாக இருக்கிறது?"

அதற்கும் அவன் சரியான பதில் கூறவில்லை. அதனால் அவள் மடியில் கிடந்த வீணையை எடுத்துக் கீழே வைத்து எழுந்து அவன் கையைப் பற்றிப் பக்கத்தில் உட்காரவைத்தாள்.

"என்ன நடந்தது, சொல்லுங்கள். நாங்கள் இருக் கும் போது நீர் எதற்காக வருத்தப்படவேண்டும்?" என்று பரிவுடன் கேட்டாள்.

மயூரன் எண்ணம் எல்லாம் அவன் ஆசிரியரது சோமயாகத்தைப்பற்றியே இருந்தது. அது நடக்க வேண்டிய நாளும் நெருங்கிவிட்டது. ரித்விக்குகளுக்கும் மற்றும் வேதம் அறிந்த பிராமணர்களுக்கும் அழைப்பு அனுப்பியாகி விட்டது. சிலருக்கு ஓலை அனுப்பினன். மற்றும் சிலருக்கு வாய்மொழியாகச் செய்தி அனுப்பினன். முக்கியமானவர்களை அவனே நேரில் சென்று பார்த்து அழைத்தான்.

திரவியங்களும் சேகரமாகிவிட்டன. அவற்றைக் கட்டிக் காப்பதே பெரிய தொல்லையாகி விட்டது. பொருட்சேதம் இல்லாமல் யாகம் இனிதே முடிய வேண்டும் என்ற ஏக்கத்துடன் இருந்த அவனுக்கு அந்தச் செய்தி பேரிடியைப்போல் இருந்தது.

'வஜ்ரபோதி முனிவர் அரசாங்கத்தே செல்வாக்குடைய விஷ்ணுகோபன் உதவியைக்கொண்டு யாகத்தை நிறுத்தி விட முயற்சி செய்து வருகிறார்' என்பதை அவன் கேட்டவுடன் அவன் தலை சுழன்றது. முதலில் அவன் அதை நம்பவில்லை.

அது எவ்விதம் உண்மையாக இருக்கக்கூடும்?

'சக்கரவர்த்தியின் மெய்க் காவலரான ஸ்கந்தவர்மருக்கு இந்த விஷயம் கட்டாயம் தெரிந்திருக்கும்' என்று நினைத்து அதைப்பற்றி விசாரித்துப் போகவே மயூரன் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

அதைத் தெரிந்துகொண்டவள் போலவே ரேவதி பேசியதைக் கேட்டதும் அவனுக்குக் கொஞ்சம் ஆறுதல் உண்டாகியது.

விஷ்ணுகோபனும் வஜ்ரபோதி முனிவரும் செய்து வந்த ஆலோசனை முழுதும் ரேவதிக்குத் தெரியும். எனினும் அவள் அதை வெளியிட்டுக் கூற முடியுமா?

"மயூரசர்மரே, ஏன் நீர் இப்படி ஸதா யாகத்தைப் பற்றியே கவலைகொண்டு ஏங்கி வருகிறீர்கள்? சிறிதும்

மனக்கலக்கம் கொள்ளாதீர்கள். அது வெற்றியுடன் பூர்த்தியாகும் வண்ணம் நாங்கள் உதவிசெய்வோம். நீர் பயப்படவேண்டாம்.''

இதைக் காட்டிலும் அவள் அதிகமாகக் கூற முடியாது. அதை மயூரனும் அறிவான். அதனால் அவன் கொஞ்சம் சாந்தம் அடைந்தான்.

எனினும், பயம் அவனை விடவில்லை.

# 9. யாகத்துக்கு இடையூறு

"மயூரா! அரசன் ஆணையைக் கேள்விப்பட்டாயா?"

வீரசர்மர் இவ்விதம் அவனைக் கேட்டதற்கு அவன் உடனே பதில் சொல்லவில்லை. அந்தக் கேள்வி ஓர் ஈட்டியைப்போல் அவன் இருதயத்தைத் துளைத்துச் சென்றது.

அதை அவன் முன்னமேயே கேள்விப்பட்டு விட்டான். அது பேரிடிபோல அவன் தலையில் விழுந்தது. எனினும் அவன் தன்னைச் சுலபமாகவே ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

அரசன் ஆணையை வெளியில் சொல்லாமல் ரகசியமாக வைத்துவிடலாம் என்றே தீர்மானித்து அவன் தன் ஆசிரியருக்கு அதைத் தெரிவிக்கவில்லை. ஆயினும் அது இப்போது வெளிப்பட்டுவிட்டது.

தான் மேலே செய்யவேண்டிய காரியங்கள் எவை என்பதைத் தீர்மானிப்பது ஒருபுறம் இருக்க, ஆசிரியருக்கு என்ன சமாதானம் கூறுவது என்பதையே அவன் யோசித்து வந்தான். அதுவே அவனுக்குப் பெருங் கவலையாகப் போய்விட்டது.

மயூரன் அந்த ஆணையை முற்றும் எதிர்பார்க்காமல் இல்லை. ஆனால் அது எந்த விதத்தில் கிளம்பும் என்பதையே அவன் அறியவில்லை. ஏதோ ஒன்று நிச்சயம் நடக்கும் என்பதை அவன் தீர்மானமாகத் தெரிந்து கொண்டான்.

அதற்குரிய அடையாளங்களும் தென்பட்டு வந்தன. சென்ற ஒரு வார காலமாக அவனது இடக்கண் இடைவிடாமல் துடித்துக்கொண் டிருந்தது. அதைத் தொடர

விடாமல் தடுத்துவிட என்னவெல்லாமோ செய்து பார்த்தான். அடிக்கடி கண்ணை மூடிச் சிந்தையை அடக்கி மனத்தை ஒருநிலைப்படுத்தி இருக்க முயன்று பார்த்தான்; சில சமயங்களில் அந்தக் கண்ணை நன்றாகக் கசக்கி நீரை வெளிப்படுத்தினான். இராக் காலங்களில் இடது பக்கமாகவே படுக்கையில் படுத்துக் கண்ணிமை களைத் தலையணையின் மீது நன்றாக அமுக்கித் துடிக்க வொட்டாதபடி செய்தான். ஆனால் அவை பலன் அளிக்கவில்லை. இயற்கையை எதிர்த்து வெற்றிகொள்ள அவனால் முடியவில்லை.

அவனுக்கு அவ்விதம் ஏற்பட்ட நிமித்தம் பொய்த் துப்போகவில்லை; உண்மையாகவே முடிந்தது. எதிர் பாராத அதிர்ச்சி ஒன்றை அடைந்தான் மயூரன்.

யாகத்துக்கு எதிராகப் பௌத்தர்கள் நகரத்திலே கிளப்பிவந்த கூச்சலை வீரசர்மரும் மயூரனும் அலட்சிய பாவத்துடனே தள்ளி வந்தனர். அவர்களுடைய ஆட் சேபங்களுக்குச் சமாதானம் கூறித் தங்கள் கட்சியை ஸ்தாபிக்க முயல்வதை வீண் வேலை என்றே கருதினார் கள் போலும்.

அது மட்டுமன்று. அந்த ஆட்சேபங்களுக்குப் பதில் அளிப்பதே அவற்றை முக்கியமானவைகளாகச் செய்துவிடும். அது மனிதனுடைய மனத்தத்துவம். அதைக் கவனியாமல் புறக்கணித்தால் தானாகவே எதிர்ப்பு ஓய்ந்துவிடும் என்றும் எண்ணியிருக்கலாம்.

எவ்வாறாயினும் பொதுமக்கள் அந்த விவாதங் களைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலைகொள்ளவில்லை. அவரவர் மதாசாரங்களைப் பிறர் குறை கூறுவது அவர் களுக்கே புதியதாக இருந்தது.

யாக ஆரம்பத்துக்குப் பதினைந்து தினங்களே இன் னும் பாக்கியிருந்தன. யாகசாலை, ஹோமகுண்டம் முத லியவற்றின் நிர்மாணம் பூர்த்தியாகிவிட்டது.

ஆனால் வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்துவிட்டது. மயூரன் யாரை மலையாக நம்பி வந்தானோ அந்தப் பெரியவர் திடீரென்று உலக வாழ்க்கையை நீத்துவிட்டார்.

மயூரனுக்கு ஆதரவு அளித்து வந்த பல்லவ சக்கரவர்த்தி இறந்துவிட்டார். நாடு முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது.

தன்னைக் கைதூக்கிவிட்ட அவர் திடீரென இறந்ததைக் குறித்து மயூரன் பெரிதும் வாடினான். ஆனால் அவர் அந்தச் சமயத்திலா இறந்திருக்க வேண்டும்? யாகம் பூர்த்தியாகி அவபிருத ஸ்நானம் ஆனபிறகு அவர் பரகதி அடைந்திருக்கலாகாதா? அப்போது புண்ணிய கருமத்தின் பலனை அநுபவிக்கலாமே என்று எண்ணினான் போலும். யாகத்தைச் செய்வோர் அன்றி அதை நடத்தி வைப்போர், வேறு பல வகைகளில் உதவுவோர் - ஏன், அந்த நாட்டிலே வசிக்கும் எல்லா ஜீவப்பிராணிகளும் - அந்த யஜ்ஞத்தின் பலனைக் கொஞ்சம் கொஞ்சம் அடைகிறார்கள் என்றும் யாகம் செய்வது நாட்டின் சுபிட்சத்தைப் பெருக்குவதாகும் என்றும் அவன் பூர்ணமாக நம்பியவன்.

வஜ்ரபோதி முனிவரோ சக்கரவர்த்தியின் மரணத்தைத் தமக்கு அநுகூலமாக உபயோகித்துக்கொண்டார்.

ஆம், பின்னால் நாட்டுக்கு ஏற்படப்போகும் துர்ப்பிட்சத்துக்கும் கேட்டுக்கும் முதல் அறிகுறியாக அதைப் பறை சாற்றினார் முனிவர். வீரசர்மர் நடத்த இருந்த யஜ்ஞத்திற்கான ஏற்பாடுகளே சக்கரவர்த்தியைக் கொன்று போட்டன என்று முனிவர் வாய் கூசாமல் பகிரங்கமாகக் கூறினார்.

பௌத்த பிக்ஷுவின் பழிச்சொல்லைக் கேட்ட நாட்டு மக்கள் திடுக்கிட்டனர்.

"யாக யஜ்ஞங்கள் இதுவரை நடக்கவில்லையா? இப்போதுதான் புதிதாக யாராவது செய்கிறார்களா? நம் முன்னோர் தலைமுறை தலைமுறையாக அவற்றை அநுஷ்டிக்கவில்லையா? ஏன், சக்கரவர்த்தியே ஒரு சமயம் யாக சங்கல்பம் செய்துகொண் டிருக்கிறாரே!......

"வஜ்ரபோதி முனிவர் கூற்று முழுப் பொய். அதை யார் நம்புவார்கள்? யாரோ ஒரு பிராம்மணன் யாகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்தால் அதனால் சக்கரவர்த்தி இறந்துவிடுவாரா?"

ஜனங்கள் இவ்விதமே அவர் பேச்சை ஏற்காமல் உதறித் தள்ளிவந்தனர். ஆனாலும் அந்தப் பழிச் சொல்லை அவர்கள் மறக்கக்கூடவில்லை. "இந்தக் காரியத்தைச் செய்தால் நிச்சயம் கெடுதி உண்டாகும். அதனால் அதை நீ செய்யக்கூடாது" என்று ஒருவன் ஓங்கி அடித்துக் கூறினால் அதை மறுத்து அந்தக் காரியத்தை விடாப்பிடியாகத் தொடர்ந்து முடிக்கும் தைரியம் பெரும்பாலோருக்கு இல்லை. நிமித்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அது ஏதோ ஓர் அப சகுனமாகவே தோற்றும். அதை எளிதில் அவர்கள் தட்ட மாட்டார்கள். ஒருவேளை பலவேறு காரணங்க ளால் அந்தக் காரியத்தை நிறுத்தாமல் செய்து முடித் தாலும் அந்த அவச்சொல் அவர்கள் மனத்தில் உறுத் திக்கொண்டே இருக்கும். இது மனித இயற்கை.

விஷ்ணுகோபனும் முனிவருக்கு உதவியாக இருக் கையில் கேட்க வேண்டுமா? காட்டுத் தீப்போலப் பரவியது அந்தப் பொய்க்கூற்று. அது ராஜகாத்தைச் சேர்ந்தவர்களிடையே ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

"மெய்யோ, பொய்யோ! இறைவன் திருவிளையா டலை யார் அறிவார்? என்றாலும் அந்தப் பழிக்கு இடம் கொடுப்பானேன்? தற்காலத்துக்காகவாயினும் யாகத்தை

நிறுத்திவிட்டால் என்ன? வேண்டுமானால் பின்பு ஒரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்."

இவ்விதம் பட்டதும் படாததுமாகச் சொல்லி வைத்தான் விஷ்ணுகோபன்.

இறந்துபோன கிழவருக்குப் பிறகு பல்லவ சிங்காதனத்தை அடைந்த புதிய சக்கரவர்த்தி இளைஞன். வாலிபத்தின் முறுக்குத் தளராமல் முழுமையும் பெற்றவன். விஷ்ணுகோபனுக்குப் பள்ளித் தோழன். அவ்விருவரும் இணைபிரியாச் சிநேகிதர்களாக விளங்கினர். இதனால் விஷ்ணுகோபனுக்குப் புதிய சக்கரவர்த்தியிடம் இருந்த செல்வாக்கைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. விஷ்ணுகோபன் சொன்ன யோசனை வீண் போகவில்லை. அதுவே அரசாங்கத்தின் கொள்கையாக மாறியது.

"யாகத்தை நடத்தக்கூடாது" என்ற தடைமொழியும் பிறந்துவிட்டது.

திரை மறைவில் ரகசியமாக நடந்து வந்த விஷயங்களையும் ஆலோசனைகளையும் மயூரன் அவ்வப்போது அறிந்து வந்தான். தனக்கு எதிராக விஷ்ணுகோபன் செய்து வந்த சதியைக் கேட்டு மிக்க ஆத்திரம் அடைந்தான்.

மயூரன் தன் ஆசிரியருக்கு எட்டாமல் எதை மறைத்துவைக்க விரும்பினானோ, அது அவருக்குத் தெரிந்துவிட்டது. இனி அதை ஒளித்து வைப்பதில் பயனில்லை.

"பிராம்மணர்களாகப் பிறந்து வைதிக தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நாம் நம்முடைய கர்மாக்களை விட்டுவிடலாமா? நாம் அவற்றைச் செய்யலாகாது என்று அரசன் தடை செய்ய முடியுமா?"

மயூரன் தன் உள்ளத்திலே அடங்கிக் குமுறிக் கிடந்த துக்கத்தையும் கோபத்தையும் இந்த நாலைந்து சிறு வாக்கியங்களிலே கக்கினான்.

அதைக் கேட்ட வீரசர்மர் திகைத்துவிட்டார். அவன் உள்ளக்கிடக்கையை எளிதில் உணர்ந்தார். ராஜ கரத்தின் ஆதரவு பெற்ற மயூரனா அவ்விதம் கூறுகிறான் என்று ஆச்சரியமும் அடைந்தார். மயூரன் என்னசெய்ய விரும்பினான்என்பதை அவர் எளிதில் கண்டுகொண்டார்.

சக்கரவர்த்தியின் கட்டளையை மீறி யாகத்தை நடத்துவது இயலுமா? அது சக்கரவர்த்தியை அவமதிப்பதாகுமன்றோ; ராஜத் துவேஷமாகாதோ என்றே பயந்தார் அவர்.

இரக்கமும் தயையும் ஆதரவும் பணிவும் பெற்றிருந்த மயூரனின் இருதயம் புண்பட்டுக் கல்லாக மாறி விட்டது. தான் செய்யவிருக்கும் காரியத்தின் விளைவு என்ன ஆகும் என்பதை அவன் கொஞ்சமும் யோசித்துப் பார்க்கவில்லை.

எவ்வாறாயினும் சக்கரவர்த்தியையே எதிர்க்க நேரிடினும் தான் எத்தகைய குற்றங்களைச் சுமந்தாலும் சிறிதும் அஞ்சாமல் யாகத்தைப் பூர்த்தி செய்து விடுவது என்ற திடமான வைராக்கியத்தை அடைந்தான் மயூரன். அதனின்றும் அவனைக் கலைத்து விடுவிப்பது முடியாது என்பதை வீரசர்மர் நன்றாக அறிவார்.

ஆனால் அதன் முடிவு என்னவாகும்?

## 10. மயூரன் வெற்றி

அரசன் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டான் மயூரன்.

அவன் அவ்விதம் செய்யத் தீர்மானித்தது தன்னுடைய மதிப்பும் கௌரவமும் குறைந்துபோய் விடும் என்ற பயத்தால் அன்று. வைதிக தர்மத்தை நிலைநிறுத்தித் தன் மதத்தைக் காப்பதற்காகவே யாகும்.

"அவரவர் அநுஷ்டித்து வரும் மதவிஷயங்களில் பிறர் தலையிட்டு அவற்றுக்குத் தடை உண்டாக்குவதை நாம் என்றைக்கும் அநுமதிக்க முடியாது. அதிலும் முக்கியமாக அரசாங்கத்தாரோ சக்கரவர்த்தியோ அவ்விதம் செய்யலாகாது. இன்றைக்கு ஒரு சிறு காரியத்துக்கு ஏற்படுவது நாளைக்கு மகத்தான விஷயத்துக்கும் நடக்கக்கூடும். ஆகவே அதைக் கட்டாயம் தடுத்துவிட வேண்டும்."

இப்படி மயூரன் நிச்சயித்ததைப் பலரும் ஆமோதித்தார்கள். வேதத்திலும் தரிசனத்திலும் விருத்தரான பண்டிதர்கள் அவனை ஆசீர்வதித்து எந்தச் சமயத்திலும் தாங்கள் உதவி செய்ய முன்வருவதாகத் தைரியம் கூறினர்.

மயூரனைச் சுற்றி எப்போதுமே அவன் சகபாடிகள் கூட்டம் ஒன்று உண்டு. அவர்கள் யாவரும் அவனுக்குப் பக்கபலமாக இப்போது நின்றனர். 'உயிரைத் தியாகம் செய்தாவது வைதிக கர்மாவை நிறைவேற்று வோம்' என்ற உறுதியைக் கொண்டனர் பலர்.

தன்னைக் கைதூக்கிவிட்ட அரசாங்கத்துடன் இந்த விஷயத்துக்காகப் போரிட வேண்டி நேர்ந்ததே என்று மயூரன் பெரிதும் மனவருத்தம் கொண்டான். அவன்

உள்ளத்தில் சாந்தி என்பதே இல்லை. 'காரியம் இனிது முடியவேண்டுமே' என்று சதா கவலை கொண்டு தவித்துக் கிடந்தான்.

சோமயாகம் ஒரே வேளையில் கொஞ்ச நாழிகைப் பொழுதில் முடிந்துவிடும் கருமம் அன்று. குறைந்த பட்சம் ஐந்து தினங்களாவது இராப்பகல் இடைவிடாமல் தொடர்ந்து நடத்தவேண்டியது. இடையில் விக்கினம் ஒன்றும் நேரிடக் கூடாது. தற்செயலாக ஏதேனும் நேர்ந்துவிட்டால் அதற்குப் பிராயச்சித்தம் செய்து மறுபடியும் விட்டுப்போனதைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

யாக ஆரம்பத்துக்கான ஆதான சங்கல்பத்தை வீர சர்மர் செய்துகொள்வதற்கு முன்னரே, ரேவதி யாக சாலைக்கு வந்துவிட்டாள். தீக்ஷித பத்தினிக்குத் தலையில் சாலகம் வைத்து, மயிரை வாரிப் பின்னி, பிறை, சுட்டி, கொட்டை முதலியவற்றைச் சூட்டி, மான்தோல் உடுத்து, தர்ப்பைக் கயிறு கொண்டு கட்டி அலங்காரம் செய்யும் பணியில் அவளும் ஈடுபட்டாள்.

அவளுக்கு அந்தக் காட்சி புதிதன்று. முன்னர் ஒரு சமயம் சக்கரவர்த்தி ஆதான சங்கல்பம் செய்து கொண்டு, 'இஷ்டி' நடத்தியபோது அவள் பக்கத்தில் இருந்து பார்த்திருக்கிறாள்.

யாகம் நடந்த அந்த ஐந்து நாட்களும் அவள் அங்கேயே தங்கிவிட்டாள். தீக்ஷித பத்தினிக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக்கொடுத்தாள். அதுமட்டுமல்ல; யாகசாலைக்கு வரும் பெண்மக்களை வரவேற்று உபசரிப்பதில் அவளும் முனைந்து நின்றாள். பெண்களுக்காக ஒதுக்கிவிடப்பட்டிருந்த பகுதி முழுவதையும் அவள் சுற்றிச் சுற்றிக் கண்காணித்து வந்தாள்.

முக்கியமான கட்டங்களாகிய வபாஹோமம், சுப்பிரமணிய உபாசனை ஆகிய சமயங்களில் அவள்

மெய்ம்மறந்து அந்தக் கர்மாவிலேயே லயித்து விட்டாள்.

அவளும் தீக்ஷையே கொண்டிருந்தாள் போலும். அவபிருத ஸ்நானத்துக்குப் பிறகுதான் அவளுக்கு மனச் சாந்தி ஏற்பட்டது.

சாம்ராஜ்யத்தின் ஆணையை உதாசீனம் செய்து மயூரன் யாகத்தை நடத்துவதை ராஜகரத்தார் நன்ருக அறிந்திருந்தனர். அது ரகசியமாகச் செய்யக்கூடிய கர்மா அல்லவே! தலைநகரத்தில் நடக்கும் அதை அவர்கள் அறியாமல் இருக்க முடியுமா?

"ராஜாங்கத்தின் உத்தரவையும் லட்சியம் செய்யாமல் யாரையும் அவமதித்து நடக்கும் அந்தப் பிராம்மணச் சிறுவன் திமிரைப் பார்த்தீர்களா? நாம் அவனுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு மரியாதையும் கௌரவமும் அளிக்கிருேமோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தலைமேல் ஏறுகிருன். அவனை உடனே அடக்கி ஒழித்தால் அன்றி நாட்டின் அமைதி பங்கப்பட்டுவிடும்."

விஷ்ணுகோபன் இவ்விதம் கூறியதைச் சக்கரவர்த்தி சிறு புன்சிரிப்புடன் கேட்டுக்கொண் டிருந்தாரே அல்லாமல் மறுமொழி ஒன்றும் கூறவில்லை.

மயூரன் நடத்தை அவர் மனத்தையும் புண்படுத்தியிருந்தது. அவர் உள்ளூறக் கோபம் கொண்டிருந்தார். எனினும் அவர் விஷ்ணுகோபனைப்போல அவ்வளவு ஆத்திரம் அடையவில்லை.

சக்கரவர்த்தி காலநிலையை நன்கு அறிந்தவர். ராஜகரத்தில் தம் தந்தையிடத்திலும் சாமர்த்தியசாலிகளான மகா சாமந்தர்களிடத்திலும் நல்ல பயிற்சி பெற்றுப் பண்பட்டவர். அவசரமாக எந்தக் காரியத்தையும் செய்துவிடமாட்டார்.

புதிதாக அரசுரிமையை ஏற்கும் எந்த அரசனும் குடிமக்களுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்வ

தையே தன் முதல் காரியமாகக் கருதுவான். குறிப்பிட்ட வரிகள் சிலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கொஞ்ச காலத்திற்காவது நீக்கிக் கொடுப்பான். பலவகையான தான தருமங்களைச் செய்வதனோடு குற்றவாளிகளை மன்னித்து விடுவிப்பதும் மரபு.

அவ்விதம் இருக்கப் புதிய சக்கரவர்த்தி தம் ஆட்சியை அம்மரபுக்கு விரோதமாகத் துவக்க மனம் கொள்ளவில்லை. அடக்குமுறையைத் தம் ஆட்சியின் முதற் காரியமாகச் செய்ய இஷ்டப்படவில்லை.

குடிமக்களின் மதவிஷயங்களில் தாம் தலையிடுவதை எவ்வளவு தூரம் அவர்கள் அநுமதிப்பார்கள் என்பதையும் அவர் நன்ருக அறிவார்.

வீரசர்மர் நடத்தவிருந்த சோமயாகத்தையும் தாற்காலிகமாக நிறுத்தி வைப்பது நல்லது என்ற தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாரேயன்றி, அதை நிறுத்திவிட வேண்டும் என்று அவர் தீர்மானமாக ஆணையிடவில்லை. எனினும் சக்கரவர்த்தியின் விருப்பத்தைக் குறிப்பறிந்து நடத்தி வைக்கப் பலர் காத்திருக்கையில் அவர் கூறியது அரசன் உத்தரவாக மாறி வெளிவந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

தன் விருப்பத்துக்கு மாருன காரியத்தைச் செய்யும் ஒருவனை எவனும் வெறுப்பான். அது மனித இயற்கை. சக்கரவர்த்தியும் அதற்கு விலக்கானவர் அல்லர். ஆயினும், அவர் தம் வெறுப்பை வெளிக்காட்டவில்லை. உள்ளூற வைத்திருந்து அதைச் செய்கையில் காட்டும் காலத்தையே எதிர்பார்த்திருந்தார்.

ஆம். அவர் மயூரனை அந்தச் சமயத்தில் ஒன்றும் செய்யக்கூடவில்லை. அவனைத் துன்புறுத்தி அடக்க அவர் முற்பட்டிருந்தால் அது பிரமாதமான கலகத்தை விளைவித்திருக்கும். நாட்டையே அலங்கோலப்படுத்தியிருக்கவும் கூடும். அதனல் அவர் சும்மா இருந்து

விட்டார். ஆயினும் அவனை மடக்கித் தம் வஞ்சத்தைத் தீர்க்கும் நாளை எதிர்நோக்கியே யிருந்தார்.

என்னதான் சக்கரவர்த்திக்கு அந்தரங்கமானவனுக இருந்தும் தன் அபிப்பிராயத்தை வற்புறுத்திக் கூற விஷ்ணுகோபனுக்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது.

அவன் உள்ளத்தைக் கவர்ந்து நிரந்தரமாக அங்கே இடம் பெற்றிருந்த ரேவதியும் அந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டிருந்தாள். அவனுல் அவளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அவள் விஷ்ணுகோபன் எண்ணத் துக்கு மாருக யாகசாலைக்குச் சென்று அங்கேயே தங்கி விட்டது அவனுக்கு ஒரு நீங்காக் கறையாக ஆகியது.

அப்போது ரேவதியை அவன் மணந்துகொண்டு விடவில்லை என்பது உண்மையே. அதனுல் அவளை அடக்கி நடத்த விஷ்ணுகோபனுக்கு ஆதிக்கம் இல்லை. எனினும் அவளுக்காவது புத்தி இருக்க வேண்டாமா என்றே அவன் எண்ணினுன்.

ஸ்கந்தவர்மரோ பழுத்த கிழவர்; நன்ருக உலகம் அறிந்தவர். விஷ்ணுகோபன் நடத்தை அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. என்ருலும் விஷ்ணுகோபனுடைய அந்தஸ்தை உத்தேசித்து அவர் இந்த விஷயத்தில் தலையிட விரும்பாமல் ஒதுங்கியே நின்றுவிட்டார்.

அவருக்கு மயூரனிடம் பூரணமான அநுதாபம் இருந்தது. அவனுக்கு வேண்டிய உதவியை அளிக்கவும் அவர் தயங்கவில்லை. ரேவதி அவ்விடம் சென்று யாக சாலைக் காரியங்கள் சிலவற்றை நிர்வகித்து நின்றது அவருக்கு அடங்காத மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவளுக்கு வேண்டிய ஊக்கம் அளித்து வந்தார் எனினும் அவர் அதிகமாக அங்கே போய்வரவில்லை. வபா ஹோமம் நடக்கும்போது மட்டும் அவர் சென்று ஒரு தரம் யாகசாலையைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டார். யாரையும் விரோதித்துக்கொள்ளாமல்

எல்லோருக்கும் நல்லவராக எஞ்சியுள்ள தம் வாழ்நாளைக் கழிக்க விரும்பிய அவர் வேறு என்ன செய்ய முடியும்? பிறருக்கு மனக் கசப்பு உண்டாக்கும் எந்தக் காரியத்தையும் அவர் செய்ய விரும்பவில்லை. முக்கியமாக விஷ்ணுகோபனுடன் அவர் கொண்டிருந்த உறவுக்கு எவ்விதமான பங்கமும் நேரிடக்கூடாது என்றே அவர் எண்ணினார்.

பெரிய இடங்களில் இத்தகைய மனக் குழப்பங்கள் ஏற்பட்டாலும் குடி மக்கள் அவற்றைக் கருத்தில் கொள்ளவேயில்லை. யாகம் மிக்க ஆடம்பரத்துடன் நடந்தேறியது. அவர்கள் அந்த விழாவில் குதூகலமாகக் கலந்துகொண்டு ஆனந்தம் அடைந்தனர்.

நிர்விக்கினமாகவும் வெற்றிகரமாகவும் எடுத்த காரியம் பூர்த்தியாகி அவபிருத ஸ்நானம் முடிந்ததைக் கண்ட மயூரன் உள்ளத்தில் பெருமிதம் கொண்டான்.

தனக்கும் ராஜகரத்தாருக்கும் இடையே எவ்வளவு தூரம் அது பிளவை உண்டுபண்ணிவிட்டது என்பதை அவன் அறிவான். ஆனால் அதைப்பற்றியோ அதனால் தனக்குப் பின்னர் நேரிடக்கூடிய கஷ்டங்களைப் பற்றியோ அவன் அஞ்சவில்லை. தர்மத்துக்காக உயிரை விடவும் தயாராக இருந்தான் அவன்.

## 11. வெந்த புண்ணில்...

விடியற்கால நேரம். அன்று அமாவாசைக்கு மறு நாள். உலகத்தையே இருள் கவ்விக்கொண்டிருந்தது.

சூரியன் உதிப்பதற்கு இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதுக்குமேல் இருந்தது. அருணோதயமும் புலப்பட வில்லை. இருள் அவ்வளவு செறிவுடன் மூடியிருந்தது.

மழைக்கால இருட்டு. அதனோடு சாரலும் ஊதலும் வேறு வீசிக்கொண் டிருந்தன. நடு நடுவே மழைத் துளியும் இரண்டொன்று விழுந்துகொண் டிருந்தது. மழையில் நனைவதைக் காட்டிலும் வாடையில் அடிபட்டு உடல் விறைத்துப் போவதைக் கண்டே யாரும் பயப்படுவர்.

அந்தச் சமயத்தில் பொதுவாக எவனும் தன் படுக்கையை விட்டு எழுந்திருந்து வெளிவர ஒருப் படமாட்டான். சூரியோதய சமயத்தில் படுக்கையில் இருக்கக்கூடாது என்னும் தர்மத்தை அநுஷ்டிப்பவர் களும் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பாமல் உள்ளேயே அடைத்துக் கிடந்தனர்.

ஆனல் எல்லோரும் அப்படியே இருந்துவிட முடியுமா?

நிலத்தை உழுது உடலை உழைத்து வயிறு வளர்க்க வேண்டிய உழவர்கள் தங்கள் பொழுதை வீணுக்க முடியாதே! அவர்களோ அந்தச் சமயத்தில்தான் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

ஆற்றுக்கால் பாய்ச்சலால் வரும் தண்ணீரையே ஓர் இரவுக்குமேல் அவர்கள் தங்கள் கழனிகளில் தங்க விடக்கூடாது. நீர் அதிகமாகத் தேங்கிவிட்டால் நாற்

றின் பசுமை மாறி வெளிர்நிறம் கொள்ளுவதுடன் சில சமயங்களில் வேரும் அழுகிப் பாழாகிவிடும்.

அவ்விதமிருக்க இரவெல்லாம் பெய்த மழையால் பெருக்கெடுத்து நின்ற ஜலத்தை வடியவிட அவர்கள் ஓடோடியும் செல்லவேண்டும். இந்தச் சிறிது நேரச் சிரமத்துக்குச் சோம்பினால் பின்னால் அவர்கள் வருஷம் முழுவதும் கஷ்டப்பட நேரிடுமன்றோ?

நகரத்தினின்றும் ஊர்ப்புறத்தே உள்ள வயல்களுக்குப் புறப்பட்டுச் செல்லும் உழவர்களையும் நன்றாக அறிய முடியாதபடி இருள் சூழ்ந்திருந்தது. பக்கத்தில் நெருங்கினால்தான் ஏதோ ஓர் உருவம் தெரியும். சற்றே எட்டப்போனால் ஒன்றுமே புலப்படாது.

சூறாவளி போன்ற சுழற்காற்று அடிக்கும் வேகத்தில் அவர்கள் நடமாடிய சப்தமே காதில் விழவில்லை. அப்படியிருக்க மயூரனைப் பின் தொடர்ந்து யாரோ ஒருவன் குதிரை மேல் சவாரி செய்து வருவதை அவன் அறிந்துகொள்ளாததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

அந்த நேரத்தில் மயூரன் ஆற்றினின்றும் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வந்துகொண் டிருந்தான். விடிய ஒரு ஜாமப்பொழுது இருக்கும்போதே அவன் எழுந்து வேகவதிக்கு நீராடச் சென்றுவிட்டான். இளமையின் வீரியத்தால் சிறிதும் வாடாத அவன் அந்தக் குளிர் காற்றையோ அந்தகாரத்தையோ லட்சியம் செய்யவில்லை.

சூரியோதய சமயத்துக்குள் கடிகைக்குத் திரும்பி உலர்ந்த வேஷ்டியை உடுத்துத் தன் கர்மாநுஷ்டானத்தைத் தொடங்க வேண்டும் என்ற ஒரே அவசரத்துடன் இருந்தான் மயூரன். அதனால் காற்றின் இரைச்சல் இல்லாவிட்டாலும் விஷ்ணுகோபன் தன்னைத் துரத்தி வந்ததை மயூரன் எளிதில் அறிந்திருக்கமாட்டான்.

விஷ்ணுகோபன் பக்கத்திலே வந்து குதிரையி னின்றும் கீழே இறங்கிய பிறகே அவனை யார் என்பதை ஏறிட்டுப் பார்த்து அறிந்துகொண்டான் மயூரன்.

"என்ன மச்சான், காண்பதே அபூர்வமாக இருக்கிறதே?"

இவ்விதம் கேட்டுக்கொண்டே விஷ்ணுகோபன் அவன் முதுகைத்தட்டித்தோளில்கையைப் போட்டான்.

மயூரன் இதை எதிர்பார்க்கவில்லை. அதனால் அவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

விஷ்ணுகோபனுடன் அவன் என்றைக்குமே சகஜமாகப் பழகியதில்லை. எப்போதுமே எலியும் பூனையும் போலத்தான். அப்படியானால் கேலியும் பரிகாசமும் செய்து விளையாடியிருக்கப்போகிறார்களா?

அன்றைத்தினம் விஷ்ணுகோபனது நடத்தையில் கேலியும் குறும்பும் நிறைந்திருக்கக் கண்டான் மயூரன். அவன் முகத்தை ஒருதரம் கூர்ந்து கவனித்தான். தன்னைக் கேவலமாக மதித்து அதனால் அலட்சியமாக வெறுப்புடன் நோக்கும் விஷ்ணுகோபன் பார்வையில் கேலிச் சிரிப்புத் தாண்டவமாடியது. அவன் முகத்தில் வெற்றியின் சிறு ரேகையும் படர்ந்து விளங்கியது.

ஆம்; தனக்கு வெற்றி கிட்டிவிட்டதாகவே விஷ்ணுகோபன் கருதிவிட்டான். அந்தச் சந்தோஷம் அவன் முகத்திலும் நடத்தையிலும் அப்படியே பிரதிபலித்தது.

ஏற்கனவே கோபத்தால் உள்ளூறக் குமுறி நின்ற மயூரன் அதைக் கண்டதும் பொறுமையை இழந்தான்.

"சீ, அற்பமே, கையை எடு. என்னைத் தீண்டாதே என்று உனக்கு எத்தனை தடவைதான் சொல்லுவது?"

கனலைக் கக்குவதுபோலக் கூறிவிட்டு அவன் தோளை ஒரு குலுக்குக் குலுக்கி விஷ்ணுகோபன் கையைக் கீழே உதறித் தள்ளினான்.

விஷ்ணுகோபன் தன்னைத் தீண்டியதால் குடிமுழுகிப் போய்விடவில்லை என்பதை மயூரன் நன்றாக அறிவான். ஆனாலும் அவனுக்கு அந்தச் சமயம் பொறுமை நிலைக்கவில்லை. அந்தச் சிறு நிகழ்ச்சி அவனுடைய அன்றைக் காரியங்களுக்குப் பெருத்த இடையூறாக வந்து நின்றது.

விஷ்ணுகோபனுக்கோ கொஞ்ச நேரம் முகத்தில் ஈயாடவில்லை. எனினும் அவன் தன்னைச் சட்டென்று சமாளித்துக்கொண்டான்.

“அடேயப்பா! வேஷம் பெரிதாக இருக்கிறதே! என்னைத் தீண்டாமல்தான் மல்யுத்தம் பயின்றீர்களோ? தீக்ஷிதர் ஆகிவிட்டால் பூர்வாசிரமத்தையே மறந்துவிடுவார்கள் போலும்.”

இவ்விதம் சொல்லிவிட்டு வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான் அவன்.

தான் கூறியது முன்னுக்குப் பின் விரோதம் என்பது அவனுக்குத் தெரியாததன்று. முதலில் மயூரன் யாகம் செய்யவில்லை. அதனால் அவன் தீக்ஷிதர் ஆக மாட்டான். அன்றி, பிரம்மசாரியான அவன் எவ்விதம் தீக்ஷிதர் ஆக உரிமை கொள்ளுவான்? ஆயினும் வேண்டும் என்றே விஷ்ணுகோபன் அவனைக் குத்தி வேடிக்கை பார்த்தான்.

மயூரனுக்குக் கோபம் அதிகரித்தது. ஆனாலும் அவன் விஷ்ணுகோபனுடன் அப்போது வாயாட இஷ்டப்படவில்லை. ‘திரும்பி ஆற்றுக்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்புவதா? அல்லது நேரே கடிகையை அடைந்து அங்கேயே இரண்டாம் தடவையாக ஸ்நானம் செய்வதா?’ என்றே யோசித்து நின்றான் அவன். எப்படியும் மறுபடியும் ஸ்நானம் செய்து தன்னைச் சுத்தம் செய்துகொள்ளாமல் அவன் நித்திய கர்மங்களைச் செய்ய முடியாது.

விஷ்ணுகோபனே அவனைச் சிறிது நேரம் சும்மா இருக்கவிடவில்லை. கிண்டிக் கிளறிக்கொண்டே இருந்தான்.

"என்ன மச்சான், வேஷம் ரொம்ப ஜாஸ்தியாகப் போட்டால், கல்யாணம் நடக்க வேண்டுமே? அங்கே ரேவதி உனக்காக உருகிப்போகிறாள். எப்போது எங்களுக்கு விருந்துச் சாப்பாடு?"

மயூரன் இதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான். கோபத்தால் கண்கள் சிவந்தன. உதடு துடிதுடித்தன. உடல் படபடத்தது. அதுதான் எல்லை. மேலே அவனால் பொறுக்க முடியவில்லை.

"என்ன? என்ன சொன்னாய்?"

இடி இடித்தது போல் கர்ஜித்தான் மயூரன். அந்தக் குரலின் உணர்ச்சி வேகமும் ரௌத்திராகாரமான அவன் தோற்றமும் விஷ்ணுகோபனுக்கு அச்சத்தை விளைவித்தன. அதனோடு அவன் பொறியும் கலங்கிவிட்டது.

பேய் அறை என்றே சந்தேகிக்கும்படியாக மயூரன் அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்துவிட்டான்.

ஆற்றிலிருந்து திரும்பி வரும்போது மயூரன் இடது கையில் தோய்த்துப் பிழிந்த ஈர வேஷ்டியையும் வலது கையில் தீர்த்தக் குடுக்கையையும் தாங்கிக்கொண்டு வந்தான். இந்தச் சச்சரவில் அவன் வேகமடைந்து அவற்றைக் கீழே சாலை மண்ணில் போட்டுவிட்டான்.

வலது கையால் விஷ்ணுகோபன் இடது கன்னத்தில் அறைந்துவிட்டுக் கோபம் கொஞ்சமேனும் குறையாதபடியால், திரும்பவும் இடது கையால் வலது கன்னத்திலும் ஓர் அறை கொடுத்தான்.

விஷ்ணுகோபனும் தீரன்தான். எனினும், திடீரென்று அவன் பட்ட அடி அவனைச் சிறிது திகைக்க

வைத்தது. தன் இரு கைகளாலும் அடிபட்ட இடங்களை அமுக்கிக்கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

அந்தக் கலக்கம் நீடிக்கவில்லை.

"என்ன? இந்தப் பார்ப்பனச் சிறுவனுக்கு இவ்வளவு திமிரா?" என்று எண்ணிக்கொண்டே அவனைத் தாக்கத் தயாரானான்.

மயூரனுக்கோ விஷ்ணுகோபனுடன் சண்டைபோட இஷ்டமில்லை. ஏதோ கோபத்தால் அப்போது அடித்துவிட்டானே யல்லாமல், மேற்கொண்டு ஒன்றும் செய்ய விரும்பவில்லை.

கீழே விழுந்த ஈரவேஷ்டியையும் தீர்த்தக் குடுக்கையையும் எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப் போய் மறுபடியும் ஸ்நானம் செய்துவிட்டு வரலாம் என்று எண்ணிய அவன் அவற்றைப் பொறுக்கக் கீழே குனிந்தான்.

அதுதான் சரியான சமயம். பக்கத்தில் கீழே உட்கார்ந்திருந்த விஷ்ணுகோபன் அவனுடைய கால்களை வாரிவிட்டு அவனைக் கீழே தள்ளிப் பதிலுக்குப் பதில் அடிக்கப்போனான்.

மயூரனும் சளைக்கவில்லை. இருவரும் சாலை மண்ணில் மழை ஜலம் தேங்கியிருந்த அந்தச் சேற்றில் கட்டிப் புரண்டனர். ஒவ்வொருவனுக்கும் மற்றவனை அந்த இடத்திலேயே கழுத்தை முறித்துக் கொன்றுவிடலாமா என்ற ஆத்திரம் இருந்தது.

ஆயினும் அவ்விருவருக்கும் இடையே பெரிய பிளவு ஒன்று இருந்தது. விஷ்ணுகோபனுக்கு மயூரனிடம் நீண்டகாலப் பகை இருந்து வந்தது உண்மைதான். ஆனால் அந்தச் சமயத்தில் அவன் பட்ட அடியைத் தவிர அவன் உணர்ச்சியைக் கிளறக்கூடிய சம்பவம் ஒன்றும் நடைபெறவில்லை.

மயூரனுக்கோ அவ்விதம் இல்லை. விஷ்ணுகோபன் கூறிய வார்த்தை அவன் இருதயத்தைச் சம்மட்டியால்

அடித்ததுபோலத் தாக்கி அப்போதும் ஒலித்துக் கொண்டே இருந்தது. இப்படித் துடுக்காக அவன் என்றைக்கும் நடக்காதபடி தக்க பாடம் ஒன்றைக் கற்பித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தால் துடித்துக் கொண்டிருந்தான் மயூரன்.

அது மட்டுமன்று. அந்தச் சண்டையில் மயூரனுக்குச் சாதகமான அம்சம் வேறு ஒன்றும் இருந்தது. விஷ்ணுகோபன் எப்படியிருந்தாலும் அரச குலத்தைச் சேர்ந்தவன். அதனால் தன்னை யாரும் கேவலமாக நடத்த மாட்டார்கள் என்ற இறுமாப்பு அவனுக்கு இருந்தது. அந்த நம்பிக்கைக்கு ஒரு பங்கம் ஏற்பட்டு அவன் மன உறுதி குலைய ஆரம்பித்தவுடன் தான் சிறந்தவன் என்ற உணர்ச்சியையும் அவன் இழக்க ஆரம்பித்துவிட்டான்.

அவர்களுக்குள் ஏற்பட்ட அடிதடி அதிக நேரம் நடக்கவில்லை. மயூரன் அவனை நையப் புடைத்துவிட்டான்.

"பழைய சம்பவங்களை நினைத்து உன்னை இவ்வளவோடு விடுகிறேன்; ஓடிப் பிழைத்துப்போ. இனி, இந்தப் பேச்சை எடுத்தால் இன்னும் என்ன செய்வேனோ, ஜாக்கிரதை!"

இதைச் சொல்லிவிட்டு மயூரன் ஆற்றுக்குத் திரும்பிவிட்டான்.

விஷ்ணுகோபனுக்கோ என்ன செய்வது என்று விளங்கவில்லை. அவன் அந்தக் கோலத்திலேயே ஊருக்குள் செல்லலாமா? அது அவனுக்குப் பெருத்த அவமானம் அன்றோ?

'அவனை விடக்கூடாது; எவ்விதமாவது மடக்கித் தொலைத்துவிட வேண்டும்' என்ற முடிவுடன் எழுந்தான் விஷ்ணுகோபன்.

# 12. எய்தவன் இருக்க

'இனி இந்த இடத்தில் தங்குவது நன்மையாக முடியாது. வீண்வம்பு ஏதாவது நேர்ந்துகொண்டே இருக்கும். என்றைக்காவது ஒரு நாள் அது ஆபத்தாக முடிந்துவிடும்' என்று மயூரன் நீண்ட நாளாகவே எண்ணி வந்தான். அது இப்போது உண்மையாகவே ஆகிவிட்டது.

விஷ்ணுகோபனை அவன் வெறுத்து வந்தது உண்மைதான். ஆயினும் அவனுடன் மயூரன் நேருக்கு நேராக விரோதம் கொள்ள விரும்பவில்லை.

துஷ்டர்களைக் கண்டால் தூர விலகி விடுவது நல்லதன்றோ? அதே கொள்கையைக் கடைப்பிடித்து அவன் விஷ்ணுகோபனை நெருங்காமல் ஒதுங்கி நின்று விட்டான்.

அது அவன் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது. எனினும் அதற்காக அவன் வருத்தம் கொள்ளவில்லை. தன் பிறப்புக்கும் நிலைமைக்கும் ஒவ்வாத அந்த ராஜ சுகத்து வாழ்க்கைத் தொடர்பைத் துறப்பதற்கு அவன் சிறிதும் தயங்கவில்லை.

யாக ஆரம்பத்துக்குச் சில நாட்கள் முன்னிருந்தே அவன் நகர மத்தியில் ராஜவீதியில் அமைந்திருந்த மல் யுத்தப் பயிற்சிக் கூடத்துக்குப் போவதை நிறுத்தி விட்டான். முதலில் அவன் மேற்கொண்ட வேலைத் தொந்தரவால் அவகாசம் கிடைக்காமல் போயிற்று. அப்பால் வரவர அவன் மனம் கசந்தது.

அந்தக் கூடத்தையோ அதன் அதிகாரியான ஸ்கந்தவர்மரையோ அவன் அப்படி நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக உதறித் தள்ள முடியாத பாசம்

ஒன்று அவர்களிடம் அவனைப் பிணைத்திருந்தது. ஆனால் அங்கே போனால் விஷ்ணுகோபனை அவன் அடிக்கடி பார்க்கநேரிடும். அவனுடன் விளையாடவும் வேண்டிவரும். அதை அவன் விரும்பவில்லை. அதனால் தனக்கு ஏதாகிலும் கெடுதி ஏற்படும் என்றே அவன் பயந்தான்.

அதற்காக மயூரனைப் பயங்கொள்ளி என்றோ கோழையென்றோ நாம் கூறி விட முடியாது. அவன் தனக்காகக் கவலை கொள்ளவில்லை. தன்னைச் சுற்றி இருந்த மற்றவர்களுக்காகவே, கடிகையில் இருந்தவர்களுக்காகவே அவன் அந்த வழியை மேற்கொண்டான்.

ஆனால் ஸ்கந்தவர்மர் அவனுக்குச் செய்திருக்கும் நன்றியை அவன் என்றைக்கும் மறக்க முடியாது. ரேவதியின் ஒத்தாசையும் உழைப்பும் இல்லாவிட்டால் யாகம் அவ்வளவு வெற்றிகரமாகப் பூர்த்தியாகியிருக்குமா? அதனால் அவன் ஒரொரு சமயத்தில் அவர்கள் மாளிகைக்குச் சென்று அளவளாவி வருவது மட்டும் வழக்கம்.

வீரசர்மருக்கு இந்த விஷயம் ஒன்றும் தெரியாது. அவன் முன்போலப் பயிற்சி பெறச் செல்லாததைக் கண்டு சில சமயங்களில் ஆச்சரியம் கொள்ளுவார்.

"ஏன், மயூரா, சஸ்திர வித்தைப் பயிற்சியை விட்டுவிட்டாயா? என்ன நடந்தது? சொல்லேன்? நீகூட இவ்விதம் முகம் வாடி, உடல் சோர்ந்து, மனம் தளர்ந்து உட்கார்ந்திருக்கக் காரணம் என்ன?"

இப்படிக் கேட்டுவிட்டார் அவர் ஒரு நாள். மயூரன் அவருக்கு என்ன பதில் சொல்லுவான்?

"ஆசாரியரே, பிராமணனாகப் பிறந்தவன் சஸ்திர வித்தையை ஜீவனோபாயமாகக் கொள்ளுவதற்காகவா பயில்வது? ஏதோ அந்த வித்தையையும் அப்பியசித்து வைக்கலாம் என்ற காரணத்தையன்றி வேறொன்றும் இல்லை."

இதைச் சரியான காரணமாக அவர் ஏற்கவில்லை. பிராமணன் சஸ்திர வித்தையை அப்பியசிப்பது புதிதன்று. துரோணர் முதலிய பூர்வாசாரியர்களைப் பற்றி மயூரன் அறியாதவன் அல்லன்.

அதனால், 'இவன் நடத்தையில் ஏதோ மர்மம் இருக்கிறது. இவன் பட்ட ஏதோ ஓர் அதிர்ச்சியை மறைத்துவைக்க முயல்கிறான்' என்பதை அவர் நன்றாக உணர்ந்துகொண்டார். எனினும் அதுவாக உள்ளே கிடந்து குமுறித் தானாக வெளியே வரட்டும் என்று ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டார்.

மயூரனால் சும்மா இருக்க முடியவில்லை. தன் ஆசாரியர் தன்னைத் தூண்டி மேலே கேட்காமல் மௌனம் சாதித்தது அவனைச் சங்கடத்தில் கொணர்ந்தது.

'பாவம். உண்மையை அறிந்திருந்தால் அவர் இவ்விதம் நடந்துகொண் டிருக்கமாட்டார். எனக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்திருப்பார். நானே அவரிடம் எல்லாவற்றையும் தெரிவித்துவிட்டால் என்ன?'

இவ்விதம் அவன் எண்ணியதும் உண்டு. ஆனால் அவன் மனம் ஒப்பவில்லை. தாம் நடத்திய யாகம் காரணமாக இவ்வளவு பூசல் விளைந்ததே என்று எண்ணி ஏங்கி அவர் தவிப்பதைக் காண மயூரன் பொறுக்க மாட்டான்.

* * *

வரவர அவன் உள்ளம் வேறுவிதமாக எண்ணித் தவிக்க ஆரம்பித்துவிட்டது.

'பிராமணனாகப் பிறந்த ஒருவன் குருகுல வாசம் செய்து வேதாத்தியயனத்தைப் பூர்த்தி செய்தால் என்ன? அவன் தன் வாழ்க்கையை அமைதியாக

நடத்த முடியாதே! அவன் தர்மத்தினின்றும் துளி கூட வழுவாமல் முறையுடன் வாழ விரும்பினால் என்ன? நெறியுடன் நேர்மையாக வாழ முடியுமா? அவன் வாழ்க்கை க்ஷத்திரிய தர்மத்தையன்றோ பொறுத்திருக்கிறது? அரசன் தன் கடமையைச் சரியாகப் பின்பற்றுவிட்டால், அவன் நெறியினின்றும் வழுவினால் பிராமண தர்மம் என்ன ஆகும்? உலக வாழ்வுக்கு க்ஷத்திரிய தர்மமே முதன்மையானது. பிராமணன் என்ன செய்ய முடியும்?'

இதையே எண்ணிப் புழுங்கினான் அவன்.

ஆம். அரசன் தன் கடமையை மறந்ததால் அன்றோ இந்நிலை ஏற்பட்டது?

எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்ன? அரசன் மயூரனை ஒன்றும் செய்துவிடவில்லையே. விஷ்ணுகோபன்தானே இவ்வளவுக்கும் காரணம்?

ஆனால் இப்போது மயூரனுக்கு விஷ்ணுகோபனுடன் தீராப் பகை மூண்டுவிட்டது. அது எளிதில் தீரக்கூடியதன்று. அதனின்றும் தப்புவதற்கு ஒரே வழிதான் உண்டு. அவன் ஊரைவிட்டு ஓடி மறைந்து போக வேண்டியது.

'ஒருவேளை மயூரன் இந்தமாதிரி செய்துவிடுவானோ?' என்று விஷ்ணுகோபனும் பயந்தான். அதற்குள்ளாகவே அவன் மயூரனைக் கட்டிப் பிடித்து ஒழித்துவிட வேண்டும் என்றே தீர்மானித்தான்.

அது அவனுடைய நிலையில் இருப்பவனுக்குக் கஷ்டமானதன்று; மிகவும் எளிதானதே. பல்லவ சாம்ராஜ்யத்தின் குதிரைப் படைத்தலைவனான விஷ்ணுகோபனை எவ்விதமான யோக்கியதையும் இல்லாமல் குறும்பு பிடித்த நாடோடியாகத் திரியும் அந்தப் பார்ப்பனன் வழியில் மடக்கித் தாக்கித் துன்புறுத்தியது பெருங் குற்றமன்றோ? ராஜ குடும்பத்தைச் சேர்ந்த

அவனை அவ்விதம் நடத்தியது ராஜத்துவேஷ மாகாதா? அரசாங்கம் அவனுக்காகப் பரிந்து உதவிக்கு வராமல் நின்றுவிடுமா?

அந்த உதவியைத்தான் விஷ்ணுகோபன் கோரினன். நீதி ஸ்தலமான தர்மாலயத்தின் பக்கபலம் அவனுக்கு இருக்கும்போது இந்த அற்ப விஷயத்துக்காக அவன் கலங்க வேண்டுமா? நீண்ட நாளாக யோசித்துச் செய்யும் வகையறியாமல் திணறிய விஷ்ணுகோபனுக்கு இப்போது தன்மேல் குற்றம் இல்லாமல் பழி முழுவதையும் மயூரன் மீது சாற்றிப் பிறர் குறைகூற இடமில்லாமல் அவனை ஒழித்துவிடும் சந்தர்ப்பம் கிட்டியது.

மயூரனா அதற்குப் பயப்படுவான்? ராஜகாரத்துச் சேவகர்கள் மயூரனை நீதி ஸ்தலத்துக்கு அழைத்துச் செல்ல வந்தபோது அவன் கண்டிப்பாக வர மறுத்து விட்டான். அதற்குக் காரணங்கள் இல்லாமலும் இல்லை.

ஆனால் எவ்வளவு தூரம் அவன் வெற்றி பெறுவான் என்பதை யார் கூற முடியும்?

# 13. தீர்மானம்

மயூரன் பேசும் சக்தியற்று நின்றான். அவனுக்குத் தொண்டை காய்ந்து நா வறண்டு போயிற்று. மனத்தில் அடங்கிக் கிடந்ததை வெளியில் கொட்டி ஆறுதல் பெறும் வகையை அவன் அறியவில்லை.

மனத்தை உருக்கும் காட்சியாகவே இருந்தது அது. 'இவ்வளவு சீக்கிரம் மயூரனைப் பிரிய நேரிடும்' என்பதை ஸ்கந்தவர்மர் கனவிலும் கருதியதில்லை. அந்தச் செய்தியே அவருக்குப் பேரிடிபோல இருந்தது.

மயூரன் காஞ்சீபுரத்தை விட்டுத் தன் தேசமான குந்தளத்துக்குச் செல்வதை ஸ்கந்தவர்மர் விரும்பவில்லை.

"மயூரா, இந்த அற்ப விஷயத்துக்காகவா பயந்து ஊருக்குப் போய்விடப் போகிறாய்? சிறிதும் அஞ்சாதே. தைரியமாகத் தலை நிமிர்ந்து நில். விஷ்ணு கோபன் என்ன செய்துவிடக் கூடும்?"

உற்சாகமூட்டும் வார்த்தைகளை அவர் சொன்னார். ஆனால் அது பயன் அளிக்காது என்பதை அவர் நன்றாக அறிவார்.

"தாங்கள் அவ்விதம் நினைக்கலாகாது. நான் கொஞ்சமும் பயப்படவில்லை. ஹிந்து தர்மத்தைக் காத்து நிலை நிறுத்தவேண்டும் என்பதையே நான் என் வாழ்க்கையின் லக்ஷ்யமாகக் கொண்டுவிட்டேன். நான் இவ்விடம் தங்குவது அரசர்க்குச் சிறிதும் பயன்படாது. அதற்கு மாறாகப் பெருந் தடையாகவும் நேரிடலாம். ஆகவே என்னைத் தடுக்காதீர்கள்."

"நான் உன்னைத் தடுக்கவில்லை. உன் நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய உதவி புரியவே சித்தமா யிருக்கிறேன்."

ஸ்கந்தவர்மர் இவ்விதம் கூறியது மயூரனுக்குப் பெரிதும் ஆறுதல் அளித்தது. முன்னோர்கள் பாரம்பரையாக அநுஷ்டித்து வந்த ஹிந்து தர்மத்தில் ஊறிய பழுத்த கிழவரான அவர் தெய்வ பக்தி மிகுந்தவர். அவர் ஆதிமுதலே மயூரனுக்கு ஊக்கமளித்து வந்திருக்கிறார். அவர் உதவி இல்லாதிருந்தால் வீரசர்மர் சோமயாகம் இனிதே நிறைவேறி யிருக்காது.

"தாங்கள் எனக்குச் செய்யும் உதவிக்கு நான் என்றென்றைக்கும் தங்களுக்குக் கடமைப்பட்டவனாவேன்."

அவன் மனத்தே தோன்றிய உணர்ச்சி வேகத்தில் அவனுக்கு இதற்கு மேலே அதிகமாக ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

தான் மேலே செய்ய வேண்டிய காரியங்களை ஆலோசித்து ஒரு வகையாக மனத்தே நிச்சயம் செய்து வைத்திருந்தான் மயூரன். நீண்ட நாளாக யோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கும் வர முடியாமல் இருந்த அவனுக்கு இப்போது திடீரென்று நேரிட்ட சந்தர்ப்பம் சீக்கிரமாக நிச்சயத்தைக் கொடுத்தது.

'ராஜாங்கத்தின் ஆணையைச் சிறிதும் மதியாமல் உல்லங்கனம் செய்தது மதியீனமேயாகும். அவ்விதம் செய்திருக்கக் கூடாது' என்று ஒரு சமயம் எண்ணினான் மயூரன்.

காலைச் சுற்றிய பாம்புதான் அது. அவன் எங்கே சென்றாலும் அவனை விடாமல் துரத்திச் சென்று பற்றிக் கொள்ளும். தற்கால சாந்தியாகத் தப்பிக்கொள்ளலாமேயன்றி, நிரந்தரமாக அதற்குக் கீழ்ப்படிவதனின்றும் அவன் தன்னைக் காத்துக்கொள்ள முடியாது.

ஆனால் மயூரனே தனக்கும் விஷ்ணுகோபனுக்கும் ஏற்பட்ட சச்சரவு விஷயமாக நடக்கும் விசாரணைக்குத் தான் செல்வதில்லை என்று தீர்மானித்துவிட்டான். அந்த விசாரணையின் முடிவு தனக்குப் பாதகமாகவே இருக்கும் என்பதை அவன் நிச்சயமாக அறிவான்.

என்னதான் தன் கட்சியை எடுத்துக் கூறித் தான் தவறு ஒன்றும் இழைக்கவில்லை என்று வாதாடினாலும் தனக்கு ராஜத்துரோகக் குற்றத் தண்டனை விதிக்கப்படும் என்பது உறுதி. காரணங்களை விவரிப்பானேன்?

நீதி ஸ்தலத்தாரும் விடவில்லை. மயூரனைக் கைப் பிடியாக அழைத்து வரும்படி ஆணையிட்டுப் போர் வீரர்களை அனுப்பிவிட்டனர். கீழ்ப்படிந்து வர மறுத் தால் கட்டித் தூக்கியாவது வந்து சேரவேண்டும் என் பதே அவர்களுக்கு உத்ரவு.

யமகிங்கரர்கள் போன்ற அவர்கள் தங்கள் கடமை யைச் சிறிதும் நழுவ விடமாட்டார்கள். பாதாளத்தில் புகுந்துகொண்டாலும் தேடிப்பிடித்துச் செல்வர். மயூரன் அவர்களுக்குத் தப்பித் தலைமறைவாக ஓடத் தீர்மானித்தது ஆச்சரியமே!

அரசன் ஆணைக்குப் பயந்து ஓடும் அவனுக்குப் புக லிடம் எங்கே கிடைக்கும்? பல்லவ ராஜ்யத்தினுள்ளே அவன் ஆபத்துக்களைத் தாண்டி உயிர்வாழ முடியுமா?

அவன் உள்ளம் இருந்த நிலையில் தீவிரமாக எதை யும் ஆலோசிக்க இயலாமல் அந்தச் சமயம் செய்ய வேண்டியது என்ன என்பதையே எண்ணினான். 'இப் போது தப்பிவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். தெய்வம் வழிகாட்டும்' என்றே நினைத்தான்.

அவ்வளவு சீக்கிரமாக நகரத்தை விட்டு எப்படி ஓட முடியும்?

அவன் பிரமசாரியே; அதுவும் வித்தியார்த்தி; வேதாத்தியயனமும் பூர்த்தியாகிவிட்டது. சம்சார பந்தம் ஒன்றும் இல்லை; கால்கட்டு இல்லை; இல்லா

விட்டாலும் அவனை அதுகாறும் போற்றி வளர்த்து ஆதரித்த ஆசிரியர்களுக்கு ஒன்றும் தெரிவிக்காமல் போவதற்கு அவனால் எளிதில் கூடவில்லை.

வீரசர்மர் எப்போதும் கடிகையிலேயே இருப்பார். ஆகவே அவரிடம் தான் புறப்படும்போது செய்தியைக் கூறினால் போதும். தவிர, லௌகிக விஷயங்களில் அதிகப் பரிசயம் இல்லாத அவரிடம் இதைப்பற்றிக் கடைசியில் தெரிவிப்பதே மேல் என்று எண்ணினான் மயூரன்.

ஆனால் ஸ்கந்தவர்மர் விஷயம் அப்படியன்று.

பிக்ஷை எடுத்து வயிறு வளர்த்துத் திரிந்த அவனை உருவாக்கித் தலைநிமிர்ந்து நிற்கும் சக்தியளித்து ஒரு பரவியையும் உதவிய அவரை மயூரன் அவ்விதம் நினைக்க முடியுமா?

'நாம் செய்வது தெய்வத்தின் முன்னிலையில் நியாய விரோதமாக ஆகாது' என்பதை நிச்சயமாக அறிந்தால் ஸ்கந்தவர்மர் எந்த விதமான உதவியையும் செய்ய முன்வருவார். அது மயூரனுக்குத் தெரியும். அதனாலேயே அவரை அந்தரங்கமாகப் பார்த்துத் தன் காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணினான் அவன்.

அவனை அங்கே இழுத்த காந்தம் வேறொன்றும் உண்டு. ஆனால் அவன் அதை அறியான். அது அவன் உள்ளத்திலே அடங்கிக் கிடந்தது. அதுவரையில் தலையெடுக்காமல் புதைந்து கிடந்த அந்த உணர்ச்சியை அவன் சிறிதும் உணரவே இல்லை.

ஆம், ரேவதியை அவன் அப்போதும் குழந்தையாகவே மதித்திருந்தான். அவள் பேதைப் பருவத்தைத் தாண்டி மாறுதல் அடைந்து மங்கையாக விளங்கினாள் என்பதைக் கண்ணால் கண்டும் அவன் அறியவில்லை. அவனுக்கு அதைப்பற்றி யோசிக்கப் பொழுது கிடைக்கவில்லைபோலும்.

## 14. வனவாசம்

தங்களிடையே புதிதாக வசிக்க வந்தவனைப் பார்த்து மயங்கினர் மலை ஜாதியினர் யாவரும்.

ஆழ்ந்த அறிவைக் குறிக்கும் பரந்த நெற்றி, கருணை பொங்கும் குளிர்ந்த பார்வையுடைய கண்கள், கானகத்துக் கொடும் புலியே வந்து தாக்கியபோதிலும் அஞ்சாத உள்ளம், எந்தப் பொருளின் மீதும் விருப்பு வெறுப்பு இல்லாமல் கொண்டுள்ள சம நோக்கைத் தெரிவிப்பதேபோல எப்போதும் முகத்தில் தவழும் புன்னகை, திரண்டு உருண்ட அங்கங்களையுடைய திடமான சரீரம், யாவரையும் வசீகரிக்கும் முகமண்டலம், தேககாந்தி இவைகளைப் பெற்ற மயூரனை அவர்கள் போற்றியதில் வியப்பே இல்லை

அவன் வாழ்ந்து வந்த குடிசைக்குக் கதவோ பூட்டோ ஒன்றும் இல்லை. எந்த வேளையிலும் திறந்தே கிடக்கும். காட்டு வழியே போவோர் வருவோர் யாவரும் அந்த இடத்திற்குள் தாராளமாக நுழைந்து தங்கி இளைப்பாறிச் செல்லலாம்; பொழுது போய்விட்டால் அந்த இடத்தில் இராப்பொழுதைக் கழித்து விடியற்காலையில் புறப்பட்டுப் போகலாம். ஒருவரும் தடை செய்ய மாட்டார்கள்.

காட்டு விலங்குகள் அவ்விடத்தில் வந்து உபத்திரவம் விளைவிக்கா. அவனும் அவற்றைக் கண்டு மிரண்டு போகவில்லை. அவன் எதற்காகப் பயப்பட வேண்டும்? மடியில் கனமிருந்தால் அல்லவோ வழியில் பயம்? அவனோ ஏகாங்கி; நிச்சிந்தையாகக் காலம் கழிக்க விரும்பியவனேபோல அந்தக் குடிசையில் வாழ்ந்து வந்தான்.

இரண்டொரு சமயங்களில் வேங்கைகள் வழிதவறி அந்தப் பக்கம் வருவதுண்டு. ஆனால் மயூரனுடைய ஒளியைக் கண்டு மயங்கியோ என்னவோ அவை இடையூறு ஒன்றும் விளைவிக்காமல் தாமாகவே போய்விடும்.

அவன் அவ்விடம் நிரந்தரமாக வாழ்வதற்கு ஏற்பாடுகள் செய்தான். குடிசை கட்டினன். பக்கத்தே சிறு நிலத்தைப் பண்படுத்தி முக்கியமாக வேண்டிய இரண்டொரு செடிகளைப் பயிரிட்டான்.

அருகில் ஓடும் காட்டாற்றில் ஸ்நானம் செய்து தன் நித்திய கர்மங்களைச் செய்வதும், ஒழிந்த வேளைகளில் காட்டிலே கண்ட இடங்களில் திரிந்து இயற்கை அன்னையின் தோற்றத்தைக் கண்டு மகிழ்வதுமாகத் தன் காலத்தைக் கழித்து வந்தான் அவன். முதலில் சில நாட்கள் அவனுக்கு அந்த வாழ்க்கை கஷ்டமாக இருந்தது. ஆனல் நாள் ஆக ஆக அதுவே அவன் மனத்துக்கு ரம்மியத்தை அளித்தது.

மலை ஜாதியினரும் மயூரனை அன்புடனேயே ஆதரித்து வந்தனர். அது அவர்கள் பூமி. பிறர் யாருக்கும் அந்த இடத்திலே கொஞ்சமும் உரிமை இல்லை. அவர்கள் இஷ்டம் இல்லாமல் ஒருவரும் அந்த இடத்தில் புக முடியாது. மயூரனை முதல் முதலாகக் கண்டதுமே அவர்கள் அவனை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

காஞ்சிபுரத்தினின்றும் வெளியே வந்த அவன், ‘என்ன செய்கிறோம், எந்த இடம் போகிறோம்?’ என்ற தீர்மானம் இல்லாமல் கால் சென்ற வழியே நடந்து போனன். அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்ற ஆத்திரம் கொண்டிருந்த அவனுக்கு எந்த இடம் போனல் என்ன? எல்லாம் ஒன்றுதான். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று சான்றோர் கூறியதற்கு லட்சியப் பொருளாக இருந்தது அவன் நடத்தை.

தமிழ் நாட்டின் வட எல்லையாக அமைந்திருந்த மலைத் தொடர்ச்சி தக்ஷிணத்தின் கீழ்ப்பாகத்தைச் சமீபிக்கும் இடம் அடர்த்தியான காடுகளையும் சிறு மலைச் சிகரங்கள் சிலவற்றையும் கொண்டு அழகுடன் மிளிர்ந்தது. ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மூலகர்த்தாவான சிவபெருமான் தெய்வசாந்நித்தியம் கொண்டு விளங்கும் ஸ்ரீசைலமலை அந்த இடத்தில் பிரதானமானது. மயூரன் அந்த மலையைச் சேர்ந்த காட்டை அடைந்தான். செஞ்சுக்கள் என்ற மலை ஜாதியினர் இன்றைக்கும் அங்கே வசித்துவருகிறார்கள்.

அவனுக்குத் தன் சொந்த தேசமான குந்தளத்தை அடையச் சிறிதும் விருப்பம் இல்லை. புகழுடன் திரும்பினால் அன்றோ அங்கே போகலாம்? அவமானம் அடைந்து தலைமறைவாகத் திரியும் அவனுக்குத் தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்தை எட்டிப் பார்ப்பதற்குத் துணிவு உண்டாகுமா?

யாராக இருந்தாலும் தங்கள் பிரதேசத்தை அடைந்தவர்களுக்குப் புகலிடம் அளித்துக் காப்பாற்றுவது இயற்கை விதிகளை அநுசரித்து உயர்ந்த வாழ்க்கை நடத்தும் மலை ஜாதியினர் தர்மம். அதனைச் செய்வதினின்றும் அவர்களை யாரும் தடுக்க முடியாது.

முதலில் அதிதியாக வந்த அவன் பிற்காலத்தில் அவர்களே போற்றி வணங்கப் போகும் பெரிய அரசனாவான் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதனை அவர்கள் அறிந்திருந்தாலும் அதனால் அவர்கள் நடத்தையில் எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டிருக்காது. காலக்கிரமத்தில் காஞ்சீபுரத்தினின்றும் புறப்பட்ட அவன் ஸ்ரீசைல பர்வதத்துக்கு வந்ததைத் தங்களுக்குக் கிட்டிய பாக்கியமாகவே கருதினர் மலைஜாதியினர்.

அவனுடைய புகழும் பெருமையும் காட்டுக்குக் காடு பரவியது. ஒரு சித்த புருஷன் என்றே அனைவரும் அவனைக் கொண்டாடினர்.

ஆணோ பெண்ணோ கிழவனோ குமாரனோ யாராக இருந்தாலும் தங்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைத் தீர்த்து வைக்கும் சக்தி வாய்ந்தவன் மயூரனைத் தவிர வேறு ஒருவனும் இல்லையென்ற அபிப்பிராயம் நிச்சயமாக ஏற்பட்டிருந்தது.

அப்புறம் கேட்பானேன்? அவர்கள் அவனைச் சும்மா விடுவார்களா? அவன் குடிசையைச் சுற்றிச் சதா ஒரு சிறு கூட்டம் எப்போதும் கூடிவிட்டது. அவன் உள்ளக் குறிப்பை அறிந்து அவற்றைச் செய்து முடிக்கவும் அவர்கள் காத்திருந்தனர்.

ஆம், மயூரன் மலை ஜாதியினரிடையே ஏக சக்ராதிபத்தியம் செலுத்திவந்தான் என்றே கூற வேண்டும். அவன் விருப்பமே ராஜ ஆக்கினைபோல நடந்து வந்தது.

அவ்விதம் ஒருவன் வாழ்ந்துவந்தால் அது எவ்வளவு காலம் ரகசியமாக இருக்கும்? அதை ரகசியமாக மறைத்து வைக்க யாரும் விரும்பாமல் அவன் புகழைப் பறையறைவது போலப் பரப்பியும் வந்தால்?

வெகு சீக்கிரம் காஞ்சீபுரத்துக்குச் செய்தி எட்டியது. விஷ்ணுகோபன் அதைக் கேட்டுச் சும்மா இருப்பானா?

## 15. ரேவதியின் தவிப்பு

"ஏன் அப்பா, மயூரசர்மர் இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போய் நீண்ட காலம் ஆகிவிட்டதே! அவரைப்பற்றிய செய்தி ஒன்றுமே தெரியாதா?"

இவ்விதம் கேட்டாள் ரேவதி. ஆனால் ஸ்கந்தவர்மரோ அதற்குப்பதில் சொல்லவில்லை. அவர் திடுக்கிட்டுப் போய்விட்டார். தம் குமாரத்தியை ஒரு தரம் விழித்துப் பார்த்துவிட்டு நுனிவிரலால் தம் வாயைப் பொத்திச் சாடை காண்பித்தார்.

அப்போது இரவு பத்து நாழிகைப் பொழுது இருக்கும். அவர்கள் தங்கள் மாளிகையின் மேல்மாடத்தில் அமர்ந்து இயற்கை இன்பத்தை நுகர்ந்துகொண்டிருந்தனர்.

ஸ்கந்தவர்மர் அந்த ஆனந்தத்தில் முழுகி வெளி உலகத்தை மறந்திருந்தார். ரேவதியின் மனமோ அதனை அநுபவிக்கவில்லை. எங்கெங்கேயோ சஞ்சரித்தது. அவள் பழைய நாள் சம்பவங்களை நினைத்துப் பார்த்து மெய்ம்மறந்திருந்தாள்.

மயூரனைப்பற்றிய எண்ணம் அவளுக்குத் திடீரென்று உண்டாகவில்லை. அவன் நகரத்தைத் துறந்து வெளியேறிய தினம் முதல் அவனை ரேவதியால் மறக்கவே முடியவில்லை.

'பாவம், அவர் எந்த எந்தக் கஷ்டங்களை அநுபவிக்கிறாரோ?' என்று சதா அவள் ஏங்கினாள். அவனுக்கு நேரிடக்கூடிய சுகதுக்கங்களைத் தன் மனக்கண்ணால் உருவகப்படுத்திப் பார்த்தாள்.

ராஜாங்கத்தின் ஆணைக்கு உட்படாமல் தலைமறைவாகத் திரியும் அவனுக்கு ஏற்படக்கூடிய ஆதரவைக்

காட்டிலும் கஷ்டங்களே அதிகமாக இருக்கும் என்று பட்டது அவளுக்கு.

மயூரன் என்னதான் உயர்குலத்தில் பிறந்தவனு யினும் சிறந்த அறிவாளியாயினும் அவனுக்குத் தக்க பாதுகாப்புக் கிடைக்காது என்றே அவள் பயந்தாள்.

தன்னந்தனியனுக ஆறுதல் கூறுபவரும் இல்லா மல் அவதிப்பட வேண்டிய அவன் நிலையைக் கண்டு அவள் இரங்கினுள்.

ஆனுல் அவள் என்ன செய்ய முடியும்? தன் உள் ளக் கதவை யாருக்கு எப்படித் திறந்து காட்ட முடியும்?

அவன் அநுபவிக்கும் ஒவ்வொரு கஷ்டத்தையும் தானே நேரில் ஏற்று அவதிப்படுவதே போன்ற உணர்ச்சியுடன் அவள் காலந் தள்ளிவந்தாள்.

இதைப்பற்றித் தந்தையிடம் விவரமாக விசாரிப்ப தற்கு அவளுக்குத் தைரியம் இல்லை. பருவ மங்கை யான கன்னிப் பெண் ஒருத்தி என்னதான் இருந்தா லும் இளம் வயதுடைய ஒருவனைப்பற்றி அக்கறை கொள்வது உசிதமாகுமா? அதுவும் அவள் அந்த விஷ யத்தைச் சகஜபாவத்துடன் தன் தந்தையிடமே கேட்க லாமா?

*　　　*　　　*

விஷ்ணுகோபன் ஒருவிதத்தில் அவளுக்கு உதவி செய்யக்கூடிய நிலையிலே இருந்தான். ஆனுல் அவள் அவனிடம் மயூரனைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள் வதில்லை என்று உறுதி கொண்டுவிட்டாள்.

ஆம், அவனுல் அன்றோ மயூரன் பஞ்சமாபாதகம் செய்தவன்போலத் தலைமறைந்து திரியலாயிற்று. அதற் காக அவள் விஷ்ணுகோபனை அறவே வெறுக்கவும் தலைப்பட்டாள்.

இதற்கு முன்னும் அவளுக்கு விஷ்ணுகோபனிடம் அதிகமான பிடிப்பில்லை என்பது உண்மைதான். ஆனால் அவளுக்கு அவன்மீது விரோதம் உண்டாகவில்லை. இப்போதோ அவள் அவனைத் தன் ஜன்ம சத்துருவாகவே கருதத் தலைப்பட்டாள். விஷ்ணுகோபனோ அவளுக்கு மாறான மன அமைதியைப் பெற்றிருந்தான். தனக்குப் போட்டியாக வந்து முளைத்தவன் ஒழிந்து போனான் என்ற மனச் சந்துஷ்டி அவனுக்கு இருந்தது. அதற்கு வேண்டிய முயற்சிகள் யாவற்றையும் முன் கூட்டியே யோசித்துக் கிரமமாகச் செய்து முடித்தாகிவிட்டது. வைக்கோல் போரின் அடியில் கொள்ளியை வைத்தால் பிறகு அது பற்றி எரிவதைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

இவ்விதம் நடத்தியதற்குப் பதிலாக அவன் இஷ்டப்பட்டிருந்தால் மயூரனுக்கு ஆதியிலேயே உதவியிருந்திருக்கலாம். அதற்கு வேண்டிய பதவி, அந்தஸ்து, செல்வாக்கு எல்லாம் அவனுக்கு இருந்தன. ஆனால் பொறாமைத் தீ அவன் மனத்தை நன்றாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

மயூரன் தொலைந்தால் ரேவதி அவனைப்பற்றிய எண்ணங்களை அறவே மறந்துவிடுவாள் என்று நினைத்த விஷ்ணுகோபன் ஏமாந்து போனான். அவன் எதிரில் இருப்பதாலேயே அவனைச் சிலாகித்துப் பேசுகிறாள் ரேவதி என்று அவன் கருதியது தவறு.

மயூரன் நகரத்தில் இருந்தபோது அவனைப்பற்றி அவள் அதிகம் சிந்திக்கவில்லை. இப்போதோ சதா சர்வகாலமும் அவனுடைய நினைவே.

அதை மாற்றுவதற்காக விஷ்ணுகோபன் எதை வேண்டுமானாலும் செய்து முடிக்கச் சித்தமாக இருந்தான். ரேவதியின் உள்ளத்தைக் குளிர்வித்துத் திருப்தி செய்ய அவன் இந்தச் சமயத்தில் வேண்டுமானால் மயூரனுக்கு உதவி செய்யத் தயாராக இருந்தான் என்றும்

சொல்லலாம். ஆனால் அவளா அவனைக் கேட்பாள் இதைப்பற்றி?

தன்னைச் சுற்றியிருந்தோர் இவ்விதம் இருக்க ஒருவரிடமும் தன் உள்ளக் கருத்தை வெளியிட முடியாமல் மறுகித் தவித்தாள் ரேவதி.

'பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும். இரவில் அதுவும் கூடாது.' ஸ்கந்தவர்மர் இந்தக் கொள்கையை அநுஷ்டிப்பவர். மயூரனைப்பற்றிய வரையில்தான் இப்படி.

தாம் பேசுவதைப் பிறர் கேட்டிருந்து ஒன்றுக்குப் பத்தாகத் திரித்துக் கூறி அபாயத்தை உண்டாக்குவாரோ என்று பயந்தார். சாதாரணமாக அவர் எந்த விஷயத்துக்கும் அப்படித் தயங்கமாட்டார்; ஆனால் மயூரன் விஷயத்தில் மட்டும் அப்படித் தயங்குவானேன்?

* * *

ராஜகரத்தின் ரகசியங்கள் முழுமையும் அவருக்குத் தெரியும். அவர் அறியாமல் அரண்மனைக்குள் பெரிய ஆலோசனையோ அந்தரங்கமான காரியமோ ஒன்றும் நடந்துவிடாது. அவர்கள் மயூரனை நிர்மூலமாக்கச் செய்துவரும் ஏற்பாடுகளையும் அவை ஒவ்வொன்றும் ஏன் சிதறிப் போகிறது என்பதையும் அவர் நன்ருக அறிவார்!

அவரோ ஆதிமுதலே மயூரன்மீது தவறு சிறிதும் இல்லையென்றே கருதி வந்தார். இளமையின் முறுக்கிஞல் ஏதோ இரண்டொரு வேளைகளில் கொஞ்சம் படபடப்புடன் நடந்துவிட்டானேயன்றி, உள்ளத்தில் கள்ளங்கபடு அற்ற குழந்தைபோன்றவன் அவன் என்பதை அவர் நிச்சயமாக அறிவார்.

தாம் பேசும்போது ஏதாவது தவறி அவன் நடத்தையை ஆதரித்து எதையாவது வெளியிட்டால் அது

ஒருவேளை அவனுக்கு ஆபத்தாகவும் போகக்கூடுமோ என்று அஞ்சினார்.

அவன் விஷயமாக அவர் ரேவதியிடம் எப்போதும் பேசுவதில்லை. தாமாக ஏன் அவள் மனத்தைப் புண் படுத்த வேண்டும் என்று எண்ணினார் போலும்!

அன்றைத்தினம் அவள் தன்னையும் மீறித் தந்தை யைக் கேட்டுவிட்டாள்.

ஸ்கந்தவர்மர் முதலில் தயங்கினாரேயன்றி அப் பால் ஒன்றையும் ஒளித்து வைக்கவில்லை.

"குழந்தாய், நாம் அதைப்பற்றிப் பேசுவதற்கு இந்த இடம் செளகரியமானதன்று. கீழே இறங்கிவா. வீட்டுக்குச் செல்வோம்" என்று கூறி அழைத்துப் போய்விட்டார்.

ஆதியோடந்தமாக அவருக்குத் தெரிந்த விஷயம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார் ஸ்கந்தவர்மர். அவர் மனத்தில் இருந்த பாரமும் சிறிது குறைந்தது போலும்.

ஸ்ரீசைலமலைப் பக்கத்தே காட்டு ஜனங்களின் நிக ரற்ற தலைவனாக மயூரன் விளங்குவது காஞ்சீபுரத்துக்கு வெகு சீக்கிரம் எட்டிவிட்டது. அதனைக் குலைத்து அவனை அடக்க ராஜாங்கத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் அவை எப்படிச் சீர்குலைந்தன என்பதை யும் அவர் கூறினார். திறந்த வாய் மூடாமல் அதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தாள் ரேவதி.

## 16. பெரும்பாணன்

மயூரன் நடவடிக்கைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் தகவல்கள் அவ்வப்போது தலைநகரத்துக்கு வந்துகொண்டிருந்தன. பல்லவ சாம்ராஜ்யத்தின் ஒற்றர்கள் அவ்வளவு திறமையுடன் ஜரூராக வேலை செய்துவந்தனர்.

அவன் தலைநகரத்தை விட்டுப் புறப்பட்ட பிறகு, சிறிதுகாலம் வரையில் அவனைப்பற்றிய விஷயம் ஒன்றுமே தெரியாமல் அவஸ்தைப்பட்டனர் அவர்கள். அந்தத் தொல்லை நீண்ட நாள் இருக்கவில்லை.

கொஞ்சங் கொஞ்சமாக ஸ்ரீசைலமலைப் பக்கத்திலிருந்து செய்திகள் ராஜகரத்தின் செவிகளில் விழுந்தன. அந்தப் பிரதேசத்தை நிர்வகித்து வந்த பெரும்பாணன் சும்மா இருக்க முடியுமா? அவன் விஷயத்தைத் தலைநகரத்துக்கு எட்டாமல் மறைத்துவைக்கவும் முடியாது. அவ்விதம் செய்தால் அது பிற்பாடு அவனுக்கே பேராபத்தாகவும் வந்து முடியக் கூடும்.

காட்டுக்குக் காடு பறந்து எல்லாருக்கும் தெரிந்த விஷயம் அப்பிரதேசத்தை நிர்வகித்து வந்த பெரும்பாணனுக்கு எட்டவில்லை யென்றால் அதனை அதிகாரிகள் ஒப்புக்கொள்வார்களா?

ராஜத் துரோகியுடன் அவனும் சேர்ந்துவிட்டான் என்றே அவர்கள் அநுமானிப்பது மட்டுமல்ல, தீர்மானித்தும் விடுவார்கள். அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கலாகாதே. அதனாலேதான் அவன் முதல் முதலில் விஷயத்தைத் தலைநகரத்துக்கு எட்டவைத்தான்.

பெரும்பாணனுக்கும் பல்லவராஜ வமிசத்தினரிடம் அளவற்ற ராஜபக்தியோ யஜமான விசுவாசமோ இல்லை. அவர்களுக்கிடையே இருந்த பழைய விரோதம் ஒன்றும்

சிறிது அவனிடம் தலைதூக்கி நின்றது. தனக்கு நல்ல காலம் எப்போது வரும் என்பதையே எதிர்நோக்கி நின்றான் பாணன்.

மூவுலகங்களையும் தந்து, காத்து, கடைசியில் அழிக்கவும் சக்தி வாய்ந்த முக்கண்ணனாகிய பரம சிவனே ஒரு சமயம் தங்கள் கோட்டை வாயிற் காப் போனாக நின்ற பெருமை வாய்ந்த குலத்தில் பிறந்த அவன், இப்போது தன் பிதுரார்ஜிதமான சொத்தை இழந்து நின்றான். அதுமட்டுமா? முன்னோர்கள் ஏகசக்க ராதிபதிகளாக ஆண்டு வந்த நாட்டின் ஒரு பகுதியை, அதுவும் நாகரிகமற்ற காட்டு மக்கள் வாழும் பிரதேசத் தைப் பல்லவர்களின் கீழ் ஒரு சிற்றரசனாகப் பரிபாலிக் கும் நிலைக்கு வந்துவிட்டான்.

பெரும்பாணன் வகித்துவந்த பதவியைப் பிறர் கண்டு எள்ளி நகைக்கலாம். ஆனால் அதைப்போன்ற பதவியால் அவன் நோக்கம் நன்கு நடைபெறுவதற்கு ஏற்ற சாதனங்கள் பல அவனுக்குக் கிடைத்தன.

ஒரு சாம்ராஜ்யத்தின் எல்லைப் புறத்தே வாழ்ந்து வரும் காட்டு மக்களுக்கு அபாரமான செல்வாக்கு உண்டு. அவர்களை யாரும் விரோதித்துக்கொள்ள மாட்டார்கள். காட்டு மக்களையே ராஜாங்கத்தார் அன்புடன் நடத்தி வருவர். அவர்களாலன்றோ மலையும் காடும் நல்ல நிலையில் இருந்து நாட்டு மக்களுக் குப் பெரும் பயனைக் கொடுத்து வருகின்றன. நாட்டின் வளப்பத்துக்கு இன்றியமையாததான பெரு மழை காட்டின் சிறப்பையே பொறுத்திருக்கிறதன்றோ?

அது மட்டுமன்று. இரு நாடுகளுக்கும் இடையே இயற்கை அரணாக அமைந்திருக்கும் காடுகளில் வாழும் மக்கள் எந்தச் சாம்ராஜ்யத்துக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்களோ அவர்களே பலசாலிகள். விரோதி கள் அந்த நாட்டுக்குள் புகுந்து மக்களைத் தன்புறத்திப்

பொருள்களைச் சூறையாடா வண்ணம் அந்தக் காட்டு மக்களே பாதுகாத்து நிற்கின்றனர்.

பாணர்கள் பழம் பெருமையை இழந்து நாலைந்து தலைமுறைகள் ஆகிவிட்டன. முதல் இரண்டு தலைமுறைகளில் அவர்கள் தங்களுக்கு நேரிட்ட அவமானத்தால் உள்ளங் குமுறி அடிபட்ட புலியைப்போல் உறுமிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் வஞ்சமே தலைதூக்கி நின்றது. பல்லவ சாம்ராஜ்யத்தைக் கவிழ்த்துத் தங்கள் குலப் பெருமையை நிலைநிறுத்தும் நன்னாளை எதிர்பார்த்து நின்றனர்.

ஆனால் மனித இயற்கை மறதியுள்ளது. அல்ப சுகம் கண்டாலும் அதை அநுபவிக்கவேண்டும் என்னும் ஆசை கொண்டது. ஒரு தரம் சுகம் அநுபவித்து விட்டால் மறுபடியும் அதைத் துறந்து கஷ்டத்தை அநுபவிக்க மனம் வராது.

மனித சுபாவம் ஒரே மாதிரியானதன்று. வீரன் மகன் வீரனாகவே திகழ்வான் என்பது உறுதியன்று; அவன் கோழையாகவும் இருப்பான்.

பெரும்பாணனுடைய பாட்டனை அவ்விதம் கூறுவதற்கில்லை. அவனோ வஞ்சத்தை வஞ்சத்தாலேயே வெல்ல வேண்டும் என்று நினைத்தான். வைரத்தை அறுக்க வைரந்தானே வேண்டும்?

அவன் தன் குல வைரத்தை மறந்தான். அவன் உண்மையில் மறந்தானோ இல்லையோ, வெளிக்கு வேஷம் நன்றாகப் பலித்தது. அபரிமிதமான் ராஜபக்தி கொண்டு சிறிது காலத்திற்குள்ளாகவே பல்லவ சாம்ராஜ்யத்தின் தாசனாக மாறிவிட்டான்.

சுற்றத்தார் அவனை ஏளனம் செய்தனர். பேடி என்றும் குலத்தைக் கெடுக்க வந்தவன் என்றும் ஏசினர். ஆனால் அதற்கு அவன் கொஞ்சமும் செவிசாய்க்கவில்லை; காரியத்திலேயே கண்ணாக இருந்தான்.

தன்னைச் சக்கரவர்த்தியின் அபிமானத்துக்குப் பாத்திரமானவனாகச் செய்துகொண்டான். அவருடைய அந்தரங்கத்தைப் பெற்றான். தன் பராக்கிரமத்தை வெளிக்காட்டிப் பதவிகளை அடைந்தான். கடைசியில் ஸ்ரீசைலமலைப் பிரதேசத்தின் அரசுரிமையும் வழங்கப் பெற்றான்.

*     *     *

ஆம், பழம்பெருமையை இழந்து அதிகாரம் ஒன்றும் இல்லாமல் வாழ்வது கிழடுதட்டிப் பல் விழுந்த சிங்கத்தின் வாழ்க்கையைப் போன்றதே. அப்போது அவனை ராஜவிசுவாசம் உள்ள பழைய இரண்டொருவரைத் தவிர வேறு யார்தாம் மதிப்பர்? அவ்விதம் உயிர் வாழ்வதால் மனக்கசப்பு அதிகரிக்குமேயன்றி அவனது ஜீவிய லட்சியம் ஈடேற வழி ஒன்றும் கிடைக்காது.

அதனாலேயே அவன் தனக்கு ஏற்படும் அவமானத்தையும் தன் பெயருக்கு உண்டாகும் இழுக்கையும் பொருட்படுத்தாமல் உத்தியோகம் ஏற்றான். காரியத்தின் சித்தியையே லட்சியமாகக் கொண்ட அவன் அதை அடைய வேண்டிய வழிகளைப் பிரமாதமாகக் கருதவில்லை.

அவன் விருப்பமும் பூர்த்தி பெற்றது. சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்துக்குத் திறவுகோலாக அமைந்திருந்த ஸ்ரீசைலமலையின் ஆதிக்கம் அவனுக்குக் கிடைத்தது. ஆனால் கருத்திற் கொண்ட காரியத்துக்கு அடிப்படை அமைப்பதற்குள்ளாகவே அவன் காலம் முடிந்துவிட்டது.

பெரும்பாணன் தன் பாட்டன் கொள்கையையே பின்பற்றி அவர் அபிலாஷையை முடித்துவைக்க முயன்று வந்தான். அந்தச் சமயத்திலேதான் மயூரன் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

பெரும்பாணனும் இளைஞன்; சற்றேறக்குறைய மயூரனுக்குச் சம வயது உள்ளவன். பருவ ஒற்றுமையும் ஒத்துக்கொண்டது. அவன் மயூரன் கஷ்டத்துக்கு இரங்கி அவனிடம் அநுதாபம் கொண்டான். அவனுக்கு உதவி செய்யவும் தயாராக இருந்தான். அதனால் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு இடையூறு நேரிடும் என்பதே போதுமானதாக இருந்தது பெரும்பாணனுக்கு.

விஷயம் வெளிக்குத் தெரிந்துவிட்டாலோ பேராபத்து நிச்சயம். அதற்கு மட்டும் அவன் தயாராக இல்லை; அவ்வளவு துணிவும் உண்டாகவில்லை போலும். அதனால் அவன் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ள நேரிட்டது.

ராஜகரத்து ஒற்றர்களுள் பெரும்பாலோர் பெரும்பாணன் ஆணைக்கு அடங்கியே வேலை பார்த்து வந்தனர். யமன் அறியாமல் உயிர் போகாது. தான் அறியாமல் வேறு விதமாகத் தலைநகரத்துக்குச் செய்தி ஒன்றும் போகாது என்றே பாணன் தைரியமாக இருந்தான். ஆம்; அவன் கொடுக்கும் விஷயங்களும் அவன் கையாட்கள் சொல்லும் செய்திகளுமே சாம்ராஜ்யத்தின் ஒற்றர்களுக்கு எட்டும் என்று நம்பினான்.

ஆனால் சிற்றரசர்களுக்கும் சாமந்தர்களுக்கும் தெரியாமல் ராஜாங்கத்தார் நேரடியாகவே நாட்டினுள் அனுப்பி வைத்திருந்த ஒற்றர்கள் அனுப்பும் செய்தியைப்பற்றிப் பெரும்பாணன் அறிந்துகொள்ள மார்க்கமில்லாமல் போய்விட்டது.

மயூரனுக்கோ பக்கத்தில் தனக்குக் கிடைக்கக் கூடிய பெரிய உதவி இருக்கும் விஷயமே தெரியாது. அவன் பெரும்பாணனைப் பார்க்காமலேயே காட்டு மக்களிடையே வாழ்ந்து வந்தான். அந்த அமைதியான வாழ்க்கை நீண்ட நாள் நடக்காது என்பதை மட்டும் அவன் திண்ணமாக அறிந்திருந்தான்.

## 17. பிரிவாற்ருமை

நான் எந்த நோக்கத்தைக் கொண்டு நகரத்தைத் துறந்து வனவாசத்தை மேற்கொண்டானே அது கை கூடும் நாளையும் அதை முடிப்பதற்கான வழி வகைகளை யும் யோசித்தே நாளைக் கழித்துவந்தான் மயூரன். அது முடியும் வரையில் உலக வாழ்வில் நேரிடும் இன்ப துன் பங்களைக் கருத்திலே கொள்ளாமல் துறவிபோலவே ஜீவிப்பது என்று உறுதியும் கொண்டான் அவன்.

எனினும் நடுநடுவே சென்றுபோன நாட்களைப் பற்றிய நினைப்பு உண்டாகி அவனைத் துன்புறுத்தும். காஞ்சீபுரத்திலே தான் விட்டு வந்தவர்களின் க்ஷேம லாபங்களை அறிய வேண்டும் என்னும் ஆவல் அவனுக்கு அடிக்கடி உண்டாகும்.

"வீரசர்மரும் ஸ்கந்தவர்மரும் இப்போது உடன் இருப்பார்களாகில் என் எண்ணம் ஈடேறுவது எவ்வ ளவு சுலபமாக முடியும்?" என்று அவன் அடிக்கடி எண்ணி வந்தான்.

ஆம்; அவர்கள் அங்கே மயூரனுக்குப் பக்கபல மாக இருந்தார்கள். இப்போதும் அப்படித்தான் இருக் கிருர்கள். எனினும் அவர்கள் எங்கேயோ தூரத்தில் அன்ருே இருக்கிருர்கள்? அவ்வப்போது யோசித்துச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு அவர்களைக் கலந்து கொள்ள அவனுல் முடியாதே!

மயூரனைப்போலவே அவர்களும் சதா அவனைப் பற்றிக் கவலைப்பட்டே வந்தனர்.

வீரசர்மர் அவனைச் சிறுபிராயமுதல் தம் குடும் பத்தில் ஒருவனுகச் சேர்த்து வளர்த்துக் கல்வி

போதித்து வந்தவர். அவன் இப்போது அடைந்திருக்கும் அறிவு வளர்ச்சி அவர் அன்பு கூர்ந்து அளித்ததே.

வீரசர்மரைக் காட்டிலும் அவருடைய பத்தினிக்கே மயூரன் பிரிவு அதிக வருத்தத்தைக் கொடுத்தது. அவள் மயூரனைத் தன் மகனேபோல் ஏற்று வளர்த்தவள். அடங்காப் பிடாரியான சுட்டிப்பிள்ளையாயினும் அவன் தன் குரு பத்தினியைப் பெரிதும் மதித்து நடந்துவந்தான். அவள் மனம் நோகும்படியாக எந்தக் காரியத்தையும் அவன் செய்யமாட்டான்.

*　　　*　　　*

ஸ்கந்தவர்மருக்கோ உலகத்தின்மீதே வெறுப்பு உண்டாகிவிட்டது என்று சொல்லலாம். நிரபராதியான மயூரன் இத்தகைய துன்பங்களை அநுபவிக்க நேரிட்டதைக் கண்டு அவர் மனம் ஆத்திரமடைந்து குமுறியது. ஆனால் அவர் என்ன செய்ய முடியும்?

ராஜாங்கத்தார் செய்யும் காரியங்களைத் தாம் அங்கீகரிக்கவில்லை என்னும் ஆக்ஷேபத்தைச் சொல்லலாமே தவிர அவற்றைத் தடுக்கும் சக்தி இல்லாதவராக இருந்தார். அப்படியிருக்க அவர் மறுப்புக்களை அதிகாரிகள் எங்கே கவனிக்கப் போகிறார்கள்?

பழைய சக்கரவர்த்தியோடு ஸ்கந்தவர்மருடைய செல்வாக்கும் போயிற்று என்றே சொல்லலாம். அவருக்கும் வயதேறிவிட்டபடியால் அவர் தம் பதவிகள் யாவற்றையும் துறந்துவிட்டார். ஒரு வானப்பிரஸ்தர் போலவே ஆனால் கானகத்துக்குச் செல்லாமல் நகரத்தில் தம் மாளிகையிலேயே சாந்தமான வாழ்க்கையை நடத்தி வந்தார்.

'பெருங்காயம் வைத்த பாண்டம்' அவர். அவர் பழம் பெருமையும் செல்வாக்கும் குடிமக்களிடையே நிலைத்தே நின்றன. அவர்கள் ஸ்கந்தவர்மரைக் கௌரவித்தே வந்தனர். அவருடைய முதுமைப் பருவமும்

அவர் பெற்றிருந்த அநுபவமும் அதற்குத் துணையாக இருந்தன.

ரேவதியோ கடலில் அகப்பட்ட துரும்புபோல் அலைக்கப்பட்டு நொந்தாள். மயூரனை எண்ணி ஒரு சமயம் உருகுவாள்; விஷ்ணுகோபனைக் கண்டு மற்றொரு சமயம் கனலைக் கக்குவாள். சக்கரவர்த்தியின் அசக்தியை நினைத்து இரங்குவாள், ஒருவேளை.

அவள் எதைப்பற்றி நினைத்தாலும் திரும்பத் திரும்ப அந்த எண்ணம் மயூரனைப் பற்றியதாகவே வந்து முடியும்! அவளால் அவனை ஒருபோதும் மறக்க முடியவில்லை. அவனைப் பிரிந்து ஒரு கணமும் தான் உயிர்வாழ முடியாது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

* * *

மங்கை ஒருத்தி ஆடவன் ஒருவனிடம் கொள்ளும் காதலாகப் பரிணமிக்கவில்லை ரேவதியின் உள்ளம். அவளுக்கு அத்தகைய உணர்ச்சி ஏற்படவில்லை; பழகிய தோஷத்தால் அவனுக்கு நேரிட்ட கஷ்டத்துக்கு அவள் படும் பச்சாத்தாபமே போலும்.

ஆனால் அவள் தன் அபிப்பிராயத்தைத் தந்தையாரிடம் எப்படித் தெரிவிப்பது என்பதை அறியாமல் தவித்தாள் அப்படியே சொன்னாலும் அவர் அதை எவ்விதம் ஏற்றுக்கொள்ளுவாரோ என்றும் பயந்தாள்.

'தன் செய்கை மயூரனுக்கு உதவியாக அமைவதற்கு மாறாக விரோதமாகப் போய்விட்டால் என்ன செய்வது?' என்ற பயமும் அவளுக்கு இருந்தது. அந்த அவஸ்தையை எவ்வளவு நாள்தான் அவள் பட முடியும்?

எதற்கும் முடிவு காலம் ஒன்று உண்டு. அவ்விதம் இருக்க மயூரன் துன்பத்துக்கு மட்டில் முடிவில்லாமல் போகுமா? என்றைக்காவது ஒரு நாள் அது நிச்சயம் ஒழிந்துபோகவே போகிறது. ஆனால் அது எந்த விதத்

தில் இருக்கும் என்பதை அப்போது அறிந்துகொள்ள முடியவில்லை.

அப்படியும் நாம் நிச்சயமாகக் கூற முடியுமா? பெண் மனத்தை அறிந்தவர்கள் யார்? மயூரனுக்கு வெற்றி நிச்சயம் கிட்டும் என்பதையும் அது எந்த விதத்தில் இருக்கும் என்பதையும் அவள் முன்னதாகவே அறிந்துவிட்டாளா?

# 18. கன்னிப் போர்

அவர்கள் முதலில் நம்பவில்லை. 'கோழியடிக்கக் குறுந்தடி எதற்கு?' என்றே நினைத்தனர். ஆனால் அவர்கள் எண்ணப்படி ஒன்றும் நடக்கவில்லை.

மயூரன் ஏகாங்கியான பின்பே உணர்ந்தான். அவனுக்குப் பக்கபலமாகக் காட்டுஜனங்கள் உதவி நின்றனர். போதாக்குறைக்குப் பெரும்பாணன் வேண்டிய ஒத்தாசைகளை நேரில் செய்யாவிடினும் மறைமுகமாகச் செய்யக் காத்திருந்தான்.

ஒற்றர்கள் அந்தச் செய்திகளை விவரமாகவே தலைநகரத்துக்குத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் தலைவன் அந்தக் குறிப்புக்கு அதிக மதிப்பு வைக்கவில்லை. மயூரனைப் பிடித்து வருவதற்குப் பிரமாதமான ஏற்பாடுகள் தேவையில்லை என்றே நினைத்தான். அவன் வார்த்தைக்கே மதிப்பு இருந்தது. பலர் அதை ஆமோதித்தனர்.

விஷ்ணுகோபனுக்கோ அது பிடிக்கவில்லை. மயூரன் நிராயுதபாணியாக நின்றாலும் அவனை எளிதில் சிறை செய்துவிட முடியாது என்பதை அவன் அறிவான். தான் அவன் பிடியில் அகப்பட்டுக்கொண்டு முன் ஒரு தரம் அவதிப்பட்டதைப் போலப் பிறரும் கஷ்டப் பட்டால் அல்லவா மயூரன் திறமையை அவர்கள் ஊகிக்க முடியும்! இவ்விதம் தான் கருதியதை விஷ்ணு கோபன் எப்படி வெளிக்காட்டி விளக்க முடியும்? அது அவனுக்கு அவமானம் அன்றோ?

ஒரு விஷயத்தில் மட்டும் விஷ்ணுகோபன் அவர்கள் கூறியதை ஒப்புக்கொண்டான்.

மயூரன் நடவடிக்கைகளையோ அவற்றை அடக்க அரசாங்கத்தார் செய்யும் காரியங்களையோ பகிரங்க

மாக்கிக் குடிமக்களுக்கு அறிவிக்க யாரும் விரும்பவில்லை. அதனால் நன்மையை விடத் தீமையே அதிகம் ஏற்படும் என்று எண்ணினான் விஷ்ணுகோபன்.

'இரண்டாம் பேர் அறியாமல் காரியத்தை முடித்து விட வேண்டும்' என்பதே அவன் விருப்பம். அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களாகப் பொறுக்கி எடுத்த ஒரு சிறு படையின் உதவியைக் கொண்டு அதை நிறை வேற்றி விடலாம் என்பதே அவன் எண்ணம். அந்தப் படையை அவனே நடத்திச் செல்லவும் தயாராக இருந் தான். தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு அதுவே தக்க சந்தர்ப்பம் என்று நினைத்தான்.

மயூரன் சிறைப்பட்டுத் தலைநகரம் வந்து சேர்ந்து விட்டால் அப்பால் அவனைத் தர்மசபையார் அன்றி யாரும் ஏதும் செய்ய முடியாது. ஆனால் அவ்விடம் வந்து சேரும் வரையில் சிறைப்பட்ட காலம் முதல் விஷ்ணுகோபன் ஆதிக்கத்தில்தானே மயூரன் இருந்து வரவேண்டும்? அப்போது.....

* * *

விஷ்ணுகோபன் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவனே. என்றாலும் பொறாமையும் சுயநலப் பேயும் அவனைப் பிடித்து ஆட்டும்போது அவன் தன் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் கீழான காரியத்தைச் செய்ய எண் ணங் கொள்ளுவானாகில் அவனை நாம் என்ன சொல்ல முடியும்?

அதிகாரிகள் தடபுடல் ஒன்றும் செய்ய விரும்ப வில்லை. நாட்டிலே அமைதியை நிறுவிப் பாதுகாத்து வந்த தலையாரிகளைக் கொண்டே தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள நினைத்தனர். அப்படியே உத்தரவு களையும் அனுப்பி வைத்தனர்.

அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. தலையாரி களால் ஸ்ரீசைலக் காட்டையே நெருங்க முடியவில்லை.

அவர்கள் என்ன என்னவோ முயன்று பார்த்தார்கள். ஆனால் அவை பலிக்கவில்லை. அவர்களால் மயூரன் வசித்த காட்டையே சமீபிக்க முடியவில்லை. காட்டு மக்கள் அவ்விதம் தடுத்து நின்றனர்.

தலைநகரத்திலோ அரசாங்கத்தார் அவசரத்தால் ஆத்திரம் கொண்டு துடித்தனர்.

"நாடோடியாகத் திரியும் அந்தப் பார்ப்பன இளைஞனைச் சிறை செய்வதற்கா இவ்வளவு தாமதம்? நன்றாக இருக்கிறது நீங்கள் உத்தியோகம் பார்க்கும் லட்சணம்!" என்று கோபங்கொண்டு கர்ஜித்தார்கள்.

ஆம், இப்படித் திறமையற்றவர்களைக் கொண்டு ராஜ்ய பரிபாலனத்தை எப்படி ஒழுங்காக நடத்த முடியும்?

"எப்படியாவது அவனைப் பிடித்தே தீரவேண்டும். அதற்காகப் பெரும் படையையே அனுப்ப நேரிடினும் பொருட்படுத்தக்கூடாது" என்று முடிவு செய்தார்கள். கடைசியாக விஷ்ணுகோபன் தானே அதைச் செய்து முடிப்பதாக முன் வந்தான்.

ஆனால் அவன் முயற்சியும் வீணாயிற்று. பலத்த சேதம் ஏற்பட்டதே ஒழியக் காரியம் கைகூடவில்லை.

"ராஜகரத்துப் படையைக் கண்டவுடனே நடுநடுங்கி ஓடிக் காடுகளில் மறைந்துகொள்ளும் தன்மை வாய்ந்தவர்கள் மலைஜாதியினர். அவர்களே இப்போது நம்மைச் சிறிதும் மதியாமல் திடமாக நின்று போர் புரிகிறார்களே!" என்று ஆச்சரியப்பட்டான் விஷ்ணுகோபன்.

அவ்விதம் நடக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. மயூரன் ஒருவனைப் பற்றி மட்டுமே அவன் அச்சம் கொண்டிருந்தான். மலைஜனங்கள் தன் காரியத்துக்கு உதவி புரிய மாட்டார்கள் என்றும் மயூரனுக்கு உதவி செய்வார்கள் என்றுமே எண்ணினான். ஆனால் அவர்கள் தங்கள் உயிரையே துரும்பாக மதித்துத் தன்

காரியம் நிறைவேறவொட்டாமல் குறுக்கே விழுந்து தடுப்பார்கள் என்பதை அவன் கனவிலும் கருதவில்லை.

இயற்கையுடன் ஒன்றித் தங்கள் வாழ்க்கையை நடத்தும் அந்தக் காட்டுமக்களை விஷ்ணுகோபன் நன்ருக அறிந்துகொள்ளாததே இந்த நினைப்புக்கு முக்கியமான காரணம். தங்களிடம் வந்து சேர்ந்த யாருக்கும் அவர்கள் புகலிடம் அளித்துக் காப்பாற்றுவார்கள். அவன் அங்கே இருக்கும்வரையில் அவனை யாரும் ஒன்றும் செய்யக்கூடாது. அவனுக்கு ஒரு தீமையும் நேரிடாமல் அவனைக் காப்பாற்றுவது அவர்கள் கடமை; பொறுப்பு. அதுவே அவர்கள் ஜாதி தர்மம். அதற்கு இழுக்கு உண்டாக்க அவர்கள் ஒருபோதும் ஒருப்பட மாட்டார்கள்.

பல்லவ சாம்ராஜ்யத்துச் சேனையின் முக்கியமான பகுதியை அந்தக் காட்டு மக்கள் அஞ்சா வீரத்துடன் தைரியமாக எதிர்த்துப் போராடினர்.

வேல்கொண்டு எறிந்து எதிரிகளைத் தாக்கிக் கொல்வதில் அவர்கள் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். அவர்கள் குறி ஒரு போதும் தப்பாது. காட்டிலே இருட்டில் கேட்கும் சப்தத்தைக்கொண்டே வேல் எறிந்து ஒரே தடவையில் புலியையோ யானையையோ கொன்றுவிடும் திறமை வாய்ந்த அவர்கள் அந்தப் படைக்கா அஞ்சப்போகிருர்கள்?

குன்றுகளின் ஓரங்களிலும் அடர்ந்த காடுகளின் மத்தியிலும் அமைந்திருந்த காட்டு வழிகளின் பக்கங்களிலே ஓங்கி உயரமாக வளர்ந்திருந்த மரங்களின் மீது ஏறி ஒளிந்துகொண்டார்கள். அவை ஒற்றையடிப் பாதைகளே. பெரும்படை தாராளமாக உள்ளே நுழைந்து வர முடியாது. ஒருவர் பின் ஒருவராகத்தான் உள் நுழையலாம். அதனுல் ஒவ்வொருவராக உள்ளே புகும் எதிரிகளை அவர்கள் அவ்வப்போது தாக்கி அடித்து வந்தனர்.

வேறு சில இடங்களில் பல்லவ சேனையை அவர்கள் காட்டின் சமீபம் நெருங்கவே விடவில்லை. வில் கொண்டு அம்பை எய்து எதிரிகளைத் தாக்கித் துரத்தினர்.

இங்ஙனம் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சாகசமாகக் கையாண்டு அவர்கள் மயூரனைக் காத்து வந்தனர். தன் வஞ்சம் தீர்க்க முன் வந்த விஷ்ணுகோபனும் தன் கீழ்ப் போரிடும் வீரர்களை வனதேவதைக்குப் பலியிட விரும்பவில்லை. ஒன்றில்லாவிட்டால் மற்றொன்றாவது பலிக்காதா என்று எண்ணி ஒவ்வொரு தந்திரமாகக் கையாண்டு வந்தான். ஆனால் பலன் எல்லாவற்றுக்கும் ஒன்றாகவே நேரிட்டது. முன்போலவே மயூரன் பிடிபடாமல் தன் குடிசையில் வாழ்ந்து வந்தான்.

விஷ்ணுகோபனுக்கோ வேறு வழியில்லை. கடைசியாக ஒன்றேதான் பாக்கியிருந்தது. காட்டைச் சுற்றி ஓரேயடியாக வளைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நெருக்கி மயூரனையும் காட்டுமக்களையும் உள்ளே சிக்க வைத்துக் கடைசியாகப் பிடித்துவிடுவது என்று தீர்மானித்தான். அதற்காக அவசியம் நேரிட்டால் காட்டை அழித்துவிடவும் முடிவு செய்தான்.

ஆனால் அந்த முயற்சியும் பலிதம் அடையவில்லை. அவன் முன்னே பார்த்துப் போய்க்கொண் டிருந்தான். பின்னால் நடந்து வந்தவற்றை அவன் அறிந்துகொள்ள முடியவில்லை. விஷ்ணுகோபன் காட்டை வளைத்துக் கொண்டதுதான் தாமதம். அவன் படையைச் சுற்றி மற்றொரு வளையம் வந்து தாக்கியது. அது பெரும்பாணன் படை. அதை உணர்ந்த விஷ்ணுகோபன் திகைத்துவிட்டான்.

அதனோடு அவன் உள்ளத்தைக் கலக்கும் செய்தி மற்றொன்றையும் கேள்விப்பட்டான். அது ரேவதியைப் பற்றியது.

## 19. மயூரன் முயற்சி

மயூரனைப்பற்றி வித விதமான வதந்திகள் பிறந்து நாட்டில் உலவ ஆரம்பித்துவிட்டன. அவற்றை யார் எப்படி, எங்கே, எந்த ஆதாரத்தைக்கொண்டு சிருஷ்டித்து அனுப்பினார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

ஆயினும் பொதுமக்கள் அவற்றை முழுமையும் உதறித் தள்ளவில்லை. 'இல்லாதது பிறவாது' என்றே எண்ணினர். அவற்றுள் ஒரு பகுதியாவது உண்மையாக இருக்கும் என்றே அவர்கள் மதித்தனர்.

அடங்கிக் கிடக்கும் ஓர் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பி வெளியாக்கி உருவாக்கவே பிரசாரம் உபயோகப்படும். இல்லாத ஒன்றைச் சிருஷ்டித்து அதனை நிலைபெறச் செய்வதற்குப் பிரசாரம் என்றைக் கும் உபயோகப்படாது. ஆரம்பத்தில் ஓர் அளவு அது வெற்றி அளிக்கக்கூடியதாக இருந்தாலும் அத்தகைய உணர்ச்சி நீண்ட நாள் நிற்காது.

மயூரனைப்பற்றி உலவிய வதந்திகள் ஏற்பட்டதற்கு மூல காரணமான நிகழ்ச்சிகளுக்கும் அந்த வதந்திகளின் முடிவான கற்பனைக்கும் எந்த விதமான தொடர்பும் காணப்படவில்லை. ஏதோ ஒரு சிறு நிகழ்ச்சி பெரிய அற்புதமாக மாறிவிட்டது.

"மயூரன் ஒரு தெய்வப் பிறவி வாய்ந்தவன். அவனுக்கு ஈசுவரனே நேரில் வந்து உதவி புரிகிறார். அவனைச் சிறை செய்யவோ வெல்லவோ யாராலும் முடியாது. இல்லாவிட்டால் எப்படி அவன் ஒன்றியாக நின்றுகொண்டு இவ்வளவு பெரிய படையைத் தடுத்து வெற்றிகொள்ள முடியும்?" என்று கேட்டான் ஒருவன்.

அவன் குரலில் படபடப்புக் கொஞ்சமும் காணப்படவில்லை. நிதானமாக, தான் நிச்சயம் என்று நம்பிய ஒரு ரகசியத்தைப் பிறருக்குத் தயவு செய்து கூறுவது போலவே தோன்றியது அவன் கூறியது.

"அவன் இருந்த இடத்தைவிட்டு அகலுவதே இல்லை. அவன் ஒரு பிரம்ம ரக்ஷஸை வசியம் செய்து வைத்திருக்கிறான். அவனுக்காக அந்த ரக்ஷஸே எல்லா வேலைகளையும் செய்து முடிக்கிறது" என்று கூறினான் மற்றொருவன்.

பல படியாக அவன் புகழ் நாட்டுப்புறங்களில் பரவ ஆரம்பித்தது.

* * *

மயூரனும் தன் காலத்தை வீணாகக் கழிக்கவில்லை. அவன் ராஜாங்கத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்யாமல் குலாசாரப்படி ஸ்நானம், ஜபதபம் முதலியவற்றையே செய்துவருவதாக வெளி உலகத்துக்குத் தோன்றினாலும் உள்ளூறத் தனக்குப் பக்கபலமாகவேண்டிய காரியங்கள் பலவற்றை யோசித்து வந்தான். அவற்றுள் சிலவற்றை ரகசியமாக நிறைவேற்றியும் வைத்தான்.

குறிஞ்சி நிலத்துக் குறவர்கள் போருக்கோ உயிருக்கோ பயந்தவர்கள் அல்லர்; நல்ல வீரர்கள். ஆனால் அவர்கள் வீரமோ குறுகிய நோக்கம் கொண்டது. தங்கள் வரையிலுமோ தங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் வரையிலுமோ நேரிடும் பூசல்களையே கவனிப்பவர்கள் அவர்கள். வயிற்றுப்பாடு ஒன்றுதான் அவர்களுக்கு முக்கியமானது. அது ஒன்றே அவர்களை எந்த விதமான துணிச்சலான காரியங்களையும் செய்யத் தூண்டுகோலாக நிற்கும். அன்றைப் பசி தீர்ந்துவிட்டால் போதும்; மறுநாளைப் பற்றிய கவலை இல்லை.

வயிறு நிறைந்துவிட்டால் கொம்மாளந்தான். கூத்தும் கேளிக்கையும் இராப் பகல் வேறுபாடின்றி

நடைபெறும். பசியின் கொடுமையை அவர்கள் நன்றாக அறிவர். அதனால் பசியால் வருந்தும் எவருக்கும் தங்கள் உணவை அவர்கள் தாராளமாகப் பங்கிட்டுவிடுவர்.

ஒருவன் தேடிய உணவை மற்றையோரும் கலந்து உண்ணுவதில் வேறுபாடில்லை. அதனால் அவர்களுக்குள் சமூக ஒற்றுமை வெகு எளிதாக ஏற்பட்டுவிடும். பிறர் கஷ்டம் காணச் சகிக்கமாட்டார்கள்.

குறவருடைய வீரம் முழுதும் காட்டு மிருகங்களிடமிருந்து தங்களையும் தங்கள் காட்டுச் சமூகத்தையும் காப்பாற்றிக்கொள்வதிலேயே காணப்பட்டது. அதைத் தவிர வேறு அரசாங்கத்தைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவர்கள் கவலைகொள்வதும் இல்லை. இதனால் அந்தக் காடு ஒரு தனி அரசாங்கமாகவே விளங்கியது. அவர்கள்மீது பிறர் ஆதிக்கம் செலுத்துவதும் சுலபமான காரியம் அல்ல.

பல்லவ சாம்ராஜ்யமும் அதனை உணர்ந்து அந்தக் குறிஞ்சி நில மக்களிடம் வரி முதலியன தண்டாமல் ஆதரித்து வந்தார்கள். அவ்வப்போது மலை நாட்டில் கிடைக்காத அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் வாங்கி அனுப்பிவந்தார்கள்.

மயூரனுக்கு இந்த விஷயங்கள் யாவும் நன்றாகத் தெரியும். அவன் அங்கே குடியேறிய கொஞ்ச நாட்களிலிருந்து அவர்கள் அவனுடன் தாராளமாகப் பழகி அவனைத் தங்கள் தலைவனாகவே கொண்டனர். ஆம்; அவனைக் கேட்காமல் அவர்கள் எந்தக் காரியத்தையும் தொடங்கமாட்டார்கள்.

அந்த நிலையில் அவனுடைய காரியம் மிகவும் எளிதாக முடிந்தது. அவர்கள் சமூக உணர்ச்சியைக் கொஞ்சம் பலப்படுத்திப் பிணைக்கவேண்டியது. காட்டுக்குக் காடு வசிப்பவர்களிடையே உள்ள பிணக்கைத் தீர்த்து அவர்கள் யாவரையும் ஒன்று சேர்த்துவிட

வேண்டும். அப்பால் எல்லோரும் ஒன்றுகச் சேர்ந்து நின்று மன ஒற்றுமையுடன் போர் புரிந்தால் அவர்களை வெல்லுவதற்கு யாராலும் முடியாது என்பதை விளக்கிக் காட்டி ஒற்றுமையை ஊட்டிப் பயிற்சி அளிக்க வேண்டும். இதை அவன் செய்துவிட்டானுல் பல்லவ சாம்ராஜ்யத்தின் திரண்ட படையாலும் அசைக்க முடியாத வலிகொண்ட ஒரு பெரிய உதவி அவனுக்குக் கிடைத்துவிடும்.

* * *

மயூரனுக்கு இருந்த செல்வாக்கில் அது ஒன்றும் பிரமாதமான காரியம் அல்ல. ஆயினும் அவன் அவசரப்பட்டு ஒன்றையும் செய்துவிடவில்லை. தான் காஞ்சீபுரத்தில் கற்ற வித்தை அனைத்தையும் அவன் அந்தக் காட்டில் விளங்கச் செய்து பிரகாசப்படுத்தினுன்.

இளமை முறக்கினுல் தான் முன்னர் நம்பிக்கை கொள்ளாதவற்றையும் அவன் அப்போது கையாண்டு வந்தான். மணி, மந்திர ஔஷதங்களால் அவன் காட்டு மக்கள் மனத்தைக் கொள்ளைகொண்டான். அப்பால் கேட்பானேன்? குறிஞ்சி நில மக்கள் படை திரண்டு அவனைக் காக்க முன் வந்தனர்.

அந்தக் காடு அரண் வலிகொண்ட ஒரு கோட்டையாகவே மாறிவிட்டது. அதனுள் யாரும் நுழைய முடியாது. தவறி நுழைந்தவர் உயிருடன் தப்பி வெளியில் செல்லமாட்டார்.

ஆனுல் அந்த நிலைமை எவ்வளவு காலம் நீடித்து நிற்கும்? என்றைக்காவது ஒரு நாள் அது வீழ்ச்சியுறக் கூடுமன்ருே? மயூரன் அதனை அறியாமலும் இல்லை. அதனுலேயே அவன் கவலை அதிகமாகி வந்தது. தான் ஏதோ சிறுபிள்ளைத்தனமாக ஆரம்பித்த காரியம் எப்படி முடியுமோ என்று சில சமயங்களில் ஏங்குவான்.

அவன் தனக்காக அதிகம் கவலை கொள்ளவில்லை. தனக்கு நேரிடும் விபத்து எங்கே தன் சமூகத்துக்கே கெடுதலாகச் சம்பவிக்குமோ என்றே பயந்தான். அவ்விதம் நேராமல் காக்கும்படி அவன் அடிக்கடி எம் பெருமானை வணங்குவான்.

தன் முயற்சியில் எவ்வளவுதான் தீவிரமான நம்பிக்கை கொண்டவனுக இருந்தாலும் தெய்வம் ஒன்று உண்டு என்பதையும் அதன் திருவுள்ளமே கடைசியில் நடைபெறும் என்பதையும் அவன் அறியாமல் இல்லை. ஆனல் சமூக வாழ்க்கைக்காகவாவது அது தனக்கு அநுகூலமாகவே இருக்கும் என்ற திட சித்தத்துடன் அவன் இருந்துவந்தான்.

## 20. விபரீதப் போக்கு

அதிக நாள் மறைத்து வைக்க முடியாது; ஒரு நாள் அது வெளிப்பட்டே தீரும். அரண்மனைச் செய்திகள் எப்போதுமே பகிரங்க ரகசியம். அவற்றை வெளிப்படையாக யாரும் பேசமாட்டார்கள். ஆனால் குசுகுசுவென்று ஒருவருக்கொருவர் காதைக் கடித்துச் செய்தியைப் பரப்பிவிடுவர்.

விஷ்ணுகோபன் ஸ்ரீசைலமலைக் காட்டில் அந்தமலை ஜனங்களிடம் பட்ட அடி பிரசித்தமாகிவிட்டது. அவன் வெளியில் தலைகாட்ட முடியாதபடி அவமானமடைந்து உள்ளம் ஒடிந்து படுத்த படுக்கையாகக் கிடந்தான்.

மயூரன் விஷயத்தை அரசாங்கத்தார் அப்படியே விட்டுவிட முடியாது. அது அவர்கள் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் இழுக்காகும். அவனைச் சிறை செய்யக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். 'முளையிலேயே கிள்ளி எறியாமல் போனது இவ்வளவு தூரத்துக்குக் கொணர்ந்து விட்டதே' என்று அவர்கள் வருத்தப்பட்டனர்.

மயூரனைச் சேர்ந்தவர்களும் தங்கள் காலத்தை வீணாகக் கழிக்கவில்லை. அவனுக்காக அவர்கள் பரிந்து பேசி வந்தனர். முக்கியஸ்தர்களில் இரண்டு பேர்கள் தைரியமாக அரசாங்கத்தாரிடமும் சென்று தங்கள் கட்சியை எடுத்துச் சொன்னார்கள்.

அவர்களுள் ஸ்கந்தவர்மரும் ஒருவர். அவர் சக்கரவர்த்தியையே நேரில் பார்த்து மயூரன்மீது தவறு ஒன்றும் இல்லை என்று விளக்கிக் கூறினார்.

"நான் கூறுவது சக்கரவர்த்தியின் மனத்தைத் துன்புறுத்துவதாக இருக்கலாம். ஆனால் நாட்டின்

நன்மையையும் நீதியையும் உத்தேசித்தே இதனை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்'' என்று பலமான பீடிகையுடன் அவர் ஆரம்பித்தார்.

சுயநலம் கருதி அவர் அப்படிக் கூறுகிறார் என்ற குற்றத்தை ஸ்கந்தவர்மர்மேல் சாட்ட முடியாது. அவர் ராஜாங்க விவகாரத்தை நன்றாக அறிந்த கிழவர். வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்தாகிவிட்டது. சென்ற சில மாதங்களாக அவர் தமது அந்திய காலத்தை உத்தேசித்துப் போகும் வழிக்குத் தேவையான ஈசுவரத் தியானத்தில் மூழ்கிக் கிடந்தார். உலக விவகாரங்களில் அதிகமாகப் பற்றுக்கொள்ளாமல் துறவி போலவே வாழ்ந்து வந்தார்.

* * *

சக்கரவர்த்தியும் ஸ்கந்தவர்மரிடம் உயர்ந்த மதிப்பு வைத்திருந்தார். அவர் அநாவசியமான காரியங்களில் தலையிட மாட்டார். அவருடைய நீண்ட அநுபவமும் ஆழ்ந்த அபிப்பிராயமும் அரசாங்கத்துக்கு எப்போதும் உதவியாகவே இருந்திருக்கின்றன.

சக்கரவர்த்திக்கோ இளவயது. தமக்காக உள்ள விருப்பு வெறுப்புக்களை அவர் வெளிக்காட்டாமல் எடுப்பார் கைப்பிள்ளையாகவே இருந்தார். அதுகாறும் விஷ்ணுகோபன் பக்கத்தில் இருந்து அவர் மனத்தை விஷமாக்கிவிட்டான். மயூரன் பெயரே அவருக்குக் கசப்பாகிவிட்டது.

முதலில் அவர் மயூரன்மேல் விரோத பாவம் கொள்ளவில்லை. 'சிறு பிள்ளைத் தனமாக ஏதோ தள்ளுகிறான்; காலத்தால் மாறுபட்டுவிடும்' என்றே நினைத்திருந்தார். ஆனால் காலம் செல்லச் செல்ல, அவன் தன் செய்கைக்காகச் சிறிதும் பச்சாத்தாபம் கொள்ளாமல் விடாப் பிடியுடன் இருந்து வந்ததைக் கண்டு அவர் மனம் கல்லினும் கடினமாக மாறியது

"எப்படியாவது அவனைச் சிறைசெய்து அவன் கொட்டத்தை அடக்கியே தீருவது" என்ற மன உறுதியைக் கொண்டார்.

அவர் அப்படியிருக்கையில் மயூரனுக்காக ஸ்கந்தவர்மர் வாதாடினால் அது ஏற்குமோ? சக்கரவர்த்தி அந்த வார்த்தைகளைக் காதால் கேட்கவும் இஷ்டப்படவில்லை.

"அவன் தன் தப்பை உணர்ந்து முதலில் சரணாகதி அடைந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். எவ்வித நிபந்தனையுமின்றி அவன் தன்னை அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கவேண்டும். அதற்குப் பிறகே அவனுக்கு எந்த விதமான மன்னிப்புக் கொடுப்பது, எப்படி அவனை நடத்துவது என்பன போன்றவை ஆலோசிக்கப்படும். அதுவரையில் ஒன்றும் செய்ய இயலாது" என்று முடிவாகக் கூறிவிட்டார் சக்கரவர்த்தி.

மயூரனை விரோதித்துக்கொள்வது நாட்டின் அமைதிக்கே பங்கம் விளைவிப்பதாகும் என்பதை ஸ்கந்தவர்மர் பூரணமாக நம்பியிருந்தார். சூரர ஸ்வபாவம் கொண்டவனாக அவனைக் கருத முடியாது. அவனை விரோதியாகக் கருதுவதற்குப் பதிலாக அவனை நேசித்துத் தட்டிக் கொடுத்தால் தன்னலம் கருதாமல் பரோபகார சிந்தையுடன் நாட்டுக்கு உழைக்கும் ஓர் உத்தம ஊழியனாக அவனை மாற்றிவிடலாம் என்றும் திடமான அபிப்பிராயம் கொண்டிருந்தார் அவர். அதையே சக்கரவர்த்திக்கும் தெரிவித்தார். ஆனால் பாழும் கௌரவம் என்பது குறுக்கே நின்றது. சக்கரவர்த்தி அதை ஏற்கவில்லை.

ஸ்கந்தவர்மருக்கு அது பெரிய ஏமாற்றமாகத்தான் இருந்தது. சக்கரவர்த்தியின் மனம் கொஞ்சமாவது இளகும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அது தவறு என்பதை உணர்ந்துகொண்டார். மேலே அவர் செய்யக் கூடியது என்ன? 'தெய்வம் விட்ட வழி விடட்டும்' என்று திரும்பிவிட்டார்.

சக்கரவர்த்தியோ ஸ்கந்தவர்மர் கூறியதைக் கேட்டு உள்ளம் குமுறினார்; கோபத்தால் திகைப்புண்டார்.

ஸ்கந்தவர்மர் மீதும் அவருக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

"துரோகி, ராஜ வம்சத்தைச் சேர்ந்தவரா அவர்? நாட்டின் நலனைக் கெடுக்கும் ஒரே நாசகாரக் கும்பல். ஆம், ஸ்கந்தவர்மர் உதவியும் உபதேசமும் இல்லாவிட்டால் அந்த அற்பன் இவ்வளவு தூரம் துணிந்து அரசாங்கத்தையே எதிர்க்க முன்வருவானா?"

சக்கரவர்த்திக்கு இருந்த இந்த மனநிலையில் அவர் உள்ளம் முன் பின் யோசிக்க இடம் கொடுக்கவில்லை. காலஞ்சென்ற தம் தகப்பனார் காலத்தில் அவருக்கு அந்தரங்கமானவராகவும் பரம ராஜவிசுவாசியாகவும் இருந்த ஸ்கந்தவர்மர் இப்போது தமக்குத் துரோகம் புரியத் துணிந்ததைக் கண்ட சக்கரவர்த்தி அவரையும் விரோத பாவத்துடனேயே சந்தேகிக்க ஆரம்பித்து விட்டார்.

ஓரொரு சமயம் ரத்தபாசம் குறுக்கிட்டு நிற்கும். "பாவம், அவர் என்ன செய்வார்? வயது சென்றாலே புத்தித் தடுமாற்றம் ஏற்பட்டுவிடுமன்றோ? அவர் இளமைப் பருவத்தே இருந்தபடி எண்ணி வருகிறார் போலும்; காலம் மாறி வருவதை அவர் உணரவில்லை!" இவ்வித எண்ணம் ஏற்பட்டாலும் அது உடனேயே மாறிவிடும்; பழையபடி கல்நெஞ்சு வலி பெற்றுவிடும்.

"அந்தக் கிழத்தின்பேரில் குற்றமில்லை. அவருக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் அந்தச் சிறுமியே ஆட்டி வைக்கிறாள். அவள் பசப்பைக் கேட்டு அவர் கூத்தாடுகிறார்."

மெதுவாகச் சக்கரவர்த்திக்குத் தூபம் போட ஆரம்பித்தனர் விஷ்ணுகோபன் கையாட்கள். அவன் படுத்த படுக்கையாகக் கிடந்தாலும் அவன் இருதயம்

துடித்துக்கொண்டுதான் இருந்தது. மயூரன்மீது தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் அவன் ஆத்திரம் முன்னிலும் பன்மடங்காக அதிகமாயிற்று. சதா சர்வகாலமும் அவனைச் சுற்றித் திரிந்த வீணர் கூட்டமும் அதிகரித்தது. அவர்கள் விஷத்தைக் கக்குவதே போலச் சக்கரவர்த்தியின் மனத்தைக் கலக்கி வந்தனர்.

சக்கரவர்த்திக்கு ரேவதியைக் கண்டால் எப்போதுமே வெறுப்பு. அவள் பழைய சக்கரவர்த்தியின் வளர்ப்புப் பெண்ணாக அரண்மனையில் அதிகாரம் செலுத்தி வந்த காலத்திலிருந்தே அவளை அவருக்குப் பிடிக்காது. பல சமயங்களில் தம் இஷ்டத்துக்கு மாறான காரியங்களைப் பழைய சக்கரவர்த்தியின் சலுகையைக் கொண்டு அவள் நிறைவேற்றி வைக்கவில்லையா?

“ஆம். ரேவதியை அடக்கிவிட்டால் அரசாங்கத்துக்கு விரோதமாக மயூரனுக்கு உதவி செய்யும் கும்பல் தானாகவே அடங்கிவிடும்” என்று போதனை செய்தார்கள் அவர்கள்.

சக்கரவர்த்திக்கும் அது சரியாகவே பட்டது. ஆனால் அதைச் செய்தால் நகரத்தில் அவருக்கு விரோதமான உணர்ச்சி அதிகமாக ஏற்பட்டுவிடாதா? ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களை ராஜத் துரோகிகள் என்று குற்றம் சாட்டிச் சிறையிலிடுதல் அவ்வளவு சுலபமாக நடந்துவிடுமா?

சக்கரவர்த்தி செய்யும் வகையறியாது தவித்தார்.

## 21. சுழலும் சூழ்ச்சியும்

விஷ்ணுகோபனுக்கு ரேவதி மீது பிரமாதமான கோபம். அதே அளவுக்கு அவள் மீது பிரேமையும் கொண்டிருந்தான். அந்த இரண்டுக்குள் எது அதிகம் என்பதை நிச்சயமாகக் கூற முடியாது. ஒவ்வொரு சமயம் ஒவ்வொன்று தலை தூக்கி நிற்கும்.

கோபம் வந்த சமயத்தில் அவன் தலைகால் தெரியாமல் ஆடுவான். "இந்த விரியன் பாம்புக் குட்டியை இப்போதே நசுக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் எத்தனை ஜீவன்களை வாயில் போட்டுக்கொள்ளுமோ?" என்று கர்ஜிப்பான்.

ஆனால் பிரேமை வந்த காலத்திலோ அவ்வளவும் மாறிவிடும். "அவள்மேல் ஒரு குற்றமும் இல்லை" என்பதைத் தான் நிச்சயமாக நம்புவதாகச் சத்தியமும் செய்து கொடுப்பான்.

"அவள் என்ன செய்வாள், பாவம்! இளம் வயது. சொல்லுவோர் பேச்சைக் கேட்டு வழி தவறி விட்டாள்."

பழியைப் பிறர்மீது சுலபமாகப் போட்டுவிடலாம். அதைச் சுமப்பதற்கும் ஆள் ஒருவன் இருக்கையில் சிரமம் என்ன?

"எல்லாம் அந்தப் பார்ப்பான் செய்த வேலை. ஸ்கந்தவர்மர் கிழவர்; அவன் பிறப்பையும் வாய்ச் சாலக்கையும் கண்டு மயங்கிப் போய்விட்டார்."

மயூரன் சமீபத்தில் இல்லை. விஷ்ணுகோபன் சொல்லுவது அவன் காது வரைக்கும் எட்டப்போவதில்லை. அவனைப்பற்றி அரசாங்கத்தார் ஏற்கனவே வெறுப்புக்கொண்டு எப்படியாவது அவனைச் சிறை

செய்ய வேண்டும் என்று காத்திருந்தார்கள். ஆகவே விஷ்ணுகோபன் அவனைப்பற்றி எதைச் சொன்னால் தான் என்ன?

*　　*　　*

அதுகாறும் ரேவதி நடத்தி வந்த வாழ்க்கையே அவளது முரட்டுச் சுபாவத்துக்கு ஹேதுவாக ஆயிற்று என்பதை அவன் திண்ணமாக நம்பினான். அந்தக் கிழவரும் அவளுக்கு இடம் கொடுத்து வந்தார்; அதை மாற்றிவிட்டால் அவள் தானே வழிக்கு வந்துவிடுவாள் என்றும் நினைத்தான்.

அவளுக்கு ஒரு கால்கட்டைக் கட்டி விட்டால் அவள் முன்போலக் கொட்டம் அடிக்க மாட்டாள். வீட்டுக்குள்ளேயே புருஷனுக்கு அடங்கிக் கிடப்பாள். விஷ்ணுகோபனைத் தவிர அவளை அடக்கும் திறமை வாய்ந்த புருஷன் அவளுக்கு எவ்விதம் கிடைப்பான்? இவ்விதம் அவனைத் தூண்டிவிட்டனர் அவன் சகாக்கள்.

ரேவதி அவனை மணக்க ஒப்புவாளோ?

பெண்களின் அபிப்பிராயத்தை எதற்காகக் கேட்க வேண்டும்? அவளை மடக்கிப் பிடித்துத் தாலியைக் கட்டி விட்டால் அப்பால் அவள் என்ன செய்ய முடியும்? வேண்டாதவனாகவே இருந்தாலும் அவனுக்கு அடங்கித்தானே போக வேண்டும்.

பொதுமக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டிய அரச குடும்பத்தைச் சேர்ந்த உயர்குலத்தவர்கள் சமூக வாழ்வை மீற முடியுமா! கட்டுப்பாட்டுக்கு இணங்கி முதலில் ஏற்படும் பணிவு காலக் கிரமத்தில் காதற்பணிவாகவே மாறிவிடும். இதுவே உலக இயற்கை.

விஷ்ணுகோபனுக்கு இவ்விதமான வாதத்தால் ஓர் உற்சாகம் பிறந்தது. எனினும் அது நிலைத்து நிற்கவில்லை.

ரேவதியின் துஷ்டத்தனத்தையும் துடுக்கையும் குழந்தைப் பருவ முதலே அவன் அறிவான். கடைசிச்

சமயத்தில் அவள் ஏதாவது ஓர் இடுக்கால் தப்பிக் கொண்டால் என்ன செய்வது? அது பெருத்த - மயூரனிடம் அவன் பட்டதைக் காட்டிலும் பன்மடங்கு கொண்ட - அவமானமாகவன்றோ போய்விடும்? அப்பால் தான் வெளியில் தலை காட்ட முடியாதே என்று பயப்பட்டான் அவன்.

விஷ்ணுகோபன் செய்துவந்த சூழ்ச்சிகள் யாவும் ரேவதிக்கு எட்டிவிட்டன. ‘இனி இவ்விடம் தங்கினால் மோசம் வந்துவிடும்’ என்று பயந்தாள் அவள். ஆனால் என்ன செய்ய முடியும்?

மயூரனைப்போல் அவளும் நகரத்தைத் துறந்து வெளியேறுவதா? அவள் பிறப்புக்கு அது அழகாகுமா?

ஸ்கந்தவர்மர் செயலற்று நின்றார். கொந்தளிக்கும் கடலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் கப்பலைப் பொறுப் பேற்றுச் சாவதானமாகக் கரை சேர்க்கும் மீகாமன் இல்லாவிட்டால் எப்படித் தவிக்குமோ அப்படித் தவித்தது அந்தக் குடும்பம்.

வேலியே பயிரை அழித்தால் யாரிடம் சொல்லி முறையிட்டு அழுவது? அவர் முன்னர் ஒரு சமயம் மயூரனுக்கு இரக்கம் காண்பிக்க வேண்டும் என்று சக்கரவர்த்தியைக் கேட்டுக்கொண்டது இப்போது அவருக்கே விபத்தாக வந்து முடியும் என்பதை அவர் கண்டாரா?

எவ்வாறாயினும் அவர்கள் நடத்தை அரசாங்கத்துக்கும் சக்கரவர்த்திக்கும் பெருத்த சந்தேகத்தை உண்டாக்கியது. அந்தப் பேய் எளிதில் அகலாது. அதனை ஸ்கந்தவர்மர் நன்றாக உணர்ந்திருந்தார்.

எனினும் அந்தச் சமயத்தில் அவர் தலைநகரத்தை விட்டு வேற்றிடம் செல்வது அபவாதத்துக்கு இடமாக நேரிடும். அவர் இருக்கும் இடத்தை விட்டு எங்கேயும் நகர முடியாது.

ஆனால் ரேவதியின் விஷயம் அப்படியன்று. அவள் விவாகமாகாத கன்னிப் பெண். ஏதாவது கேடு நேரிடின் அது அவள் பிற்கால வாழ்க்கையை அடியோடு பாழ் படுத்திவிடும். பெண் ஜன்மம் சாதாரண மண் பாண்டம் போன்றதன்று; கொடுத்து மாற்றுவதற்கு.

ஆம்; அவளுடைய கௌரவத்தைத் தக்க ரீதியில் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டும். அதற்கு ஏற்ற வழி தான் தெரியவில்லை.

* * *

விஷ்ணுகோபன் வாசம் செய்துவந்த காஞ்சீபுரம் தகுதியானதன்று. வேறே அவளைத் தனியாக எவ்விடம் அனுப்புவது?

சதஹனிராஷ்டிரம் (சாதவாஹனராஷ்டிரம்: இப்போது பெல்லாரி ஜில்லாவாக வழங்கப்பட்டு வரும் பிரதேசத்தின் ஒரு பகுதி) ஸ்கந்தவர்மருடைய ஆதிக்கத்தில்தான் இருந்து வந்தது. அவரே அந்த ராஷ்டிரத்தின் அதிபதி. அவர் நேரில் அங்கே இருந்து பரிபாலனம் செய்யாவிட்டாலும் அவருக்குக் கீழ்ப்படிந்த அதிகாரிகள் ஸ்கந்தவர்மருக்காக அரசியலை நடத்தி வந்தனர்.

அவர்கள் யாவரும் ராஷ்டிரபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களே. அவரிடம் பரம விசுவாசம் கொண்டவர்கள். எத்தகைய ஆசை வார்த்தைகளையும் நம்பி ஏமாந்து அவருக்குத் துரோகம் செய்யமாட்டார்கள்.

அங்கே அவளை அனுப்பி வைத்தால் அவர்கள் ரேவதியைத் தங்கள் கண்ணின் கருமணிபோலப் பத்திரமாகக் காப்பாற்றித் திரும்பத் தம்மிடம் ஒப்பித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை ராஷ்டிரபதிக்கு இருந்தது. ஆனால் அவளுக்கு அங்கே உற்ற துணை? அதுவே அவர் மனத்தை வாட்டியது.

'ஏன், வீரசர்மரையும் அவர் பத்தினியையும் ரேவதியுடன் சதஹனிராஷ்டிரத்துக்கு அனுப்பி வைக்க கூடாது?' என்றே எண்ணினார் அவர். வீரசர்மரும் அவர் மனைவியும் ரேவதியைத் தங்கள் குழந்தை போலவே பாவித்து அன்புடன் நடத்தி வந்தனர். அவளுடைய வெகுளித்தனத்தைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் கொண்டனர். சோமயாக சமயத்தில் அவள் பெரிய காரியத்தை நிர்வகித்து நிறைவேற்றியது அவர்கள் மனத்தைவிட்டு அகலவேயில்லை. அந்தச் செயல் அவர்களை முன்னைக் காட்டிலும் அதிகமாக அவளிடம் ஈடுபடச் செய்துவிட்டது.

அவருக்கும் மயூரன் இல்லாமல் தனியாகக் காஞ்சிபுரம் கடிகையில் காலம் தள்ளுவது கஷ்டமாக இருந்தது. அவருக்கு அங்கே என்ன பற்று இருந்தது?

அவர் காஞ்சிபுரம் வந்ததன் நோக்கம் எப்போதோ நிறைவேறிவிட்டது. பிரவசனம் பூர்த்தியாகி விட்டது. அப்பால் அவர் மயூரன் பொருட்டே அவ்விடம் தங்கினார். அவன் மறைந்த பிறகு அவருக்கு அங்கே வேலை என்ன?

மயூரனுடன் அவர் பூண்டிருந்த தொடர்பே அவர் கடிகை வாழ்க்கையின் அந்தியத்தைக் கசப்பாக்கிவிட்டது. யாரும் அவரை ஒருவிதமான சந்தேகத்துடனேயே பார்த்து வந்தனர். முன்னரெல்லாம் அவருடன் தாராளமாகப் பழகியவர்கள் இப்போது அவரை அதிகமாக விரும்புவதில்லை.

'இவற்றைக் கவனித்தால் வீரசர்மரும் கடிகையை விட்டு வெளிக்கிளம்புவதற்குத் தமக்குத் தக்க சந்தர்ப்பம் நேரிடும்போது அதனை நழுவவிட மாட்டார். கட்டாயம் தம் கோரிக்கையை ஏற்று ரேவதிக்குத் துணையாகச் செல்ல மனம் கொள்வர்' என்றே நினைத்தார் ஸ்கந்தவர்மர்.

இந்த ஏற்பாடு ரேவதிக்கும் பிடித்திருந்தது. அவளும் அதையேதான் விரும்பினுள். ஆனல் அதை வெளியிட அவளுக்குத் தைரியம் இல்லை; சங்கோசமும் பாதித்தது.

இது நிறைவேறினல் மயூரனைப்பற்றிய செய்திகளை அதிகமாக அறிய அவளுக்குச் சந்தர்ப்பம் உண்டாகும். ஸ்ரீசைலக்காடு நாட்டின் தலைநகரமான காஞ்சிபுரத்தைக் காட்டிலும் சதஹனிராஷ்டிரத்துக்கு மிகவும் சமீபமானது. ஏன்? அந்த ராஷ்டிரத்தின் எல்லைப்புறத்தே அது அமைந்திருந்தது என்றே சொல்லலாம்.

'அங்கே போனல் மயூரனைக் காணும் பாக்கியம் கிட்டாதா?' என்றே ஏங்கி நின்ருள் ரேவதி.

## 22. ரேவதியின் உள்ளம்

"ரேவதியைச் சமீபத்தில் பார்த்தீர்களா?" என்று கேட்டாள் ஒருநாள் வீரசர்மரை அவர் பத்தினி.

ஆனால் அதற்கு அவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. 'உம்' என்று ஒருதரம் சொல்லிவிட்டு மேலே பேசவில்லை.

"அதற்கு ஏதாவது ஒரு வழி செய்தாகவேண்டும்" என்று மறுபடியும் சொன்னாள் பத்தினி.

வீரசர்மரோ மௌனமாகப் படுத்திருந்தார். அவரும் அதைத்தான் யோசித்து வந்தார். ஆனால் அவர் பத்தினி அதை உணரவில்லை. மௌனத்தைக் கண்டு, அவர் அலட்சியமாக இருக்கிறார் என்றே அநுமானித்தாள் அவள்.

அதனால், "காளை ஒருவன் பெயரைக் கேட்கும் போதே கன்னிப் பெண் ஒருத்தியின் கண்களில் அந்த ஒளி வீசுமானால் அதை நிச்சயமாகக் காதல் என்றே கொள்ளவேண்டும். அந்தக் கண்ணொளியை நான் இன்று பார்த்தேன்; அது ஒவ்வாத காதல். அதற்குப் பரிகாரம் ஏதாவது உடனே தேடியாக வேண்டும்" என்று மீண்டும் வற்புறுத்திக் கூறினாள் அவள்.

அது ஒவ்வாத காதல் என்பதை வீரசர்மரும் அறிவார். அவ்விருவருக்குமிடையே உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் போன்றது. ஆனால் உள்ளம் உருகி ஒருமித்துப் பெற்ற தெய்வத் தன்மை வாய்ந்த அந்தக் காதலைப் பாழாக்க அவர் விருப்பங் கொள்ளவில்லை.

மயூரன் முகத்தே அத்தகைய பிரகாசம் தோன்றியதை அவர் ஏற்கனவே பார்த்திருக்கிறார். எனினும் அதுகாறும் அவர் அதை ரேவதியிடத்தே கண்டதில்லை. அன்றைக்கு அதையும் பார்த்துவிட்டார்.

ஆனால் அப்போது மயூரன் நிலை எப்படி இருக்கிறதோ? அவர் அவனைப் பார்த்து ஒரு வருஷ காலம் ஆகிவிட்டதே. அந்த ஓராண்டுக்குள் எத்தனையோ மாறுதல்கள் நேரிட்டிருக்கின்றன. ஒருவேளை அவன் மனமும் வேறுபாடு அடைந்திருந்தால்? அதையே அவர் யோசித்தார்.

அவர் மனிதனுடைய மனத்தத்துவத்தை அறியாதவர் அல்லர். அத்தகைய காதல் திடீரென்று ஒரு நிமிஷத்தில் உண்டாகி வெளிப்படக் கூடியதன்று. காதலின் வித்து அவன் காதலிக்கும் பெண்ணை முதலில் கண்ட மாத்திரத்திலேயே முளைத்துவிடலாம். ஆனால் அது வளர்ந்து அழகுடன் வெளிப்படுவதற்கு நீண்ட நாள் ஆகும்.

அம்மாதிரியான ஆழ்ந்த காதல் ஒரு தரம் உண்டாகி விட்டால் அது பிறகு சாகாது. காதலை நித்திய ஜீவன் வரம் பெற்றதென்றே கூற வேண்டும். அதனையும் அவர் அறிவார்.

எனினும் மனிதனுடைய செய்கைகள் யாவும் உள்ளத்தே தோன்றும் உணர்ச்சி வசப்பட்டனவாகவே என்றைக்கும் இருக்க முடியாது. காலக்கிரமத்தில் தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த வேறுபாட்டை உணர்ந்து மயூரன் தன் மனத்தைக் கட்டுப்படுத்தி, வைராக்கியத்தால் அந்த ஆசையை வென்றிருந்தால் என்ன செய்வது என்றே மயங்கினார் அவர்.

ஜாதியைப்பற்றி வீரசர்மர் கவலை கொள்ளவில்லை. பல்லவ ராஜ வமிசத்தவர், தாங்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர்கள் என்றும், பூர்வத்தில்

அந்தணர்களாக இருந்து ராஜாங்கத்தை ஏற்ற பிறகு பிரம்ம க்ஷத்திரியர்களாக மாறியவர்கள் என்றும் கூறிக் கொள்வதை அவர் அறிவார். அதே போல் பிராமண சமூகத்தை உத்தாரணம் செய்வதற்காக அரசாங்கத்தை மேற்கொள்ள உத்தேசித்த மயூரனும் ஒரு காலத்தில் தன் பிராமண தர்மத்தைவிட்டு க்ஷத்திரிய தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவனே.

பிராமணன் ஒருவன் இதர ஜாதியிலிருந்தும் பெண்களைக் கொள்ளலாம் என்னும் சாஸ்திர விதியை அவர் அறிவார். மனம் ஒருமித்த காதலர்களுக்கிடையே ஜாதி மத வேற்றுமை இல்லை என்பதையும் அவர் நிச்சயமாக நம்பியிருந்தார்.

அதனுலேதான் அவர் ரேவதியைப் பாதுகாக்க வேண்டும் என்று ஸ்கந்தவர்மர் கேட்டுக்கொண்டபடி ஒப்புக்கொண்டார்.

ரேவதி எதிர்பார்த்தபடியே எல்லாக் காரியங்களும் நடைபெறவில்லை. மயூரனைக் காணும் சந்தர்ப்பம் கிட்டும் என்று நினைத்தாள் அவள். ஆனுல் மயூரனே தன் காட்டைவிட்டு வெளிக் கிளம்பாமல் அங்கேயே அடைபட்டுக் கிடந்தான். அவன் சர்வ சுதந்திரத்துடன் வெளிவரும் நாளைக் கணக்கிட்டு எண்ணிக் கொண்டிருந்தான்.

அதற்குப் பதிலாக மயூரனைப் பற்றிய செய்திகள் பலவற்றை அவள் அறிந்தாள். அவ்வப்போது ஸ்ரீசைலப் பக்கத்தே நிகழும் சம்பவங்களை அவள் உடனுக்குடனே தெரிந்துகொண்டாள். அவையன்றி அவளுக்கு மயூரன் பரிசயம் ஏற்படுவதற்கு முன்னரே--அவன் இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகள் பலவற்றையும் கேட்டுவந்தாள்.

அவற்றை வீரசர்மரும் அவர் மனைவியுமே கூறினர். வீரசர்மர், அவர் பத்தினி, ரேவதி ஆகிய மூவரையும்

ஒன்றாகப் பிணைத்து வைத்த பந்தம் மயூரன் பெயர் ஒன்றே அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை.

அவர்கள் மூவரும் சமூகத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்; வாழ்க்கைத் தத்துவம், நோக்கம் முதலிய எல்லாம் வேறு வேறானவை.

அதனால் அவர்கள் எதைப்பற்றிப் பேசிப் பொழுதைப் போக்குவது? எந்த விஷயத்தைப் பேசினாலும் சிறிது நேரத்திற்குள் அது மயூரனைப் பற்றியதாகவே மாறிவிடும். அந்தப் பேச்சு அவர்களை அந்த விஷயத்துக்கே இழுத்துவிடும்.

சாஸ்திர விசாரணையில் ஈடுபட்டிருந்த வீரசர்மர் அதன் காரணமாக அடிக்கடி வீட்டில் தங்காமல் வெளியில் போய் வருவார்; வீட்டில் இருக்கும் காலங்களிலும் பூஜை, பாராயணம் அல்லது சாஸ்திர விசாரணை ஏதாவது செய்துகொண் டிருப்பார். ரேவதியுடன் பேசுவதற்கே அவருக்குப் பொழுதில்லை.

அவர் அநேகமாக அவளுடன் பேசுவதெல்லாம் இரவில் படுக்கப் போவதற்குள் முன்னதாக அவளிடம் அன்றைய க்ஷேம லாபங்களை விசாரிக்கும் காலங்களிலேதான். அவர் அவளுடன் அதிகமாகப் பேச்சுக் கொடுக்க இஷ்டப்படாமலேயே வெளி வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு வந்தார் என்பது ஊன்றிப் பார்த்தால் அல்லாமல் விளங்காது.

பெரும்பாலும் பகல் வேளைகளில் தீக்ஷிதர் பத்தினியும் ரேவதியுமே தனியே இருப்பர். அந்தக் காலங்களில் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகவும் ஒருவர் மனத்தை ஒருவர் அறியவும் சந்தர்ப்பம் வாய்த்தது.

முதலில் பொழுது போவதற்காகத் தீக்ஷிதர் பத்தினி ஆரம்பித்தது பின்னர் வழக்கமாகப் போய் விட்டது. ரேவதிக்கு அவள் மயூரனின் இளமைப் பருவத்து நிகழ்ச்சிகளுள் இரண்டொன்றைச் சந்தர்ப்

பங்களில் எடுத்துச் சொல்லுவாள். அவற்றைக் கேட்டு மயங்கிய ரேவதி திரும்பத் திரும்ப அவற்றையும் இன்னும் வேறு சம்பவங்கள் பலவற்றையும் எடுத்துக் கூறும்படி தீக்ஷிதர் பத்தினியை வேண்டிக்கொள்ளுவாள். நாள் ஆக ஆக அவள் அந்த ஒன்றைத் தவிர வேறு எதையும் கேட்பதில்லை.

பேச்சுச் சுவாரசியத்தில் லயித்துப் பக்கத்தில் நடப்பவற்றையும் உணராமல் ரேவதி அந்தக் கதைகளைக் கேட்பதைத் தீக்ஷிதர் பத்தினி பல தடவை கவனித்திருக்கிறாள். திறந்த வாயை மூடாமலும் கண் இமைக்காமலும் உட்கார்ந்திருந்த அவளுடைய முகத்தில் தனியான பிரகாசம் ஒன்றும் வெளிப்படும்.

ஒரு நாள் அவர்கள் வழக்கப்படியே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். மத்தியான்ன வேளை. நல்ல வெயில் உக்கிரமாகக் காய்ந்துகொண்டிருந்தது. விசிறி கொண்டு தனக்கு விசிறிக்கொள்ளும் பாவனையாகப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரேவதிக்கும் விசிறி ஆசுவாசப் படுத்திக்கொண்டிருந்தாள் தீக்ஷிதர் பத்தினி.

ஏதோ தற்செயலாகத் தலையைத் திருப்பி ரேவதியைக் கண்டாள். ஆனால் ரேவதியின் முகத்தில் தோன்றிய புன்முறுவலையும் கண்களினின்றும் வெளிப்பட்ட ஒளியையும் கண்டு அவள் திடுக்கிட்டு விட்டாள். மயூரனைப் பற்றிய பேச்சால் ரேவதி அடைந்து வந்த உற்சாகம் அந்தத் தோற்றத்தில் வெளிப்பட்டது. அப்போதுதான் விளங்கிற்று அவளுக்கு, ரேவதியின் உண்மை மனநிலை.

அவள் தன் தப்பை உணர்ந்துகொண்டாள். அவள் ரேவதியிடம் அவ்வளவு தூரம் பேச்சுக் கொடுத்திருக்கக் கூடாது. பாகுபோல உருகி, உருப்பெறுமல் இளகி நின்ற குழந்தை உள்ளத்தில் தீக்ஷிதர் பத்தினியின் வாக்குச் சாதுர்யம் ஓர் ஆசையைக் கிளறி விட்டதா? இல்லை. நீண்ட காலமாக அடங்கி, ரேவதிக்கே

தெரியாமல் உள்ளூறக் கிடந்த ஓர் உணர்ச்சி உருப் பெற்று வெளிவந்ததா? அப்போதும் ரேவதி அதனை உணரவில்லை. அதைக் கவனித்துப் பிறர் அறிந்து கொள்ள முடியுமே அன்றி, அவளுக்கு அது தெரியவில்லை.

தீக்ஷிதர் பத்தினி தன் செய்கைக்காகப் பெரிதும் வருந்தினாள். ஆயினும் என்ன? நடந்தது நடந்து விட்டது. இனி அதை மாற்ற முடியாது. ஆனால் மேலே செய்யும் வழி தெரியவில்லை.

அதனாலேதான் அவள் அன்றைத் தினமே இந்தச் செய்தியைத் தன் கணவரிடத்தில் தெரிவித்துக்கொண் டாள். இந்த விஷயம் முன்னரே அவருக்குத் தெரியும் என்பதையும் அதில் தவறு இருப்பதாக அவர் எண்ண வில்லை என்பதையும் அவள் அறியாள்.

அதனால் அவள் அவர் கூறியதைக் கேட்டதும் ஆச்சரியத்தால் திகைத்துவிட்டாள். அவளால் அதற் குப் பதில் ஒன்றும் கூற முடியவில்லை.

## 23. சமரஸ முயற்சி

நன்ருகக் கிழக்கு வெளுத்துச் சூரியன் உதயமாகும் சமயம். பக்கத்திலே தோன்றிய காட்சி அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. சக்கரவர்த்தி அதைக் கண்டு திடுக்கிட்டுவிட்டார்.

சுற்றிலும் அவர் ஒரே கோரத்தைத்தான் பார்த்தார். அவர் வீரர்கள் யாவரும் ரணகளத்தில் பிணமாகக் கிடந்தனர். கைபோனவர்களும் கால் போனவர்களும் தலைபோன முண்டங்களுமாகக் கிடந்தனர்.

எங்கே பார்த்தாலும் ஒரே உதிரப் பெருக்கு; போர்த்தொழிலில் எவ்வளவோ பயங்கரமான காட்சிகளைக் கண்டு கல்லாகச் சமைந்த மனத்தை யுடையவர்களையும் உருக்கிவிடும் தன்மை வாய்ந்ததாக இருந்தது அது.

மனிதருடைய பிணங்களைப் போலவே யானை குதிரைகளும் அங்கங்கே உயிரற்றுக் கிடந்தன.

கத்தியால் வெட்டுண்டவர்களே யன்றி அம்பு தைத்து அவதிப்பட்டு இறந்தவர்களும் பலர். படக் கூடாத இடங்களில் தைத்தவற்றைப் பிடுங்கி எடுக்க மாட்டாதவராகவும் அவை பாய்ந்தவுடன் ஏற்பட்ட வேதனையைப் பொறுக்க மாட்டாதவராகவும் பலர் தங்கள் பிராணனை விட்டனர்.

அந்தப் பிணங்களின் இடையிடையே இரண்டொரு ஜீவன்கள் சாகுந்தறுவாயில் கிடந்து தவித்தன. அவர்களுக்கு ஏற்பட்ட அடியால் அவர்கள் அசையும் சக்தியில்லாமல் உழன்றனர்; உதவி வேண்டுவதைத் தெரிவிக்கவும் அவர்களால் முடியவில்லை.

ரத்தப் பெருக்கால் நாவறட்சி யடைந்து பேசவும் அவர்களால் கூடவில்லை. பல சமயங்களில் அவர்கள் மயங்கிப் பிணக் குவியலின் நடுவே வேறுபாடு இல்லாமல் கிடந்தனர். சில சமயங்களில் உணர்வு கொஞ்சம் தெளிந்து வேதனை பொறுக்கமாட்டாமல் அசைந்து கொடுப்பர். அவர்களைத் தேடி உதவி செய்வோர் யார்?

* * *

இவ்வளவும் ஒரு நாள் இரவு வேலை. பல்லவ சேனையின் பெரும்பகுதி இவ்விதம் பாழாகி விட்டது. அவர்களுடன் போரிட்ட எதிரிகளைப் பற்றிய விவரத்தை நன்றாக அறிய இயலவில்லை. அவர்கள் எப்படி வந்து தாக்கினார்கள்; அவர்களிடையே ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்னும் விஷயங்கள் மர்மமாகவே இருந்தன.

அமாவாசைக் காலமானதால் இரவெல்லாம் ஒரே இருட்டு எங்கே பார்த்தாலும் சூழ்ந்திருந்தது. நடுக் காட்டில் பாடி இறங்கியிருந்த பல்லவ சேனை இராப் பொழுதைக் கழிப்பதற்காக அங்கங்கே காட்டுச் சருகுகளை அரித்துச் சிறு கும்பல்களாகக் குவித்துத் தீமூட்டி வைத்திருந்தனர். அந்தப் பிரகாசம் பாடியை நன்றாக ஒளிபெறச் செய்தது.

நள்ளிரவில் எதிரிகள் எங்கிருந்தோ திடீரென்று புற்றீசல் போல வெளிப்பட்டனர். அதுகாறும் அவர்கள் பக்கத்தே காடுகளில் மறைந்திருந்தார்கள் என்பதையாவது காட்டிடையே நடமாடிப் பல்லவ சேனையைக் கூர்ந்து கவனித்து வந்தார்கள் என்பதையாவது பல்லவ சேனாபதி அறியக்கூடவில்லை. சலசலப்புக்கொண்ட அந்த இடத்திலும் இருட்டிலும் எதிரிகள் தங்களைக் கொஞ்சமும் வெளிப்படுத்திக்கொள்ளாமல் ரகசியமாக வேவு பார்த்தது ஆச்சரியமாகவே இருந்தது.

ஆனால் என்றைக்குமே காடுகளில் வாழும் மக்களுக்கு அது சகஜந்தானே. அவர்களுடைய கூறிய பார்வை அந்த இருட்டிலும் ஊடுருவிப் பாய்ந்து செல்

னும். நகரத்தே வாழும் சாதாரண மக்களுக்குச் சிறிதும் கேட்காத மெல்லிய சத்தத்தையும் அவர்கள் காது கிரகித்துவிடும். புலி, சிங்கங்களை வேட்டையாடிப் பழக்கம் கொண்ட அவர்கள் பூனைபோல் நடக்கும்போது சலசலப்பே உண்டாகாது.

இந்தக் கலகம் ஆரம்பித்த நாள் முதல் இதே மாதிரித்தான் நடந்து வந்தது. என்றைக்கும் அவர்கள் மறைந்திருந்தே இரவு நேரங்களில் எதிர் பாராத வேளையில் வந்து தாக்கிப் பாழ்படுத்திச் சென்றனர். ஒரு நாளைக்காவது போர்க்களத்தில் வந்து நேருக்கு நேர் நின்று போர் புரிந்ததில்லை.

இதைக் கண்டு சக்கரவர்த்தி ஆரம்பத்தில் அருவருப்பையே கொண்டார். 'புரட்சிக்காரர்கள் எப்போதுமே இப்படித்தான். நேரில் வந்து போர் புரியும் தைரியம் இல்லாத பேடிகள்' என்றே நினைத்தார். காலம் செல்லச் செல்ல அந்த எண்ணம் மாறி வந்தது.

பல்லவ சேனையின் ஆள் பலம் அதிகமாகத்தான் இருந்தது. ஆயினும் என்ன செய்ய முடியும்? ராஜ தர்மத்துக்கு விரோதமாகப் போர் முழுதும் இராக் காலத்தில் அன்றோ நடந்து வந்தது!

சக்கரவர்த்தியின் மனம் ஒரேயடியாகக் குழப்பம் அடைந்து கிடந்தது. அவருக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. ஆரம்பத்தில் எப்படியாவது மயூரனை அடக்கி விட்டால் போதும் என்று எண்ணினார். அப்பால் அவன் மீது ஆத்திரமும் வைரமும் மூண்டு குரோத புத்தி ஏற்பட்டது. இப்போதோ அந்தப் பிணக் குவியலின் கோரக் காட்சியைக் கண்டு மேற்கொண்டு உயிர்ப் பலியிட அவர் விரும்பவில்லை.

* * *

'ஐயோ! ஓர் அல்ப விஷயத்துக்காக எவ்வளவு பேர்களை அழித்துப் போடுவது!' என்றே நினைத்தார். ஆனால் அதை நிறுத்தும் வழி?

முன்னர் ஒருதரம் ஸ்கந்தவர்மர் நேரில் சக்கரவர்த்தியைக் கண்டு வேண்டிக்கொண்டதை அவர் மறுபடியும் நினைக்கவே யில்லை. எங்கேயோ உள்ளே அடங்கிக் கிடந்த அந்த உணர்ச்சி இப்போது வெளிப்படடு அவர் அகக் கண்முன் வந்து நின்றது. அவர் வேண்டுகோளை மறுபடியும் அப்போது நேரில் கேட்பது போன்ற உணர்வும் ஏற்பட்டது.

முன்னரெல்லாம் வறட்டுக் கௌரவம் சக்கரவர்த்தியைப் பீடித்திருந்தது. 'இந்தப் பிச்சைக்காரப் பையனுக்கு நாம் பணிந்து விடுவதா? அப்போது நம்முடைய மானம், மரியாதை அந்தஸ்து முதலியவை என்னவாகும்?' என்று நினைத்தார்.

ஆனால் இப்போதோ நன்ருகச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டார். அந்தக் காலத்தில் அவன் வழிக்குப் போகாமல் இருந்திருந்தால் விபரீதமாக ஒன்றும் நடந்திருக்காது. ஆனல் இப்போதோ அவனுடன் சமரசம் செய்வதாக இருந்தால் அவன் கேட்பதையெல்லாம் கொடுக்கத் துணிய வேண்டும். ஆதியிலோ மயூரன் இப்போது வேண்டும் உரிமைகளைப் பற்றிக் கனவுகூடக் கண்டிருக்க மாட்டான்.

மயூரனை இப்போது சக்கரவர்த்தியால் அலட்சியம் செய்யவும் முடியாது. அவன் பெயர் நாட்டிலே வெகு சீக்கிரமாகப் பிரசித்தமாகிவிட்டது. இப்போது அவன் காட்டு அரண் வலிகொண்ட ஓர் இடத்தில் தக்க உதவியுடன் நிர்ப்பயமாக இருந்து வந்தான். அவனை அந்த இடத்தில் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அங்கே அவன் இஷ்டந்தான் செல்லும்.

அம்மட்டிலோ? அந்த இடத்தைக் காவல் புரிந்து வந்த பல்லவ அதிகாரியான பெரும்பாணனும் எதிரியுடன் சேர்ந்துகொண்டு விட்டான்.

இவற்றை யெல்லாம் தீர யோசித்த சக்கரவர்த்தி முன்னர் ஒரு சமயம் தாம் காதால் கேட்கவும் மறுத்த சமரச முயற்சியைத் தாமே முன்னின்று செய்யவும் தயாராக இருந்தார். ஆனல் அதை யார் மயூரனுக்கு எடுத்துச் சொல்லி அவன் மனத்தையும் திருப்பிப் பணியவைத்துப் பண்படுத்துவர்?

சக்கரவர்த்தி பழையபடி ஸ்கந்தவர்மரையே நினைத்தார். அவரைக்கொண்டே காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணினர். ஆனல் அவர் காஞ்சீபுரத்திலும் சக்கரவர்த்தியும் மயூரனும் ஸ்ரீசைலக் காட்டிலுமன்றோ இருந்தனர்! தள்ளாத வயதில் அவரைத் தலைநகரத்தினின்றும் அவ்விடம் வரவழைக்கலாமா என்றும் யோசித்தார்.

“இவ்வளவு காரியங்களுக்கும் மூலகர்த்தாவான ரேவதியைக் கொண்டே இதை முடித்துக்கொண்டால்......?”

திடீரென்று இந்த எண்ணம் உதித்தது சக்கரவர்த்திக்கு. உடனே அவருக்கு மனத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

ரேவதி பக்கத்திலேதான் இருந்து வந்தாள். அவளோடு மயூரன் போற்றிப் பணிந்து வந்த வீரசர்மரும் இருந்து வந்தார். அவர்களைக் கொண்டு முயன்றால் நிச்சயமாக ஏதோ ஒரு வழி பிறக்கும். ஆனல் அவர்கள் அதைச் செய்து முடிக்க ஒப்புக்கொள்வார்களா?

## 24. பிரிந்தவர் கூடினால்

மயூரன் அதனை எதிர்பார்க்கவில்லை. இவ்விதம் நேரிடும் என்பதை அவன் கருதவேயில்லை. அவனுக்கு அந்தரங்கமான குறவர் தலைவன் தன்னிடம் வந்து இந்தச் செய்தியைச் சொன்னபோதும் அவனுக்கு முதலில் அது விளங்கவில்லை.

"மயூரவர்மரை நேரில் கண்டு முக்கியமான விஷயங்கள் சிலவற்றைப் பற்றிப் பேச வேண்டும்" இதைச் சொல்லிக்கொண்டே அம் மூவரும் காட்டுக்குள் நுழைந்தனர்.

அவர்கள் மயூரனுக்கு வேண்டியவர்களே. விரோதிகள் அல்லர் என்பது அவர்களைப் பார்த்தவுடனேயே காட்டு மக்களுக்கு விளங்கிவிட்டது. அவர்களுடைய தோற்றம் அத்தகையதாக இருந்தது. ஆயினும் அவர்கள் அவ்விடம் வந்த விதம் அந்த எண்ணத்துக்கு மாறானதாக இருந்தது.

அவர்கள் காட்டின் எல்லைப்புறம் வரையில் பல்லக்கிலேதான் ஏறி வந்தார்கள். அந்தப் பல்லக்குகளைப் பல்லவ சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பணியாளர்களே சுமந்து வந்தனர். அவர்கள் மயூரனுக்கு வேண்டியவர்களானால் சக்கரவர்த்தியின் வேலையாட்கள் அவர்கள் பல்லக்கை எதற்காகச் சுமக்கவேண்டும் என்றே சந்தேகப்பட்டார்கள் காட்டு மக்கள். மயூரனுடைய பூர்வாசிரமத்தைப்பற்றி அந்தக் காட்டுமக்களுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. ஏதோ ஒரு சமயம் நல்ல ஸ்திதியில் இருந்திருக்க வேண்டும் என்பதை மட்டும் அறிந்திருந்தார்கள்.

தனக்கு அந்தரங்கமான இரண்டொருவருக்கும் பெரும்பாணனுக்குமே தன் பூர்வோத்தரங்களைப்பற்றி

மயூரன் சொல்லியிருக்கிருன். அவற்றை வெளியிட்டு விட வேண்டாம் என்று அவர்களே அவன் மன்ருடிக் கேட்டுக்கொண்டான். அதனுலேயே அவை ரகசியமாக நின்றுவிட்டன.

*   *   *

**வீ**ரசர்மரும் ரேவதியும் காட்டுக்குள் பல்லக்கில் செல்ல மறுத்துவிட்டனர். அவர்கள் மயூரனைப் பார்ப்பதற்காகவே காட்டுக்குப் புறப்பட்டு வந்தனர். எல்லைப்புறத்திலிருந்து அவன் இருக்குமிடத்தை அடைய இரண்டு காத தூரம் நடந்தே செல்ல வேண்டும்.

அவ்விருவரும் அதற்குத் தயாராக இருந்தார்கள். தீக்ஷித பத்தினியும் உடன் வந்திருந்தாள். தனியாகப் பின் தங்க மறுத்துவிட்டாள். தான் பிள்ளைபோலப் பாவித்து எடுத்து வளர்த்த செல்வக் குமாரனைக் காணக் கிடைக்கும் பாக்கியத்தை எண்ணி மகிழ்ந்தாள். அவன்மீது எத்தகைய அபவாதங்களும் அபாண்டங் களும் சுமத்தப்பட்டாலும் பாசம் விட்டுவிடுமா? அவன் நிஷ்களங்கமானவன் என்பது நன்ருகத் தெரிந்திருக் கையில் அந்தப் பாசத்தின் பிணைப்பு இறுகுமன்ருே?

அங்கே போவதால் அபாயங்கள் நேரிடலாம் என்பதை அவள் அறிவாள். தாங்கள் நினைத்துப் போவது போலவே எல்லாம் முடிந்துவிடாது என்றே அவள் எண்ணினுள். ஆயினும் மற்றவர்களுக்கு ஆவது போலவே தனக்கும் நேரிடட்டும் என்ற தீர்மானத்துட னேயே அவள் சென்ருள்.

காட்டின் எல்லையிலே அவர்கள் தங்களுடன் வந்த துணைவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். காட்டுக் குள் மலைக்குறவன் ஒருவனே அவர்களுக்கு வழிகாட்டிச் சென்ருன். அவனுடைய முரட்டு உருவத்தைக் கண்டு அவர்கள் பயப்படுவானேன்? தன்னைத் தேடி வருபவர் கள் பார்வைக்கு எப்படி இருந்தார்கள் என்பதைப்பற்றி

மயூரன் விவரமாக விசாரித்தான். யாராக இருக்கக் கூடும் என்பதை அவன் முதலிலேயே ஊகித்துவிட்டான். ஆயினும் நம்பிக்கை உண்டாகவில்லை. அதை நிவர்த்தித்துக்கொள்ளவே அவ்விதம் கேட்டுவந்தான்.

ஒருவேளை தான் காண்பது கனவோ என்றும் எண்ணினான்.

ஆசிரியருக்கு முன் சென்று பழைய வழக்கப்படி வணங்க வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அவனால் நடந்து செல்ல முடியவில்லை. அவன் படுத்துக் கிடந்தான்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் நடந்த இராத்திரிப் போராட்டத்தில் அவனுக்குக் காலில் பலமான அடி பட்டுவிட்டது. கொஞ்சகாலமாக அவன் சிறிதும் சோர்வில்லாமல் பம்பரம் போல நின்ற இடத்தில் நில்லாமல் சுற்றி யந்திரமாக வேலை செய்து வந்தான். அது எவ்வளவு நாள்தான் நீடிக்க முடியும்? அவன் பட்ட அடி அதற்கு ஒரு முடிவைக் கொணர்ந்தது.

பட்ட அடியால் தலைசுற்றி அவன் விழுந்து விட்டான். ஆயினும் அவன் சகாக்கள் உடனே அவனைக் குடிசைக்குத் தூக்கி வந்து படுக்கவைத்து சைத்யோபசாரங்கள் செய்தனர். அடி பலமில்லை. சொல்ப காயமே எனினும் அது அவனைச் சில நாட்கள் படுக்கையிலே தள்ளிவிட்டது. அவன் முன்போல எழுந்திருந்து நடமாடும் சக்தியற்றுக் கிடந்தான்.

அவன் ஊகம் சரியாகவே இருந்தது. அவர்கள் அந்தக் குடிசைக்குள் நுழையும்போது பொழுது ஏறி விட்டது. வழி நடந்த வேகத்தால் களைப்புற்று உடல் சோர்வடைந்திருந்தது. ஆனால் உள்ளத்தின் உற்சாகம் கொஞ்சமும் குறையவில்லை; பதிலாக அதிகமாகிக் கொண்டே வந்தது.

அவர்கள் வழி நெடுக இயற்கையின் காட்சிகளை அநுபவித்துக்கொண்டே வந்தனர். வீரசர்மருக்குத் தம் இளமை நினைவுகள் எழுந்தன. ரேவதியோ அந்தக் காட்சிகளை அதற்கு முன் கண்டதில்லை. அவளுக்குப் புத்தம் புதிய உணர்ச்சிகள் உண்டாயின. அவள் மயூரனையன்றோ காணச் சென்ருள்!

அவர்களுக்கு வழிகாட்டி வந்த குறவனும் மயூரன் புகழையே சொல்லிக்கொண்டு வந்தான். அந்தச் சுவாரசியத்தில் களைப்பு அவ்வப்போது தோன்ருமல் நீங்கினலும் குடிசையை அடைந்ததும் அது மேலிட்டது.

அவர்கள் வரும் செய்தியை மயூரன் சற்று நேரத்துக்கு முன்னரேதான் அறிந்தான். முன்னதாக ஓர் ஆள் ஓடோடியும் வந்து செய்தியை அறிவித்தான்.

வந்தவுடன் அவர்களை எப்படி வரவேற்க வேண்டும் என்பதைப் பலவிதமாக ஆராய்ந்து ஒரு முடிவு செய்து வைத்திருந்தான். ஆனல் அவர்களை நேரில் கண்டவுடன் ஏற்பட்ட உணர்ச்சி மேலீட்டினல் அந்த முடிவுகளெல்லாம் பறந்துவிட்டன.

அவன் அப்படியே கல்லாகச் சமைந்துவிட்டான். வந்தவர்களும் அவன் படுக்கையில் கிடந்த கோலத்தைக் கண்டு திகைத்தனர். அவர்கள் உள்ளம் உருகிவிட்டது. யாரும் உடனே வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை.

சட்டென்று மயூரன் தன்னைச் சமாளித்துக்கொண்டான். மிக்க சிரமத்துடன் படுக்கையைவிட்டு எழுந்து வீரசர்மருக்கும் அவர் பத்தினிக்கும் வணங்கினன்.

"தீர்க்காயுஷ்மான் பவ!"

வீரசர்மரால் அதற்குமேல் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அப்பால் அவர், "உன் உடம்பை அலட்டிக்கொள்ளாதே. பேசாமல் படுக்கையில் படுத்துக்கொள்" என்று சொல்லி அவனைக் கையைப் பிடித்து இழுத்துப் படுக்கையில் உட்கார வைத்தார்.

ரேவதி அதுவரையில் பேசாமல் பின்னால் நின்று கொண்டிருந்தாள். அவள் மயூரனுடன் எவ்வளவோ விஷயங்களைப் பேசவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தாள். ஆனால் நாக்கு எழவில்லை. வெட்கம் வேறு பிடுங்கித் தின்றது.

மயூரன் படுக்கையில் தள்ளாடிக்கொண்டே உட்கார்ந்தான். அப்போதுதான் கவனித்தாள் மயூரன் காலில் பட்டிருந்த அடியை அவள்.

"என்ன அது காலில்? பலமான அடியா?" என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கிப் பக்கத்தில் கீழே உட்கார்ந்து அவன் காலைத் தொட்டுப் பார்க்கச் சென்றாள்.

ஆனால் அவன் அவளை அதற்கு அநுமதிக்கவில்லை. "ஒன்றுமில்லை; எல்லாம் சரியாகப் போய்விட்டது. காலைக்கு நான் பழையபடி எழுந்துவிடுவேன்" என்று நிதானமாகப் பதில் சொன்னான். ஆயினும் அவன் குரல் அவனைக் காட்டிக்கொடுத்துவிட்டது.

"என்ன இது?" என்று கூறிக்கொண்டே திடுக்கிட்டு எழுந்தான் மயூரன். ரேவதி அதற்குள் வெட்டுண்ட மரம்போல் கீழே சாய்ந்துவிட்டாள்.

தன் காலைத் தொடவேண்டாம் என்று மயூரன் தடுத்தவுடன் ரேவதி பழையபடியே ஒதுங்கி நிற்க முயன்று எழுந்தாள். ஆனால் அவளால் கூடவில்லை. உணர்ச்சி மேலிட்டு உடல் படபடத்தது; தலை சுழன்றது. அவளால் நிற்க முடியவில்லை. அப்படியே தள்ளாடிக் கீழே சாய்ந்தாள்.

மயூரன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவளை வாரித் தூக்கித் தன் மார்பின் மீது அணைத்துக்கொண்டான். தீக்ஷிதர் பத்தினி திகைத்துவிட்டாள். உடனே ஓடிப் பக்கத்தில் இருந்த மண் குடத்திலிருந்து ஒரு சிறு கலயத்தில் தண்ணீரைக் கொணர்ந்து ரேவதியின்

முகத்தில் வாரி இறைத்தாள். வீரசர்மரோ அசை வற்று அங்கேயே நின்றுகொண் டிருந்தார்.

சிறிது நேரம் பொறுத்து ரேவதி கண்ணைத் திறந்து பார்த்தாள். தான் மயூரன் மடியில் படுத்து அவன் மார்பில் சாய்ந்து கிடப்பதைக் கண்டாள். தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள்.

"ரேவதி, எழுந்திருக்காதே. இப்படியே படுக்கை யில் சிறிது படுத்துக்கொள். கொஞ்சம் போனல் எல் லாம் சரியாகப் போய்விடும்" என்று கூறிவிட்டு, மயூ ரன் அவளை மெதுவாகத் தன் படுக்கையின்மீது கிடத்தி நகர்ந்து உட்கார்ந்தான். அவனல் எழுந்து வேற்றிடம்போக முடியவில்லை.

மயூரன் திரும்பிக் குடிசை வாயிற் புறத்தைப் பார்த்தான். அங்கே கானவன் ஒருவன் தயாராகக் காத்து நின்றான். எஜமான் பார்வையின் நோக்கத்தை அறிந்து அவன் தேன், தினைமா, காட்டுப் பழங்கள் முத லியவற்றைக் கொணர்ந்து மயூரன் முன்னிலையில் வைத்து விட்டுப் பின் நகர்ந்தான்.

"உங்களுக்கு வழி நடந்து வந்த களைப்பு அதிகமாக இருக்கும். முதலில் ஸ்நானத்தை முடித்து ஆகாரத்தைச் செய்துகொள்ளுங்கள். ஏதோ என்னல் ஆன அற்ப உபசாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்ற விஷயங்களைப் பிறகு பேசிக்கொள்ளலாம்" என்று வணக்கமாகக் கூறினன் மயூரன்.

## 25. முடிவு

மாலை இளம் வெயில் மனோ ரம்மியமாகக் காய்ந்து கொண்டிருந்தது. காட்டு மரங்களிடையே புகுந்து அது தன் செக்கர்வர்ணத்தைப் பரப்பி உலகத்தையே மயக்கிவிட்டது.

மலையருவியின் கரையிலே மயூரன், வீரசர்மர், அவர் பத்தினி, ரேவதி ஆகிய நால்வரும் கூடியிருந்தனர். ஆடவர் இருவரும் ஜலத்தின் அருகே உட்கார்ந்தனர். பெண்டிர்கள் சற்றுப் பின்புறமாக ஒதுங்கியிருந்தனர். அதிக தூரத்தில் அல்ல, சமீபத்திலே தான். நால்வரும் தாராளமாகப் பேசிக்கொண் டிருந்தனர்.

மயூரனுக்குக் கால் நன்ருகக் குணமாகிவிட்டது. அவன் முன்போலவே நடமாட ஆரம்பித்துவிட்டான்.

முதலில் வீரசர்மரே பேச்சை ஆரம்பித்தார்.

"மயூரா, உங்கள் இருவருக்கிடையே பாசம் இவ்வளவு தூரம் இருக்கும் என்பதை நான் முதலில் எண்ணவில்லை. நாளடைவில் எல்லாம் மாறிப்போகும் என்று நினைத்திருந்தேன். நான் கருதியது தவறு என்பது இப்போது விளங்கிவிட்டது. காலம் அந்தப் பிணைப்பை அதிகப்படுத்திவிட்டது என்பதை இப்போது உணர்ந்தேன்."

ரேவதிக்கு இதைக் கேட்டவுடன் முகம் சிவந்துவிட்டது; கோபத்தால் அன்று, வெட்கத்தால். அவள் புன்னகை ததும்பத் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்.

மயூரன் சட்டென்று பதில் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகக் கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தான்.

"ஆசிரியரே, தாங்கள் இப்படிக் கூறலாமா? நானும் நீண்ட நாளாக இதைப்பற்றி யோசித்து யோசித்து மனம் புண்ணுகிவிட்டேன். என்னுடைய நிலைமையை எண்ணிஞல் எனக்குச் சொந்தமானது என்று கூறக் கூடிய சொத்து ஒன்றும் இல்லை. நாளைச் சாப்பாட்டுக்கே என்ன செய்வது என்பதை அறியாமல் திண்டாடும் நான் அத்தகைய எண்ணங்களைக் கொள்ளலாமா? தவிர, என்னுடைய சுயேச்சையும் என்றைக்கு முடிவடையுமோ? இப்போதே சிறைப்பட்டாலும் படக்கூடுமே? அப்படியிருக்க..........."

மேலே அவன் வாக்கியத்தை முடிக்காமலே விட்டு விட்டான்.

"அதைப்பற்றிக் கவலைப்படுவானேன்? மரம் வைத்தவன் கட்டாயம் தண்ணீர் ஊற்றுவான்."

வீரசர்மர் அவனுக்கு உற்சாகம் ஊட்டியே பேசி வந்தார். ஆயினும் தாம் வந்த காரியத்தை உடனே தெரிவிக்க விரும்பவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய மன நிலையைப் பக்குவப்படுத்திக்கொண்டே சொல்ல எண்ணங்கொண்டார்.

அவர் புறப்பட்டு வருவதற்குமுன் சக்கரவர்த்தியையே நேரில் பேட்டி கண்டு எல்லா விஷயங்களையும் விவரமாகப் பேசிவிட்டே வந்தார். சக்கரவர்த்தியின் மன நிலையையும் அவர் எவ்வளவு தூரம் மயூரனை மன்னித்து ஆதரவளிக்கத் தயாராக இருந்தார் என்பதையும் நன்ருக அறிந்துகொண்டார்.

மயூரனை எதிரியாகப் பாவிப்பதைக் காட்டிலும் நண்பனுகக் கொள்வதிலே நாட்டுக்குப் பலவிதமான நன்மைகள் உண்டு என்பதைச் சக்கரவர்த்தி தெரிந்து கொண்டார். அவனுடைய திறமை நன்ருக வெளியாய் விட்டது. அதுகாறும் அவன்மீது சாற்றப்பட்ட குற்றங்

கள் எல்லாவற்றையும் மன்னித்து அவன் யதேச்சாதிகாரியாக அதிகாரம் செலுத்தி வந்த அந்தக் காட்டுப்பிரதேசத்துக்கு அவனேயே அரசனுகவும் முடி சூட்ட அவர் சம்மதித்தார். இதனை வீரசர்மர் எடுத்த எடுப்பிலேயே மயூரனுக்குச் சொல்லிவிடலாமா? உணர்ச்சிப் பெருக்கால் ஏதாவது விபரீதம் நேரிட்டால் என்ன செய்வது என்றே மறைத்து வைத்துக் கொஞ்சங் கொஞ்சமாக உரைத்தார்.

மயூரனும் அதை ஏதோ ஒரு விதமாக உணர்ந்திருந்தான் என்றே சொல்ல வேண்டும். அவன் உள்ளம் சந்தோஷ உணர்ச்சியால் பூரித்துக் கிடந்தது.

"தாங்கள் கூறியபடியே நடக்கச் சித்தமாக இருக்கிறேன்."

இதைக் கூறிவிட்டு மயூரன் முன்போலவே மௌனமாக இருந்தான். வீரசர்மர் என்ன நினைத்திருந்தாலும் அவரால் அந்த மௌனத்தைத் தாங்க முடியவில்லை. உள்ளத்தே ஒன்று வைத்து வெளியே மற்ருென்று பேசத் தெரியாத அவர் எல்லாவற்றையும் வெளியே கொட்டிவிட்டார்.

"அப்படியானல் நான் கூறியபடி செய்கிறேன் என்று முதலில் உறுதி கூறு" என்று கேட்டார்.

மயூரன் தயங்கவே இல்லை. அப்படியே செய்து கொடுத்தான்.

"சரி, என்னுடைய முடிவு பின் வருமாறு: முதலில் இந்தக் கலகத்தை நிறுத்திவிட வேண்டும். சம்பிரதாயத்தை ஒட்டி நீ பல்லவ சக்கரவர்த்திக்குப் பணிந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் உன்னைக் கட்டாயம் மன்னித்து, இந்தப் பிரதேசத்தின் அதிபதியாக உன்னையே நியமித்துவிடுவார். அப்பால் நீ ரேவதியை உன் வாழ்க்கைத் துணைவியாக

ஏற்றுக்கொண்டு, எந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வளவு கஷ்டங்களை அநுபவித்தாயோ, அவற்றை உண்மையில் நடத்திக் காட்டி உன் பராமரிப்புக்குள் அடங்கிய இந்தக் காட்டு மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அளிப்பாயாக. அதற்குமேல் ஈசுவரன் உன்னைக் காப்பான்.''

இதைக் கூறியபோது வீரசர்மருக்கே உணர்ச்சி தாங்கவில்லை. மயூரன் தன் சம்மதத்தை உணர்த்தித் தலைகுனிந்து வாய்பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

தூரத்தே காட்டு மக்கள் எழுப்பிய சங்க நாதமும் வெற்றி முரசின் ஒலியும் காற்றிலே மெல்ல மிதந்து வந்து வீரசர்மர் கூறியதை ஆமோதிப்பதே போல் அவர்கள் உள்ளத்தே சந்தோஷப் பெருக்கை ஊட்டின.

முற்றும்

DR. T. P. M. LIBRARY.

# கலைமகள் வெளியீடுகள்

**பிரதிமா நாடகம்** — ரூ. 1-0-0

பாஸ மகாகவி: ஹரிஹர சாஸ்திரி

*பாஸ மகாகவியின் கற்பனையில் உதயமான ராமாயண நாடகம்*

**ஸ்வப்ன வாசவதத்தம்** — ரூ. 0-12-0

பாஸ மகாகவி: ஹரிஹர சாஸ்திரி

*வாசவதத்தையைப் பிரிந்து அவள் இறந்து விட்டாள் என்று வருந்தும் உதயணன் அவளை அரைத் தூக்கததில் காண்கிறான். அவன் விழித்துக்கொள்ளும்போது அவள் மறைந்துவிடுகிறாள். காதலின் பல வேறு நிலைகளை விவரிக்கும் அழகிய நாடகம்.*

**சங்கமித்திரை** — ரூ. 0-12-0

'வேங்கடலக்ஷ்மி'

*அசோக சக்கரவர்த்தியின் குமாரி சங்கமித்திரை துறவு பூண்ட சர்பவத்தை உணர்ச்சி ததும்பச் சித்திரிக்கும் நாடகம்.*

**காளி** — ரூ. 0-12-0

ந. பிச்சமூர்த்தி

*ஒரு லட்சியவாதிக்கு எற்படும் இடைஞ்சல்கள், அவற்றை அவன் எவ்விதம் வெல்கிறான் என்பதை விளக்கும் நாடகம்.*

---

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை-4.

## இந்த ஆசிரியர் எழுதிய வேறு நூல்கள்

**சின்னதேவி (நாடகம்)**

ரூ. 0 12 0

அரசியலையும் அன்பையும் பிணைத்துச் சாம்ராஜ்யம் சீரழியாமல் இருக்கக் காதலைத் தியாகம் செய்த தாசியின் மனமுருக்கும் சித்திரம்.

**ராஜசுந்தரி (நாடகம்)**

ரூ. 0 12 0

குந்தவையின் புதல்வன் நரேந்திரனும் ராஜேந்திர சோழனின் மகள் ராஜசுந்தரியும் நெருங்கிப் பழகுகிறார்கள். ராஜசுந்தரியின் காதல் எப்படி முடிகிறது என்பது படித்து ரஸிக்க வேண்டிய விஷயம்.

## எங்கள் புதிய வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| குங்குமச் சிமிழ் | ரூ. | 2 | 8 | 0 |
| ஆர்வி | | | | |
| நல்ல பிசாசு | ரூ. | 2 | 8 | 0 |
| ஆனை ஸ்ரீ. குஞ்சிதபாதம் | | | | |
| கன்னியின் கனவு | ரூ. | 2 | 4 | 0 |
| கி. சந்தானம் | | | | |

### குழந்தைகளுக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சின்ன ராஜா | ரூ. | 0 | 12 | 0 |
| வாசகன் | | | | |
| ஜக்கு | ரூ. | 0 | 8 | 0 |
| ஆர்வி | | | | |
| குளிகைத் தீவு | ரூ. | 0 | 4 | 0 |
| ஆர்வி | | | | |

கலைமகள் காரியாலயம், சென்னை-4.


1459